
OCTOBER 1934



# செங்குந்த மித்திரன்

ஒன்று பட்டாலுண்டு வாழ்வே
ஒற்றுமை நீங்கிடி லனைவர்க்கும் தாழ்வே




இந்தி ரன்றனை விரகினன் மாயவன் எவினன் வழங்கல் நீ—பாரதம்
(590-ம் பக்கம் பார்க்க)

—பி. செ. மாணிக்கவாசக முதலியார்.
:—தி. நா. சபாபதி முதலியார்.

A. JAGANNATHACHA

N34.8.10
208450



# ஒட்டக்கூத்தர்

## ஜீவகாருண்ய சன்மார்க்க சபை

விழுப்புரத்திற்கடுத்த கல்லாலம்பூண்டி என்னும் கிராமத்தில் ஸ்ரீலஸ்ரீ திருஞான சிவ யோக முருகானந்த சுவாமிகள் கவிச்சக்கரவர்த்தி ஒட்டக்கூத்தர் பெயரால் பல அன்பர்கள் உதவுகின்ற பொருளைக்கொண்டு ஒரு திருமடம் கட்டிவருகிறார்கள். சென்ற வைகாசி மாதம் ஷை மடத்திற்கு அஸ்திவாரம் போடப்பட்டது. கூடிய சீக்கிரம் மடத்துக் கட்டடம் பூர்த்தியாகுமென எதிர்பார்க்கப்படுகிறது.

# செங்குந்த மித்திரன்

தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கத்தின்
மாத வெளியீடு

ஆசிரியர் : பி. சே. மாணிக்கவாசக முதலியார்.

| | | |
|---|---|---|
| தொகுதி—௮ | பவ ௵ ஐப்பசி ௴ | பகுதி ௰ |

## உள்ளடக்கம்

பத்திரிகாசிரியர் முன்னுரை ... 558
நினைவுக் குறிப்புகள் .... 563
மதிப்புரை ... 567
முனிஸிபல் தேர்தல்களில் செங்குந்தர் வெற்றி .... 569
செங்குந்த மித்திரன் பரம்பரைச் சந்தா ... 570
யார் கெட்டிக்காரர் ... 574
இயற்கையைத் தன் அடிப்படுத்தும் மனித வுயிரின் மாண்பு 575
ரோம நாட்டின் தூய வீரன் ... 578
பெண்களின் எதிர்காலம் ... 580
எனது அதிர்ஷ்டம் ... 582
சுற்றந் தழால் ... 585
மாங்கல்யத் தேங்காய்க்கு மஞ்சள் இல்லை ... 587
இரவி மைந்தன் வள்ளன்மை ... 589
இலங்கையில் செங்குந்தர் எப்போது குடியேறினர்? ... 592
அது என்ன? ... 594
செங்குந்த யாத்திரைவாசி ... 595
அதிசயம், அற்புதம், ஆச்சரியம் ... 598
விகடத் துணுக்குகள் ... 601
நமது தபால் பெட்டி ... 604
தமிழ் அணங்கு ... 606
வர்த்தமானம் ... 608
ரொக்கப் பரிசு : போட்டிப் பந்தயம் ... 613
நன்கொடைகள் ... 616
மாகாண புத்தகசாலை ... 618

208450
சென்னை-600 008

உ

ஓம்

# பத்திரிகாசிரியர் முன்னுரை

காமி யத்த ழுந்தி யிளையாதே
காலர் கைப்ப டிந்து மடியாதே
ஓமெ ழுத்தி லன்பு மிகவூறி
ஓவி யத்தி லந்த மருள்வாயே
தூம மெய்க்க ணிந்த சுகலீலா
சூர னைக்க டிந்த கதிர்வேலா
ஏம வெற்பு யர்ந்த மயில்வீரா
ஏர கத்த மர்ந்த பெருமாளே.

—அருணகிரிநாதர்.

“ஒரு நல்ல வார்த்தை சொல்லடி, மாரியாத்தா! மகமாயி! மகா ஜோதி! நல்ல காலம் பிறக்குதுன்னு ஒரு நல்ல வார்த்தை சொல்லடி.”

உடுக்கை ஓசையால் என்னைத் தூக்கத்தினின் றெழுப்பிய குடுகுடுப்பாண்டியின் இந்த நல்ல வார்த்தைக்காக—நல்ல காலம் பிறக்குதுன்னு கூறிய* இந்த நல்ல வார்த்தைக்காக அவனுக்கு நான் ஆற்றக் கூடிய கைம்மாறு யாதெனத் தோன்றவில்லை.

‘என்ன ஐயா விந்தையா யிருக்கிறது. குடுகுடுப்பாண்டிகள் ஒவ்வொருவரும் இப்படித்தானே கூறுவது வழக்கம். அதை என்னமோ பிரமாதப்படுத்துகிறீர்களே’ என்று நீங்கள் சொல்லக் கூடும்.

அவன் சொன்ன வார்த்தைகளின் அருமை எனக்கல்லவோ தெரியும். நீங்கள் என்ன சொன்னாலும் சரி. எனக்கு மட்டும் அவன் இருக்கும் திக்கு தெரியுமானால், அந்த திக்கை நோக்கி நான் சாஷ்டாங்கமாய்த் தண்டம் சமர்ப்பித்தே தீருவேன்.

சோதிடனால் ஒன்றையும் நமக்காகப் புதிதாக வருவிக்க முடியா தென்பதை அறிந்திருந்தும், வரப்போகும் உண்மை விஷயங்களைத் தெரிந்து கூறுவதற்காக அவனை நீங்கள் போற்றிப் புகழ்வதில்லையா? அது போன்று நல்ல வார்த்தைகளால் எதிர் கால மகிழ்ச்சியை முன்னதாகத் தெரிவித்தவனுக்கு நான் நன்றி பாராட்டினால் நீங்கள் ஏன் அதற்குக் குறுக்கே நிற்கவேண்டும்?

குடுகுடுப்பாண்டி என்னைத் தூக்கத்தி லிருந்து விழித் தெழச் செய்து ‘நல்லகாலம் பிறக்குதுன்னு ஒரு நல்ல வார்த்தை



சொல்லடி’ என்று சொன்ன அதே நாளில், வெகு நாட்களாய் நாமனைவரும் எதிர்பார்த்திருந்த ஒரு பெரும் பலன் கிட்டுவதற் குரிய அறிகுறிகள் காணப்படுவதா யிருந்தால் நான் அவனைப் போற்றாதிருக்க முடியுமா? காகம் ஏறவும் பனம் பழம் விழவும் சரியாக இருந்தாலும், பசிக் கொடுமையினால் அற்ப ஆகாரம் ஏதாவதொன்று கிடைக்குமா வென எதிர்பார்த் திருந்த ஒருவன் அந்தச் சமயம் காகத்தை எப்படி போற்றா திருக்க முடியும்?

நல்ல காலம் என்றால் யாருக்கு என்று நினைக்கிறீர்கள். இந்தியாவின் விடுதலை—காங்கிரஸின் கோரிக்கையாகிய பூரண சுயராஜ்யம் இந்தியர்களுக்குக் கிடைத்துவிட்டதென்று எண்ணி விடாதீர்கள். அது அவ்வளவு சுலபத்தில் கிடைத்துவிடக் கூடிய தல்ல. நம்முடைய உள்ளங்களில் புகுந்துகொண்டு நம்மையெல்லாம் ஆட்டி வைக்கும் காந்தி யடிகளார் வெள்ளையரின் உள்ளங்களில் புக அவர்கள் இலேசில் இடங்கொடுக்கமாட்டார்கள்.

‘நான் அவருக்குப் பேட்டி யளித்து, என் மனம் தளர்ந்து போகுமாறு செய்துகொள்ள விரும்பவில்லை’ என்று, நமது மாட்சிமை மிக்க—ராஜ கெம்பீர உவெல்லிங்டன் பிரபு—வைஸ்ராய்த் தெய்வம், மகாத்மாவுக்கு பேட்டியளிக்க மறுத்தபோது சொன்ன சொற்கள் உங்களுக்கு ஞாபக மிருக்கிறதா? இல்லையேல் இப்போது ஞாபகப்படுத்திக்கொள்ளுங்கள். வெள்ளையர்கள் எவ்வளவு முன்னெச்சரிக்கையாக இருக்கிறார்க ளென்பதை அந்த சொற்கள் தெள்ளத் தெளிய உணர்த்தும்.

நல்ல காலம் இந்தியர்களுக்கன்று. சுயராஜ்யம் அவ்வளவு சீக்கிரமாகக் கிடைக்காது என்றால், வேறு யாருக்கு நல்ல காலம்? மகாத்மா காந்தியடிகளுக்கு ஒரு வேளை நல்ல யோகம் உதயமாகிவிட்டதாக நினைக்கிறீர்களா? இல்லை, அதுவும் இல்லை. அவர் விஷயந்தான் இப்போது முழு மோசமாய்ப் போய் விட்டதே.

‘எமது உள்ளங்களைத் திருடிக்கொண்டு இப்படியா எம்மை ஆட்டிவைக்கிறீர்கள்? ஆகட்டும். அதற்கு இரட்டிப்பாக உங்களை நாங்கள் ஆட்டிவைக்கிறோம்’ என, மார் தட்டிக் கொண்டு வடக்கிலும் தெற்கிலும் அநேக மேதாவிகள் புறப்பட்டு திக்விஜயம் செய்து வருகிறார்க ளென்பதும், மகாத்மாவின் கொள்கைகளுக்கு முற்றும் முரணாக—எட்டிக்குப் போட்டியாக காங்கிரஸ் இன்று நடத்தப் படுகிற தென்பதும் வெட்ட வெளிச்சமான பின்பு, நான் கூறியா நீங்கள் தெரிந்து கொள்ளப் போகிறீர்கள்.

‘சட்டசபைப் பிரவேசத்தால் ஒன்றையும் சாதித்துவிட முடியாது. அதனைப் பகிஷ்கரிப்பதுதான் ஆண்மையான

செய்கையாகும்' என மகாத்மா கூறினால் 'இல்லவே இல்லை. சட்டசபையின் வாசற்படிக்குள் நுழைவதுதான் ஆண்மை. நுழைந்தவுடன் வெள்ளையர்களை அடிபணியச் செய்து, தமது மூட்டைகளைக் கட்டிக்கொண்டு புறப்பட்டுப் போய்விடுமாறு செய்துவிடலாம்' என்று சத்திய மூர்த்திகளும், ராஜகோபாலாசாரிகளும், பிரசாதர்களும் கூறுகிறார்கள்.

'கதர் கட்டாதவர்களை காங்கிரஸ் அங்கத்தினர்களாகச் சேர்த்துக்கொள்ளக் கூடாது' என்று அவர் சொன்னால், 'அது பைத்தியக்காரச் செய்கை; உங்களைப் போன்று அனைவரும் மூன்று முழ முண்டு உடுத்திக்கொள்ளும் காலம் வரும்போது இந்த நிபந்தனையை ஏற்படுத்திக் கொள்ளலாம்' என்று ஒரு சிலர் சொல்லுகிறார்கள்.

'காங்கிரஸ் அங்கத்தினர்கள் கதர் நூலையே சந்தாவாகச் செலுத்தவேண்டும்' என்று அவர் சொன்னால், 'அதெல்லாம் முடியாத காரியம். நான்கணாவை விசிறி எறிவதைவிட்டு, மணிக்கணக்காக உட்கார்ந்து நூல் நூற்றுத் தரவேண்டுமாம்' என்று இவர்கள் கூறுகிறார்கள்.

'ஒரு பிள்ளையா யிருந்தாலும் உத்தமனா யிருந்தால் போதும். காங்கிரஸ் அங்கத்தினர்களின் எண்ணிக்கையைக் குறைத்து அதன் ஆணைக்குக் கட்டுப்பட்டவர்களைமட்டும் வைத்துக் கொள்ளவேண்டும்' என அவர் சொன்னால் 'உத்தமர் யார்? அதமர் யார்? தாகத்திற்கு உதவா விட்டாலும் சமுத்திரம் என்ற பேரைப் பெற்றிருப்பதுதான் நல்லது. தூய நிரையுடைய சிறிய குட்டையாக காங்கிரஸைச் செய்துவிடக் கூடாது' என்று இவர்கள் கூறுகிறார்கள்.

என்ன செய்வார் பாவம். 'பிள்ளைகள் மிஞ்சிப் போய்விட்டார்கள். இனி நாம் பக்குவமாய் விலகிக் கொள்வதுதான் கௌரவம்' என உத்தமத்தந்தை நினைப்பது போன்றே, மகாத்மா காந்தியும் தூர விலகிப் போய்விடுவதெனத் தீர்மானித்து விட்டார்.

வேறு யாருக்கு நல்லகாலம்? நான் சொல்லத் தொடங்குவதற்குமுன் அளவு கடந்து ததும்பி வழியும் சந்தோஷமானது என் உள்ளத்தில் வந்து அடைத்துக் கொள்ளுகிறது. கொஞ்ச நேரம் நிதானியுங்கள்.

நாம் எட்டு வருஷங்களுக்கு முன் பெற்றெடுத்த—பாலாரிஷ்டங்கள் ஒன்றும் நெருங்காதபடி இன்றுவரை போற்றி வருகிற—சென்ற ஆண்டில் நேர்ந்த பேராபத்தை வள்ளலாரின் வண்மையால் விரட்டி யடித்துக் கண்ணுங் கருத்துமாய்க் காத்து



வளர்த்துவருகிற—குருவுக்குக் குருவாய், தந்தைக்குத் தந்தையாய், தாய்க்குத் தாயாய், சேய்க்குச் சேயாய், நண்பனுக்கு நண்பனாய் விளங்கி நலம்பல புரிந்து வருகிற ஆப்த நண்பன், குலச்செல்வன், மெய்ஞ்ஞானகுரு செங்குந்த மித்திரனாம் சீராளனுக்கு நல்ல காலம், அதிர்ஷ்ட அறிகுறி தோன்றியிருக்கிறதென்பதை எண்ணுந் தோறும் எமதுள்ளம் இன்பக் கடலில் திளைத்து விடுகிறது. எமதுள்ளம் மட்டுமா? இதைக் கேள்விப்பட்ட நீங்களனைவரும் சந்தோஷ ஆரவாரம் செய்வதை எமது மனக்கண்களால் நாங்கள் நன்கு உணர்கிறோம்.

குடுகுடுப்பாண்டியின் நல்ல வார்த்தைகளைக் கேட்க நேர்ந்த அதேநாள்மாலை 3மணி—தன்னலத் தியாகி—சிறந்த பெரியார்—வாலாஜாபாத் இந்துமத பாடசாலையின் அதிபர்—மாசற்ற மணியனையார் திரு. W. T. மாசிலாமணி முதலியாரவர்கள் நமது காரியாலயத்துக்கு வந்தனர். 'இன்று நாள் நன்றா யிருக்கிறது. புறப்படுங்கள்' என்றார். 'எதற்கு?' என்றோம். 'மித்திரனை நிலைபெறுத்த பரம்பரைச் சந்தா சேர்ப்பதற்கு' என்று கூறிக்கொண்டே காரியாலயத்தி லிருந்த அனைவரையும் வலிந்திழுத்துச் சென்று தமது காரில் ஏற்றி, மைலாப்பூர், சைதாப்பேட்டை முதலிய இடங்களுக்கு அழைத்துச் சென்றார்கள். ஆங்கு, எதிர்பார்த்ததற்குமேலாகவே உதவிகிடைத்ததால் உற்சாகமும் ஊக்கமும் எங்களுக்கு மிகுந்தது. சைதாப்பேட்டை நகராண்மைக் கழக அங்கத்தினரும், பெஸ்ட் பளையகாட் கம்பெனியின் பங்காளரும், நமது தலைச்சங்க உறுப்பினருமாகிய திருமிகு T. V. அருணாசல முதலியாரவர்கள் ரூபா இருநூற்றைம்பது கொடுத்து, மித்திரனின் பெரும் போஷகராகச் சேர்வதாக மிக்க மகிழ்ச்சியுடன் தெரிவித்தார்கள். மற்றும் அதே கம்பெனியைச் சேர்ந்த இதர பங்காளர்களும் பெரும் போஷகர்களாகச் சேர விழைந்து அடுத்தவாரத்தில் அவ்வாறே சேர்வதாக அறிவித்தார்கள்.

காஞ்சீபுரம், தக்கோலம், மின்னல், சோளிங்கபுரம், சத்துவாச்சாரி ஆகிய இடங்களில் பல அன்பர்கள் பரம்பரைச் சந்தாதாரர்களாகச் சேர்ந்து மிக்க உற்சாக மூட்டினார்கள். காஞ்சீபுரம் தேக்குமர வர்த்தகரும் பேரபிமானியுமாகிய திரு. ந. கச்சபாலய முதலியார் அவர்களும், சத்துவாச்சாரி பஞ்சாயத்து போர்ட் தலைவரும், பிரபல வர்த்தகருமான திரு. T. K. சுக்கிரமணிய முதலியார் அவர்களும், சிறந்த குலாபிமானி திரு. விருபாக்ஷி, மு. குப்புசாமி முதலியார் அவர்களும் தனித்தனி நூறு ரூபாய் தர இசைந்து போஷகர்களாகச் சேர்ந்துள்ளார்கள். திருப்பத்தூர், குடியாத்தம் ஆகிய இடங்களில் மிகப் பெருந் தொகைகள் உபகரிக்கப்படுமென்று, திருவாரூரில் நடை

பெற்ற நமது நான்காவது வர்த்தகர் மகாநாட்டைத் திறந்து வைத்த குலாபிமானப் பெரியாரும், மாஜி தாலூக்கா போர்ட் தலைவரும், மாஜி சேர்மனும், வட ஆற்காடு ஜில்லா போர்ட் அங்கத்தினரும், திருப்பத்தூர் முனிஸிபல் கவுன்ஸிலரும், பிரபல மில் ஏஜண்டுமான பேரறிஞர் ஸ்ரீ, கா. அ. சண்முக முதலியார் அவர்களைச் சந்தித்துப் பேசியபோது, அவர்களது முகவிலாசத்தி லிருந்து நாங்கள் நன்கு உணர்ந்து பெரு மகிழ்வெய்தினோம்.

மித்திரன் வளர்ச்சிக்காக உறுதுணையாய் நின்று போஷகர்களாகவும், பெரும்போஷகர்களாகவும், பரம்பரைச் சந்தாதார்களாகவும் சேர்ந்து, தமது நிறைந்த அபிமானத்தைக் காட்டுகிற இக்குலாபிமானக் குரிசிலர்களனைவருக்கும் தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கத்தின் சார்பாக நமது ஆழ்ந்த நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

குன்றா தோங்கி வளர்ந்து எக்காலத்தும் சமூக நலனுக் குழைத்து வருமாறு மித்திரனை நிலை பெறுத்த ஒரு பெரு நிதியம் திரட்டவேண்டு மென்பது, செங்குந்தரனைவருக்கும் நெடு நாட்களா யிருந்த ஒரு எண்ணமே யாயினும், இந்தச் சமயத்தில் அம்முயற்சியில் புகுமாறு எங்களை வலிந்திழுத்துத் தாமும் உடனிருந்து உழைத்து வரும் வாலாஜாபாத் திரு. W. T. மாசிலாமணி முதலியார் அவர்களுக்கும், நிதியம் திரட்டுதற்கென வெளியில் போகும்பொழுதெல்லாம் தமது காரை தந்துதவுவதாக உறுதி கூறி அவ்வாறே அளித்தும், காஞ்சிபுரத்திலிருந்த ஞான்று உடனிருந்து உதவி புரிந்தும், நமது இயக்கத்தில் எப்பொழுதும் பேரபிமானம் காட்டியும் வருகின்றவரும், திரு. மாசிலாமணி முதலியார் அவர்களது தமையனருமாகிய பெருந்தகையாளர் W. T. பஞ்சாட்சர முதலியார் அவர்களுக்கும், தாம் ஒரு பெருந்தொகை வழங்குவதாகக் கூறியதோடமையாது, தமக்குள்ள பல வேலைகளையும் ஒரு புறம் ஒதுக்கி விட்டு பல ஊர்கட்கும் உடன் வந்து உபகரித்த சீரிய அறிஞர் தக்கோலம் செல்லப்பா அவர்களுக்கும், சதா மித்திரன் வளர்ச்சியைப் பற்றியே எண்ணி அது பற்றியே உழைத்து வருபவரும், பரம்பரைச் சந்தாதாரர்களைச் சேர்ப்பதற்கு உடனிருந்து உதவி புரிபவருமாகிய திரு. மா. அ. கனகசபை முதலியாரவர்களுக்கும் செங்குந்த உலகத்தின் நன்றியும் வாழ்த்தும் உரியதாகுக.

பெரும் போஷகர், போஷகர், பரம்பரைச் சந்தாதார் பற்றிய குறிப்புகள் மற்றோரிடத்தில் வெளியிடப்பெற்றிருக்கின்றன. அப் பிரிவுகளில் இயன்ற ஒன்றில் சௌகரியம் நிறைய, வாய்க்கப் பெற்றவர்கள் சேர்ந்து, மித்திரன் மிக்க சிறந்த முறையில் பரந்த நோக்கமும், விரிந்த பொருளுங் கொண்டு என்றும் நின்று நிலவத் துணை புரியுமாறு வேண்டுகிறோம்.

எல்லாம் வல்ல முருகன் இம் முயற்சிக்கு உறுதுணை புரிய இறைஞ்சி வழிபடுகின்றோம்.

பரம்பரைச் சந்தாதார் சேர்க்கும் பொருட்டு வெளியூர்களில் சுற்றுப்பிரயாணம் செய்து வந்தமையால், மித்திரன் இம் மாதத்தில் ஒருவாரம் தாமதித்து வெளியிட நேர்ந்தமைக்கு மிக வருந்துகிறோம். வாசகர்கள் இதனைப் பொறுத்தருள்வார்களாக.

# நினைவுக் குறிப்புகள்

## நன்றிகெட்ட உலகம்

பிரிட்டிஷ் அரசாங்கத்திற்கு அசைக்க முடியாத ஒரு தூண் என்றால் நமது ஆகாகானைத் தவிர வேறு யாரைச் சொல்வது? அப்படிப்பட்ட அவர் 'ஓ பிரிட்டிஷ் தெய்வமே! எனக்கு ஆசையா யிருக்கிறது. ரொம்ப ரொம்ப ஆசையா யிருக்கிறது. ஒரு நாளைக்காவது சிம்மாசனம் ஏறிப் பார்க்கவேண்டுமென்று ஆசையா யிருக்கிறது. பிரஜைகளை எப்படி அதிகாரம் செய்வதென்று பரீட்சை செய்துபார்க்க ரொம்ப ஆசையா யிருக்கிறது. ஒரு குழி மண் கொடுங்கள். ஒரு சின்ன ராஜ்ஜிய மாகிவிடும். இந்த ஒரே ஒரு வரந்தான் நான் கேட்பது' என்று பல்லவியும் அனுபல்லவியுமாகப் பலதினங்கள் பாடிப்பார்த்தார் பல முறை சீமைக்கு ஓடி யலைந்தார். 'பிரிட்டிஷ் சர்க்காரை நானே சுமந்து நிற்கிறேன்' என விளம்பரம் செய்துப் பார்த்தார். காங்கிரஸ் கட்சியைப் பாதாளத்தில் அழுத்திவிடுவதாகப் பறைசாற்றினார். முஸ்லிம்களைத் தட்டிக்கொடுத்தார். ஆனால், இவற்றிற்கெல்லாம் அந்த பிரிட்டிஷ் தெய்வம் மசியவில்லை. கடைசியாக 'முடியாது' என வைசராய் பதில் கூறிவிட்டார்.

ஐயோ பாவம்! ஆகாகானுக்கே மசியாத அரசாங்கம் வேறு யாருக்கு மசியப்போகிறது. மனச்சோர்வு படாமல் மற்றொரு முயற்சி செய்து பார்க்குமாறு ஆகாகானுக்கு அறிவுறுத்துகிறோம்.

## கர்நாடகப் பேர்வழிகள்

நேயர்களே! ஒரு காதை கெட்டியாக மூடிக்கொள்ளுங்கள். மற்றொரு காதையும் மனதையும் நன்றாகத் தீட்டிக்கொள்ளுங்

கள். நான் சொல்லப்போவது மிக முக்கியமான விஷயம். ஒரு காதில் வாங்கியதும் மற்றொரு காதில் விடக்கூடிய தன்று.

'சலாம் மஹாராஜ், சலாம்; போய்வருகிறீர்களா?' என்று எலக்ஷன் ஆபீசர் வந்ததும் வராததுமாய் வழிகூட்டியனுப்பும் கர்நாடகப் பேர்வழிகள், இந்த இருபதாம் நூற்றாண்டில் இருப்பார்களாயின் அவர்களை என்ன செய்யலாமென நினைக்கிறீர்கள். உடனே அந்தமானுக்குக் கப்பலேற்றிவிட்டால் ஓட்டர்களின் பாடு பெரும்பாடுதான். கொஞ்சம் ஏமாந்து விட்டால் பின்பு சவரன்களும், பருப்பு மூட்டைகளும், நூறு ரூபாய் நோட்டுகளும், பட்டுச்சேலைகளும், கிடைக்கவே கிடைக்காது. முன்னதாகச் சொல்லிவிட்டேன்.

சென்ற மாதம் 18-ந்தேதி எலக்ஷன் ஆபீசர் லால்குடிக்குச் சென்று அபேட்சகர்களின் நாமினேஷன் பேப்பரை வாங்கினராம். மொத்தம் 12 ஸ்தானங்களுக்கு 12 அபேட்சகர்களே நாமினேஷன் பேப்பர்களைக் கொடுத்தார்களாம். இதைக் கண்டு எலக்ஷன் ஆபீசர் திடுக்கிட்டுவிட்டாராம். இப்படி ஒவ்வொரு ஊரிலும் நடந்தால் ஓட்டர்களை யார் சட்டை செய்வார்கள்? எலக்ஷன் ஆபீசர்களுக்குத்தான் என்ன வேலை இருக்கிறது? ஓட்டர்கள் ஜாபிதாவை பிரிட்டிஷ் அரசாங்கம் கஷ்டப்பட்டு தயாரிப்பதுதான் எதற்கு? எலக்ஷனால் நேரும் அடிதடிச் சண்டைகளும் ஆட்சேபனை மனுக்களும் இல்லாமற்போய், அதனால் வக்கீல்களின் வருமானமும் குறைந்து விடுமே. தகப்பனுக்கு மகனே போட்டி அபேட்சகராக நின்று ஒருவருக்கொருவர் வசைபுராணம் பாடிக்கொள்ளக்கூடிய இந்த நாகரீக உலகத்தில், 18 ஸ்தானங்களுக்கு 213 அபேட்சகர்கள் போட்டிபோடுவதனால் ஓட்டர்களின் கௌரவம் காப்பாற்றப்பட்டு வரும் இந்த 1934-ம் ஆண்டில், 12 ஸ்தானங்களுக்கும் 12 அபேட்சகர்களே நின்று, எல்லாருடைய கௌரவத்தையும் கெடுக்கும் அநாகரீகப் பேர்வழிகள் இருந்தால் அவர்களை உடனே ஏன் அந்தமானுக்கு அனுப்பிவிடக்கூடாது?

ஓட்டர்களே! இது பற்றி ஒரு மசோதாவை சென்னை சட்டசபையில் நிறைவேற்ற உடனே நீங்கள் முயற்சி செய்யுங்கள்.

## மடாதிபதிகளுக்கு சமர்ப்பணம்

சிறந்த பிரசங்கியார் ஒருவர் மேடைமீது ஏறினார். பேசத் தொடங்கியதும் அவரது மீசை தாளம்போடத் தொடங்கியது. முகம் செவந்து இரத்தம் பீரிட்டது. கண்கள் உருண்டு



திரண்டன. அவரது பேச்சைக் கேட்க ஆவலாகக் காத்திருந்த ஜனங்களின் முன்பு பல கேள்விகளை ஆத்திரத்துடன் அடுக்கிக் கொண்டேபோனார்.

'இழி தொழில்கள் எங்கே அதிகமாய்த் தாண்டவமாடுகின்றன? முன்னோர்களைப் பின்னோர் கொலை செய்யும் கொடுமையை எந்த இடத்தில் காணலாம்? சோம்பேறிக் கூட்டத்தாரின் சுக விலாஸ் யாது? டாம்பீக வாழ்வின் பிறப்பிடம் எங்கே? 'கற்பு' என்ற சொல்லே தலைகாட்ட முடியாத இடம் எது?'

இவ்வாறு பிரசங்கியார் கேள்விகளை அடுக்கிக் கோண்டே போகப்போக, அவரது கோபமும் ஆத்திரமும் மிகுந்து கொண்டே வந்தது. கூட்டத்தி லிருந்தோர் இன்னதென்று விளங்காமல் விழித்தனர்.

சிறிது நேரம் நிசப்தமா யிருந்தது. பிரசங்கியார் மீண்டும் பேசத் தொடங்கினார். அவர் கோபமும் ஆத்திரமும் சிறிது அடங்கியது. 'நான் இவ்வாறு பேசியதற்கு மன்னிக்க வேண்டுகிறேன். இந்தத் தீய செயலனைத்தும் ஒன்றாகச் சேர்ந்து வாழும் இடம் தமிழ்நாட்டு மடங்கள்தான். அவற்றிற்கு வளர்ப்புத் தாய்மார்களாக இருப்பவர்கள் மடாதிபதிகளே. இதை எண்ணும்போதுதான் எனக்கு அளவு கடந்த கோபமும் ஆத்திரமும் பொங்குகிறது' எனக் கூறினார்.

அதைக் கேட்டுக்கொண்டிருந்த ஜனங்களின் உள்ளமும் துடிக்கத் தொடங்கியது. 'மடங்கள் உண்மையில் மடங்களாய் (அஞ்ஞானங்களாய்) விட்டனவே. சமய மேம்பாட்டிற்காகவும், மொழி வளர்ச்சிக்காகவும் பொது ஜனங்கள் வழங்கிய செல்வம், டாம்பீகத்திற்கும், கொலைக்கும், இழிதொழில்களுக்குமாய்ப் போகின்றதே' என எண்ணி மனங் கலங்கினர்.

தமிழ் நாட்டு மடங்களில் பெரும்பாலானவை இந்த நிலையில்தான் இருக்கிறதென்பதை எவரும் மறுக்க முடியாது. ஆனால், சிற்சில சிறிய மடங்கள் இவற்றிற்கு முற்றும் மாறுபட்டுள்ளன. திருப்பாதிரிப்புலியூர் ஞானியார் மடாலயம் போன்ற மடங்கள் நல்லொழுக்க நெறிகளில், சமய வளர்ச்சித் துறையில், தமிழ்க் கலை மேம்பாடுறுமுறையில் காலத்தையும், செல்வத்தையும் செலவழித்து வருவது இங்கு மகிழ்ச்சியுடன் குறிப்பிடத் தக்க விஷயமாகும். என்றாலும், பெரிய மடங்கள் பலவற்றுள் மடாதிபதிகளின் உரிமைக்காகத் தகராறுகளும், போட்டிகளும், வழக்குகளும், கொலைகளும் நிகழ்ந்து வருவதையும், ஒழுக்கக்

கேடான செய்கைகள் அடிக்கடி நடந்து வருவதையும் நாம் கண்கூடாகப் பார்த்து வருகிறோம். மடாதிபதிகளுக்குப் பணம் கொடுப்பதோடு தங்கள் கடமை தீர்ந்துவிட்டதாகப் பொதுமக்கள் எண்ணிக்கொள்வதுதான் இந்தத் தீமைகள் மடங்களில் நிகழ்வதற்கு முக்கிய காரண மாகும். சமயத்தையும், மொழியையும் வளர்க்கவேண்டியதே தமது கடமை என்பதை மறந்து, போக போக்கியங்களில் மூழ்கி காலம் போக்கும் நமது மடாதிபதிகள், கிருஸ்தவப் பாதிரிமார்களைப் பார்த்தேனும் உணர்ச்சி கொள்ளாதிருப்பது பெரிதும் வருந்தத் தக்கதாகும்.

கிருஸ்தவ வேத சபையாரின் இவ்வாண்டு அறிக்கை, பாதிரிமார்கள் சமய வளர்ச்சிபற்றி ஆற்றிய கடமைகளை வெளிப்படுத்துகின்றது. சென்ற ஆண்டில் மட்டும் பைபில் பதினொரு புதிய பாஷைகளில் மொழிபெயர்க்கப்பட்டதாம். பத்து லட்சத்து தொண்ணூற்று மூவாயிரத்து மூன்று பைபில் பிரதிகள் வெளியிடப்பட்டனவாம்.

செல்வங் கொழித்த தமிழ் நாட்டு மடாதிபதிகளே! தமிழ் வேத மெனப் பலரும் போற்றும் திருவாசகத்தை எத்தனை பாஷைகளில் மொழிபெயர்த் திருக்கிறீர்கள்? எவ்வளவு பிரதிகள் அச்சிட்டு வழங்கினீர்கள்? என்னென்ன பாடசாலைகள் வைத்து நடத்துகிறீர்கள்?

தென்னாட்டில், மைசூர் சமஸ்தானத்தில், ஒரு ஜெயின மடாதிபதி வழிகாட்டி யிருக்கிறார். சிரவணபீடா என்ற க்ஷேத்திரத்தில் மத—விவசாயக்கல்வி புகட்ட ஒரு சிறிய பாடசாலையை சமீபத்தில் துவக்கி இருக்கிறார். மைசூர் திவான் அதைத் திறந்து வைத்தபோது கூறிய பொன் மொழிகள் கவனிக்கத் தக்கது. 'ஜனங்களின் க்ஷேமாபி விருத்தியில் மடாதிபதிகள் சிரத்தை காட்டினால் தேசத்திற்கும், தங்கள் மடத்திற்கும் பெருஞ்சேவை செய்தவர்களாவார்கள். கல்வியை யபிவிருத்தி செய்வதில் மடாதிபதிகள் ஈடுபடுவராயின் பொது மக்களிடையே அவர்கள் செல்வாக்கு அதிகரிக்கும்' என்று சர். இஸ்மெயில் எடுத்துக்காட்டி யிருப்பதை ஊன்றிக் கவனித்துத் தமது ஆடம்பரச் செலவுகளை அறவே நீக்கி நாட்டு நலனுக்கும், சமய வளர்ச்சிக்கும், மொழியின் சிறப்புக்கும் ஏற்றன புரிந்து, பொதுவாக மடாதிபதிகள் மீது கூறப்படும் பழிகள் நீங்கி புகழும், புண்ணியமும், கௌரவமும் பெற வேண்டுமென்ற நமது மனப்பூர்வமான ஆவலை, தமிழ் நாட்டு மடாதிபதிகளுக்குச் சமர்ப்பித்துக் கொள்ளுகிறோம்.

---

# மதிப்புரை

## தனவணிகன்

'தனவணிகன்' பர்மாவிலுள்ள நாட்டுக்கோட்டை செட்டிமார் சங்கத்தின் ஆதரவில் இரங்கூனிலிருந்து பிரசுரிக்கப் பெறும் ஒரு அழகிய வாரப் பத்திரிகை. பவ புரட்டாசியில் வெளியிடப்பெற்ற இதன் காங்கிரஸ் மலர் ஒன்று கிடைக்கப் பெற்றோம். அதில் தேசியத் தலைவர்களின் படங்கள் அனைத்தும் நிரம்பி யுள்ளன. படங்கள் மிக அழகிய தாளில் அச்சிடப்பெற் றிருக்கின்றன. காலஞ் சென்ற தாதாபாய் நவரோஜ், அன்னை பெஸண்ட் முதல், தற்காலத்திலுள்ள தலைவர்கள் வரையில் எல்லா தேசிய சிகாமணிகளின் படங்களை ஒருங்கே இம் மலரில் பிரசுரித்திருப்பது மிகவும் போற்றத் தக்கது. ஒரு புறம் காங்கிரஸில் தலைமை வகித்த பெரியார்களின் படங்கள், ஒரு புறம் காந்தி யடிகளின் சிறு பருவத்திலிருந்து இன்று வரை எடுக்கப்பட்ட பல படங்கள், மற்றொரு புறம் தேசியத் தொண்டில் ஈடுபட்ட பெண்மணிகளின் படங்கள், வேறொரு புறம் நேரு குடும்பத்தின் படம் ஆங்காங்கு காந்தி யடிகள் பல ஊர்களுக்குச் சென்று தேசியத் தொண்டாற்றும் படங்கள். இவ்வாறு நம் நாட்டுத் தலைவர்களின் படங்கள் கண்ணைக் கவரத் தக்கவாறு மிளிர்கின்றன. இவைகளேயன்றி திரு. சத்தியமூர்த்தி, சக்கரவர்த்தி ராஜகோபாலாசாரியார் முதலியோர் அனுப்பிய செய்திகளும் அடங்கியுள்ளன. இவ்வரிய மலரின் விலை அணா 8.

அடியில் கண்ட விலாசத்திற் பெற்றுக்கொள்ளலாம் :

**தனவணிகன் ஆபீஸ்,**
182, பார் தெரு, ரங்கூன்.

---

## லீடர்

'லீடர்' என்பது திருச்சியி லிருந்து மாதம் இரு முறை வெளிவரும் ஒரு தேசியப் பத்திரிகை. இது ஒரு முஸ்லிம் பத்திரிகையாயிருந்தும், பெரும்பாலும் பொது நோக்கத்தோடு தேசிய சேவை செய்து வருவது மிகவும் பாராட்டத்தக்கதாகும். பாரபக்ஷம், தயவு-தாக்ஷண்ய மின்றியும், வகுப்புத் துவேஷ மின்றியும் நியாயத்தை எடுத்துக் காட்டும் பத்திரிகைகளில் இதுவும் ஒன்று. வருஷ சந்தா ரூபாய் ஒன்று.

கிடைக்குமிடம்:— **"லீடர்" ஆபீஸ்,**
**தஞ்சாவூர் ரோட், திருச்சி**

## மனோன்மணீயம்

திருவனந்தபுரம் காலேஜ் பேராசிரியரா யிருந்த ராவ் பஹதூர் P. சுந்தரம் பிள்ளை, எம்.ஏ. அவர்கள், தமிழ் மணங் கமழும் இனிய செய்யுள் நடையில் இயற்றிய 'மனோன்மணீயம்' என்னும் ஒப்பற்ற நாடக நூலைத் தமிழ்க் கல்வியின் தற்போதைய நிலையில், இலகுவில் பொது மக்கள் உணர்ந்து மேடைகளில் நடித்துக் காட்ட இயலா திருப்பதை அறிந்த நமது செங்குந்த மித்திரன் மாஜி ஆசிரியரும், சென்னைப் பச்சையப்பன் கல்லூரி ஆங்கிலப் பேராசிரியருமான திரு. ம. சண்முகசுந்தர முதலியார், எம்.ஏ., எல்.டி. அவர்கள் முதல் நூலின் கதைப் போக்கிலும், பாத்திரங்களின் மனப் பான்மையிலும், செயல்களிலும், அங்கப் பாகுபாடுகளிலும் இன்றியமையாத சில மாறுதல்களை அமைத்து, அது எவர்க்கும் பயன் தருவதோடு நாடக மேடைகளிலும் அழகுறத் துலங்குமாறு தெள்ளிய இனிய வசன நடையில் பெயர்த்தெழுதி யுள்ளார்கள்.

முதல் நூல் ஆசிரியராகிய P. சுந்தரம் பிள்ளை யவர்கள் தமிழ்த் தாயினிடத்து வைத்த பேரன்பைப் பற்றியும், அவர்களது பெரும் புலமையைப் பற்றியும் தமிழுலகம் நன்கு அறியும். அப் பெருந்தகையாளர் செய்யுள் நடையில் இயற்றிய நாடகத்தை வசன நடையில் பெயர்த்தெழுதுவதற்கு அவர்களைப் போன்றே ஆங்கிலம், தமிழாகிய இரு மொழிகளிலும் பெரும் புலமை வாய்க்கப் பெற்றுள்ள திரு. ம. சண்முகசுந்தர முதலியார் அவர்களே மிகவும் தகுதி யுள்ளவர்கள் என்பதை நாம் எடுத்துக் காட்ட வேண்டியதில்லை. அத்தகைய தகுதி முற்றும் வாய்ந்தவரால் இயற்றப் பெற்ற இம் மனோன்மணீய வசன அமைப்பின் சிறப்பு சொல்லாமலே விளங்கும். இந் நாடகம் 1933-ம் ஆண்டு, நவம்பர் மாதம், 13-ம் நாள் மாலை சென்னை விக்டோரியா பப்ளிக் ஹாலில், செட்டி நாட்டுக் குமார ராஜா அவர்கள் தலைமையின் கீழ், சிறந்த அறிஞர்களும், தமிழபிமானிகளும் கூடிய பேரவையில் சென்னை, பச்சையப்பன் கல்லூரி மாணவர்கள் நடித்துக் காட்டியபோது வசன நடையின் அமைப்பையும், தமிழ் மொழியின் செழுமையையும் பல அன்பர்கள் வியந்து பாராட்டியதை நாம் நேரில் கண்டு களித்தோம். இவ் வசன நூலில் செய்துள்ள சிற்சில மாறுதல்கள் மிக மிக அவசியமானவை என்று அறிஞர்கள் பலரும் ஒப்புக் கொண்டனர். இந் நாடகம் இனி தமிழ்நா டெங்கு முள்ள நாடக மேடைகளில் பல முறை நடிக்கப் பெற்றுத் தமிழ் நாடகங்களுள் இது தலைசிறந்து விளங்குமென எதிர்பார்க்கிறோம்.

இதன் விலை ரூபா 2-4-0. தபாற்செலவு வேறு

**கிடைக்குமிடங்கள் :**

**கலாவல்லி பதிப்பகம், 'கனக விலாஸ்',**
**டிஸில்வா ரோட் தோடர்ச்சி, மயிலாப்பூர், சென்னை.**



ம. சண்முகசுந்தர முதலியார், எம்.ஏ., எல்-டி.,
'சுந்தர நிலையம்', பச்சையப்பன் ஹாஸ்டல் ரோட்,
சேத்துப்பட்டு, சென்னை.

ஆசிரியர் நூற்பதிப்புக் கழகம்,
53-56, பவழக்காரத் தெரு. சென்னை.

---

## முனிஸிபல் தேர்தல்கள்

சென்ற மாதம் நடைபெற்ற முனிஸிபல் தேர்தல்களில் கீழ்க் கண்ட செங்குந்த குலப் பெரியார்கள் வெற்றி யடைந்துள்ளார்கள்.

### சென்னை - சைதாப்பேட்டை

திருவாளர், T. V. அருணாசல முதலியார் அவர்கள்.
,, M. P. தேவராஜ முதலியார் அவர்கள்.
,, T. துரைசாமி முதலியார் அவர்கள்.
,, T. நடேச முதலியார் அவர்கள்.

### காஞ்சீபுரம்

திருவாளர், வி. இரத்தின முதலியார் அவர்கள்.
,, ம. ஆறுமுக முதலியார் அவர்கள்.
,, சி. முனியப்ப முதலியார் அவர்கள்.
,, வை. வினைதீர்த்தான் முதலியார் அவர்கள்.

### திருவாரூர்

திருவாளர், தி. நா. சபாபதி முதலியார் அவர்கள்.

### ஈரோடு

திருவாளர், V. V. C. R முருகேச முதலியார் அவர்கள்.
,, சி. வ. சி. இராமலிங்க முதலியார் அவர்கள்.

### சேலம்

சென்ற மாதம் நடைபெற்ற சேலம் முனிஸிபல் எலெக்ஷனில் 27-வது வார்ட் அம்மாப்பேட்டைக்கு அபேட்சகராய் நின்ற திருவாளர், S. P. பொன்னுசாமி முதலியார் அவர்கள் போட்டி யன்னியில் ஏக மனதாய் தேர்ந்தெடுக்கப்பட்டார். ஷையார் நகர சபையில் இது மூன்றும் தடவையாக தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார். சென்ற இரண்டு தடவைகளாகவே போட்டி யன்னியில் தேர்ந்தெடுக்கப்பட்டதானது ஷையாரின் உயரிய குணங்களையும், பொது நல சேவையையும் காட்டுகின்றது. திரு.

முதலியாரின் வெற்றியைப் பற்றி நகரில் உள்ள ஜனங்கள் மகிழ்ச்சி யடைகின்றனர். ஒரு நிருபர்.

## யூனியன் போர்ட் தேர்தல்

### தென்காசி

திருவாளர், T. P. K. ஆறுமுக முதலியார் அவர்கள்

மற்ற ஊர்களின் தேர்தல் முடிவுகளும், தேர்தலில் வெற்றி பெற்ற செங்குந்த அங்கத்தினர்களின் படங்களும் அடுத்த மாத மித்திரனில் வெளியிடப் பெறும்.

## கிராம பஞ்சாயத்து

### தாடிக்கொம்பு

மதுரை ஜில்லா, தாடிக்கொம்பு கிராமபஞ்சாயத்துக் கோர்ட் பிரஸிடெண்ட் தேர்தல் 12-9-'34-ந் தேதி நடைபெற்றதில் நமது சமூக முன்னேற்ற இயக்கத்தில் அபிமானமும், ஊக்கமு மிகுந்த திருவாளர், மா. ச. மு. இராமசாமி முதலியா ரவர்கள் தேர்ந்தெடுக்கப்பட் டுள்ளார்கள்.

## செங்குந்த மித்திரன்
## பரம்பரைச் சந்தா

நமது தலைச்சங்கத்தார் ஏற்கெனவே நிறைவேற்றியுள்ள தீர்மானத்தையும், திருவாரூர் மகாநாட்டின் தீர்மானத்தையும் அநுசரித்து, நமது குல முன்னேற்றத்திற்கெனவே உழைத்து வரும் நமது செங்குந்த மித்திரன் எக்காலத்தும் நிலைபெற்று நடைபெறுமாறு பரம்பரைச் சந்தாதாரர்கள் சேர்க்கும் பொருட்டு, நாளது அக்டோபர்மீ 5உ முதல் தீவிர முயற்சி செய்யப்பெற்று வருகிறது. W. T. மாசிலாமணி முதலியார், தக்கோலம் A. R. செல்லப்பா, சென்னை மா. அ. கனகசபை முதலியார், தி. அ சண்முக முதலியார், பி. செ. மாணிக்கவாசக முதலியார் ஆகியோர் இதுபற்றி சுற்றுப்பிரயாணம் செய்துவந்ததில், திருமயிலாப்பூர், சைதாப்பேட்டை, காஞ்சீபுரம், தக்கோலம், சோளிங்கபுரம், மின்னல், நரசிங்கபுரம், மேகளத்தூர், சத்துவாச்சாரி முதலிய ஊர்களில் பல கனவான்கள் பரம்பரைச் சந்தாதாரர்களாகச் சேர்ந்துள்ளார்கள். பரம்பரைச் சந்தாவிற்கென ஏற்படுத்தப்பெற்ற தொகை ரூபாய் முப்பதேயாயினும், மித்திரன் தயங்காது நடைபெறுதற்கு ஒரு பெருநிதி வேண்டி



யிருப்பதால் பெரும்போஷகர், போஷகர் பரம்பரைச் சந்தாதார் என சந்தாதார்கள் மூவகையாகப் பிரிக்கப்பெற்றிருக்கின்றனர். அதாவது—ஒரு மொத்தமாக ரூ. 250-க்குக் குறையாமல் வழங்குவோர் பெரும்போஷகர் எனவும், ரூ. 100-க்குக் குறையாமல் வழங்குவோர் போஷகர் எனவும், ரூ. 30-க்குக் குறையாது வழங்குவோர் பரம்பரைச் சந்தாதார் எனவும் பெறுவர்.

பெரும் போஷகர்களுக்கு மித்திரன் பரம்பரையாய் அனுப்பப்பெறுவதோடு, அவர்களது திருவுருவப் படங்களை மகாநாட்டு மலரில் ஆண்டுதோறும் வெளியிட்டும், இரண்டடி உயரத்திற்கு மேற்பட்ட அளவில் எழுதி நமது காரியாலயத்தில் நிலைபெறுத்தியும், அவர்களின் பெயர்களை கருங்கல்லில் பொறித்தும் எக்காலத்தும் அவர்கள் பெயர் நிலைத்திருக்குமாறு வைக்கப்பெறும்.

போஷகர்களுக்கு மித்திரன் பரம்பரையாய் அனுப்பப்பெறுவதோடு அவர்களது திருவுருவப் படங்களை மகாநாட்டு மலரில் ஆண்டுதோறும் வெளியிட்டும், அவர்கள் பெயரை நமது காரியாலயத்தில் கருங்கல்லில் பொறித்தும் எக்காலத்தும் அவர்கள் பெயர் நிலைத்திருக்குமாறு வைக்கப்பெறும்.

பரம்பரைச் சந்தாதார்களுக்கு மித்திரன் பரம்பரையாய் அனுப்பப்பெறும்.

பரம்பரைச் சந்தாதார்களாகவும், போஷகர்களாகவும், பெரும் போஷகர்களாகவும் புதிதாகச் சேர்ந்துள்ள கனவான்களின் விபரம் கீழ்வருமாறு.

### பரம்பரைச் சந்தாதார்கள்

| | | | ரூ. |
|---|---|---|---|
| | | திருமயிலாப்பூர் | |
| 1. | திரு. | ம. தனக்காளத்தி முதலியார் | 30 |
| 2. | ,, | V. இரத்தின முதலியார் B.A.,B.L., | 30 |
| 3. | ,, | M. சரவண முதலியார் | 30 |
| 4. | ,, | N. K. அய்யாசாமி முதலியார் | 30 |
| 5. | ,, | S. குழந்தைவேல் முதலியார் | 30 |
| 6. | ,, | மு. பு. கன்னியப்ப முதலியார் | 30 |
| 7. | ,, | A. தக்ஷிணாமூர்த்தி முதலியார் | 25 |
| | | பறங்கிமலை | |
| 8. | ,, | தி. க. பாலசுப்பிரமணிய முதலியா | 30 |
| | | காஞ்சீபுரம் | |
| 9. | ,, | வே. மு. கந்தசாமி முதலியார் | 35 |
| 10. | ,, | மா. கு. ந. சோமசுந்தர முதலியார் | 35 |

| | | |
|---|---|---|
| 11. | திரு. மு. காளத்தி முதலியார் | 30 |
| 12. | ,, K. வஜ்ஜிரவேலு முதலியார், பி. ஏ., எல், டி. | 30 |
| 13. | ,, C. பக்கிரிசாமி முதலியார் | 30 |
| 14. | ,, T. V. திருஞானசம்பந்த முதலியார் | 30 |
| 15. | ,, மா. அன்னப்ப முதலியார் | 30 |
| 16. | ,, வே. மு. முருகேச முதலியார் | 30 |
| 17. | ,, மு. சாமிநாத முதலியார் | 30 |
| 18. | ,, ஆமூர். S. சண்முக முதலியார் | 30 |
| | **தக்கோலம்** | |
| 19. | ,, தி. கை. கந்தசாமி முதலியார் | 30 |
| 20. | ,, செ. நை. ஜலநாத முதலியார் | 30 |
| 21. | ,, சிலம்பநாத குப்புசாமி முதலியார் | 30 |
| 22. | ,, செ. முருகப்ப முதலியார் | 30 |
| 23. | ,, க. செ. சிங்காரவேலு முதலியார் | 30 |
| 24. | ,, க. செ. தங்கவேலு முதலியார் | 30 |
| 25. | ,, கடப்பூர் ஆறுமுக முதலியார் | 30 |
| | **மின்னல்** | |
| 26. | ,, ப. ப. பரசுராம முதலியார் | 30 |
| 27. | ,, ப. முத்தப்ப முதலியார் | 30 |
| | **நரசிங்கபுரம்** | |
| 28. | ,, பு. மு. கோவிந்த முதலியார் | 30 |
| | **மேகளத்தூர்** | |
| 29. | ,, கிராமப் பொதுவில் பெரியதனக்காரர் பேரில் | 30 |
| | **சோளிங்கபுரம்** | |
| 30. | ,, பட்டாளம் முனிசாமி முதலியார் | 30 |
| 31. | ,, பட்டணம். அருணசல முதலியார் | 30 |
| | **சத்துவாச்சாரி** | |
| 32. | ,, பீ. ரா. ராஜமாணிக்க முதலியார் | 30 |
| 33. | ,, பெரியதனப். மு. ருமசாமி முதலியார் | 30 |
| 34. | ,, தீ. வை. தெய்வசிகாமணி முதலியார் | 30 |

## போஷகர்கள்

**காஞ்சிபுரம்**

| | | |
|---|---|---|
| 1. | திரு. ந. கச்சபாலய முதலியார் | 100 |
| | **சத்துவாச்சாரி** | |
| 2. | ,, T. K. சுக்கிரமணிய முதலியார் | 100 |
| 3. | ,, விருபாக்ஷி. மு. குப்புசாமி முதலியார் | 100 |

## பெரும் போஷகர்

**சைதாப்பேட்டை**

| | | |
|---|---|---|
| 1. | திரு. T. V. அருணசல முதலியார் | 250 |

# யார் கெட்டிக்காரர்கள்

**(D. நாச்சிமுத்து, ஈரோடு)**

மனமோகன் அப்போதுதான் டிரஸ் செய்துகொண்டு வெளியே போக தனது வீட்டு வாயிற்படியின்மேல் நின்றுகொண் டிருந்தான். அப்போது பேப்பர் விற்கும் சிறுன் ஒருவன், பேப்பர் பேப்பர் என்று கத்திக்கொண்டு போனான்.

‘இன்று, முதல் தேதி அல்லவா! நாம் பல தினங்களாய் எதிர்பார்த் திருந்த பத்திரிகை வந்திருக்கும், வாங்குவோம்’ என்று எண்ணி மனமோகன் அவனை அழைத்தான். ஒரு பிரதியை வாங்கித் தனது கக்கத்தில் வைத்துக்கொண்டு பர்சைத் திறந்து அச்சிறுவனுக்கு காசைக் கொடுத்தான்.

அப்படி மோகனம் அணவைக் கொடுத்துவிட்டு பத்திரிகையை எடுத்துப் படிக்கலாமென்று கக்கத்தைத் தடவினான். பத்திரிகை யைக் காணவில்லை. கீழும் மேலுமாகத் திரும்பித் திரும்பிப் பார்த் தான். பையனுக்கோ சிரிப்பு தாங்க முடியவில்லை. ‘ஹி, ஹி, ஹி,’ என்று பல்லைக் காட்டினான்.

“என்னடா இளிக்கிறாய்? பத்திரிகை எங்கே?”

“நான் உங்களிடம் கொடுத்தேனே, சாமி. என்ன மறுபடியும் என்னைக் கேட்கிறீர்கள்!”

மோகனுக்கு ஒன்றும் புரியவில்லை. பையன் மீண்டும் உரத்துச் சிரிக்கவே அவனை அதட்டி விசாரித்தான். மோகனம் பர்சிலிருந்து அண எடுக்கையில் பின்னால் அவன் மனைவி மெதுவாக வந்து பத்திரி கையை உருவிக்கொண்டு, பையனிடம் தான் எடுத்ததாகச் சொல்ல வேண்டாமென்று சைகை காட்டிப் போனதாகத் தெரிவித்தான்.

பத்திரிகைக்கு இந்த ஒரு மாதமாகக் காத்திருந்து, கஷ்டப்பட் டது மோகனுக்குத் தெரியும்; அவன் மனைவிக்குத் தெரியுமா?

திடீரென்று வீட்டுக்குள் பாய்ந்தான். மனைவி விமலா, தான் அதனை முதலில் படிக்கவேண்டும் என்று கோபத்துடன் பார்த்தாள். மோகனுக்கு அவன் மனைவிமீது அந்தரங்கப் பிரியம். சரி யென்று சொல்லி ஒரு பத்து நிமிடம் காத்திருந்தான். அதன்பின் அவனால் பொறுக்க முடியவில்லை. தனது மனைவியின் அறைக்குள், சந்தடி யின்றி பெரு விரலினால் மெதுவாக நடந்துசென்று, வெடுக்கென்று பிடுங்கிக்கொண்டான். அவள் என்னமோ சொன்னாள். அதைக்கூட அவன் சட்டை செய்யவில்லை. நேரே தனது அறைக்குச் சென்று நாற்காலியில் அமர்ந்தான். “இதுதான் சரி, அவளுக்கு இது நல்ல

பாடம் கற்பிக்கும். இனி சரியாக நடந்துகொள்வாள்,'' என்று சொல்லிக்கொண்டே தான் ஒரு மாதமாக ஆவலோடு எதிர்பார்த்திருந்த பத்திரிகையாகிய "செங்குந்த மித்திரனை" பிரித்துப் பார்த்தான். அதில் அவனுக்கு மனம் ஓடவில்லை.

சிறிது நேரம் கழித்துத் தன்னைப்போலவே அவளும் வந்து பிடுங்கிக் கொள்வாளோ என்ற எண்ணமே அவன் மனதை அடைத்துக்கொண்டிருந்தது. 'தான் திருடி பிறரை நம்பாள்' என்பது பழமொழி யல்லவா? அறையின் கதவுகளை அடிக்கடி திரும்பிப் பார்த்தவண்ண மிருந்தான். அவள் வருவதாய்க் காணோம்.

"என்ன! நான் செய்தது அவளுக்கு வருத்தமா. ஒருவேளை கோபித்துக் கொண்டாளோ? கோபத்தில் ஏதாவது ..................''

என்று சந்தேகங்கொண்டு தனது மேஜையின்மே லிருந்த வேறு பல பத்திரிகைகளி னிடையே அதை ஒளித்து வைத்துவிட்டு "விமலா! விமலா!'' என்று தன் மனைவியைக் கூப்பிட்டவண்ணமாய் அவளுடைய அறைக்கு ஓடினான். பதில் ஒன்றும் வரவில்லை. அப்போது தனது கண்கள் அவள் படித்துக்கொண்டிருந்த பத்திரிகையின் மீது விழுந்தது. உற்று நோக்கினான். "என்ன! செங்குந்த மித்திரனே! உன்னிடம் இங்கே ஒன்று இருக்கிறது!'' என்று ஆச்சரியத்தால் கூவினான். விமலா தனது முல்லைப் பல்லைக் காட்டினாள்.

மோகன், தனது அறையில் தான் மறைத்து வைத்திருந்த பிரதியை ஓடிப் பார்த்தான். என்னவென்று நினைக்கிறீர்கள். அன்று தான் விமலாவின் சமர்த்து முழுதையும் மோகன் அறிந்துகொண்டான் என்று சொல்லவேண்டும். தான் தனது மேஜைமீது மறைத்து வைத்திருந்தது ஒரு பழைய பிரதியா யிருக்கக்கண்டு ஆ! "அவளை நான் ஏய்க்கலாமென்று இருந்தேன்; ஆனால், அவளே என்னை ஏய்த்து விட்டாள்'' என்று பெருமூச்சு விட்டான்.

நான் முன்னே, நீ முன்னே என்று சதிபதிகள் போட்டியிட்டுப் படிக்கும் மித்திரனை, தமிழர்களே! இன்றே வரவழைத்துப் பாருங்கள்.

---

## தலைச்சங்கப் பிரசாரகர்களின் சுற்றுப் பிரயாணம்

தற்போது நமது பிரசாரகர்களான திருவாளர்கள் சு. திருநாவுக்கரசு முதலியாரும், ச. நா. குமரகுரு முதலியாரும் முறையே ராமநாதபுரம், திருநெல்வேலி ஜில்லாக்களிலும், திருச்சி ஜில்லாவிலும் பிரசாரம் செய்வதோடு சந்தா வசூலும் செய்து வருகிறார்கள். அவர்களுக்கு நமது குலாபிமானிகளும், சந்தா நேயர்களும் போதிய உதவி புரியுமாறு வேண்டிக்கொள்ளப் பெறுகின்றனர்.

(ப - ர்.)

## இயற்கையைத் தன் அடிப்படுத்தும் மனித வுயிரின் மாண்பு

(M. கந்தசாமி, மாணவன், ஔவைத் தமிழகம், திருவத்திபுரம்.)

(சென்ற இதழ், 542-ம் பக்கத் தொடர்ச்சி)

இவ் வுயிரில் பொருள்களின் தொகையும், உள்பொருள்களின் தொகையும் கூடியே இயற்கை யென்னும் உலகம் ஆகும் என்றாலும், உயிரில் பொருளின் அளவினும் உள்பொருளின் அளவு குறைந்த தென்பது யாவரு மறிந்தது. எனவே, மிக்க அளவுடைய உயிரில் பொருள்களையே சிறப்பு முறையில் உலகம் என்று பெரியோர் கூறுவர்.

இவ்வுலகம் ஐம்பெரும் பூதங்களின் கலப்பாகும். இதனை "நிலம்தீ நீர்வளி விசும்போ(டு) ஐந்தும், கலந்த மயக்கம் உலகம்'' (தொல். பொ. 644) என்பர் ஆசிரியர் தொல்காப்பியனார். இயற்கைப் பொருளில் உயிரில்லாதன இச்சூத்திரத்திற் கூறிய ஐந்து மாகலின், இயற்கை ஆராய்ச்சி இவ் வைந்தின் ஆராய்ச்சி யாகும். சூத்திரம் நிலம், தீ, நீர், காற்று, விசும் பெனக்கொண்டு நடக்கின்றது.

இனி, நிலமாவது, தீ முதற்கொண்டு விசும்பு ஒழிந்த மற்ற பூதங்கள் நின்று நிலவுதற்கு நிலைக்களமா யிருப்பது. இதன் வரலாறு கூறுகின்றவர்கள், ஆதியில் உலகமே ஒரு பெரிய நெருப்புருண்டையா யிருந்த தென்றும், அந் நெருப்பு தணிந்து உலகமாயிற் றென்றும் கூறுவர். மனித வுயிர் நின்று வாழுங் காலத்துத் தனக்கு வேண்டிய உணவுப் பொருள்களை ஆக்கிக் கொள்ளுதற்கும், அவற்றை உண்டு உறைவதற்கும் இந்நிலம் பெரும்பயன் படுகிறது. இதன் இன்பத்தை நுகர்ந்து வந்த மனித வுயிர், இது தனக்குத் தீங்கு செய்தலை யறிந்து, அத்தீங்கினின்றும் தன்னைக் காத்துக்கொள்ளு முகத்தால் மாட்சி யெய்துகின்றது. உணவுப் பொருள்களை ஆக்க முயலுகையில் சில பாகம் களர் நிலமா யிருப்பதைக் கண்டு, மனித வுயிர் அதை நீக்கித் தனக்கு வேண்டிய பொருளை விளைக்கும் விளையு ளாக்கிக்கொள்ளுகிறது. கற்பாறைகளாலும், நீர் நிலைகளாலும், காடு முதலியவற்றாலும் மனித வுயிருக்குத் தீங்கு நேருத லுண்டு. "முல்லையுங் குறிஞ்சியு முறைமையிற் றிரிந்து, நல்லியல் பழிந்து நடுங்குதுய ருறுத்துப் பாலை யென்பதோர் படிவங் கொள்ளும்'' (சிலப்பதிகாரம்) அவற்றை மனித வுயிர் மருந்து கருவி முதலியவற்றால் தன்னைக் காத்துக் கொள்வதோடு நிலத்தையும் பண்படுத்திச் செழுநில

மாக்குகின்றது. அணை, ஏரி, குளம் முதலியவைகளால் நீரைத் தேக்கிக்கொள்ளுகிறது. மலையின் தலையைக் குறைத்துக் காடு முதலியவற்றைக் கொன்று நாடாக்குவதனால் இன்று மலைகளும் காடுகளும் குறைந்தன. நாடுகள் பரந்தன; வீடுகள் நெருங்கின; வளங்கள் மிகுந்தன; மனித வுயிரினம் பல்கின; மலையை அகழ்ந்தும், மண் வயிறு கீண்டும் போக்குவரவு மிகுதியாக்கப் பெற்றன. ஓரோர் சமயம், பூகம்பம் முதலிய அஞ்சுவரு செயல்களால் பெருங்காடும், அதைச் சார்ந்த ஊரும், மற்ற பொருள்களும் இருந்த விடம் தெரியாவண்ணம் இந்நிலம் மணல்மாரியும், நெருப்புக்காற்றும், சுடுநீர்ப்பெருக்கும் வெளியிடுதல் உண்டு. இன்னோரன்ன செய்திகளைக் கண்ட மனித வுயிர் தன் மன வுணர்வின் மதிநுட்பத்தால் இவை வாராவண்ணம் மனைகளை மூங்கில்களாலும், காகிதங்களாலும் வைக்கோல்களாலும் அமைத்துக் கொள்ளுகிறது. பண்டையில், பூகம்பச் செயலால் நிலமகள் உண்ட பொருள்களெல்லாம் இன்று வேறுவகையில் நிலக்கரிகளாகவும், திரவப்பொருள்களாகவும், உலோகப் பொருள்களாகவும், வாயுப் பொருள்களாகவும் மாறி இருப்பக் கண்டு, உயிர்க்குப் பயன்படா வகையில் "அழித்தேன்" என்று அமர்ந்திருந்த அம் மணமகள் முகம் நாண, அவள் அடிவயிறு கீண்டாற்போலப் பொன் கனிகளும், நிலக்கரிச் சுரங்கங்களும், எண்ணெய்க் கிணறுகளும் எல்லா நாட்டினும் வெட்டி, பொன்னும், மணியும், கரியும், வாயுவும், கரிசினெண்ணெயும் (Kerosine oil) எடுக்கப்படுகின்றன. தொடுமிட மெல்லாம் நீரும், மணியும், பிற பயன்படு பொருளும் நிலமகள் மனித வுயிர்க்கு நீட்டித் தருகின்றாள். குடம் வேண்டுவார்க்குக் குடமும், இடம் வேண்டுவார்க்கு இடமும், பொருள் வேண்டுவார்க்குப் பொருளும் அளிப்ப தொன்றே அவள் மனித வுயிருக்கு அடித்தொண்டு புரிகின்றாள் என்பதை விளக்கும்; மேலும், ஒருகாலத்தில் மனித வுயிரின் அடிச்சுவடு கண்டறியா திருந்த மேருமலை, இன்று அதன் அடிச்சுவடு முடி மிதிப்பக் கண்டது. பிற நாட்டாருக்கு வழி தாரேம் என்று நிமிர்ந் திருந்த இமயமலை, யின்று தன் னிலையிற் றாழ்ந்து இருக்கின்றது. அங்ஙனம் செய்த பிழைபற்றி உள் துளையிட்டு (Tunnels in the Alps) விலங்கிட்டாற்போலப் புகைவண்டிப் பாதையும் (Mountain Railways) பிற பாதையும் ஓடுவனவாயின. சுருங்கச் சொல்லின், மண்மகள் மனித வுயிர் ஏவின செய்யும் பணிமகளாய் விளங்குகின்றாள் என்றல் பொருந்தும். இன்றேல் செங்கடலும், மத்தியதரைக் கடலும் சூயஸ்வழிச் சென்று சேரக்கூடுதலும், பசிபிக் சமுத்திரமும், அட்லாண்டிக் சமுத்திரமும் பனமா வழியே ஒன்றுகூடுதலும் நிகழுமா?



இனி, நீரின் பெருமையைப்பற்றித் திருவள்ளுவனார் "துப்பார்க்குத் துப்பாய துப்பாக்கித் துப்பார்க்குத் துப்பாய தூஉம் மழை" என்றும், மற்ற புலவர்கள், "நீரின் றமையா உலகம்" என்றும் சொல்லிப் போந்தனர். நீரின் தன்மையைச் சுவையாலும் நிறத்தாலும் காண்டல் முடியாது. ஆனால், கட்புலனால் தண்ணீ ரென்று தெரிந்துகொள்ளுகிறோம். எல்லா மழிய எழுந்து பரந்து தீங்கு செய்ய வரும் வெள்ளத்தை வெளிவாரா வண்ணம் மனித வுயிர் அணையினால் நிறுத்தி, தனக்கு வேண்டிய காலத்தில் விடுத்தும், வேண்டாக் காலத்து விடாமல் தடுத்தும் பயன்படுத்திக் கொள்ளுகின்றது. ஓடுகின்ற தண்ணீரைக் கொண்டே இயந்திரம் கருவியாகச் செயற்கரிய செயல்களைச் செய்கின்றது. இந்த நீர், உயிர்கட்குத் தீங்கு பயக்கும் கிருமிகளைத் தன்னகத்துள்ள நுண்ணிய புழையில் வைத்துக்கொண்டிருப்பதைக் கண்டு பிடித்த மனிதவுயிர், அக்கிருமிகளைக் கோறற் பொருட்டு நீரைக் கொணர்ந்து காய்ச்சிப் பிறகு பருகுகின்றது வறிதே போகும் தண்ணீரைக் கொணர்ந்து ஏரி, குளம் முதலியவற்றில் நிரப்பித் தனக்கு வேண்டிய ஞான்று உபயோகப் படுத்திக்கொள்ளுகிறது. ஒரு காலத்தில் தன் னாழத்தை அளந்தறிந்தவர் எவரு மிலர் என்பது போல "அளக்கர்" என்று பெயர் பெற்ற சமுத்திரம், இன்று மனித வுயிரால் ஆழமும் பரப்பளவும் காணப்பட்டு அடித்தொண்டு புரிவார்போல் அமைந்திருக்கின்றது. நீரை ஆவியாக்கி உப்பு எடுக்கின்றார்கள். தன்னகத்தே உள்ள விலையுயர்ந்த பொருள்களான முத்து, பவழம், கடற்பஞ்சு முதலியவற்றை மனித வுயிர் கொள்ளை கொண்டு போமாறு உள்ளிடம் தருகின்றது. சிறு கல்லை யெறியினும் தன் வாயிட்டு விழுங்கும் பெரும்பசி யுடைய தாயினும், பெருமாளிகையும், சிறு பெருங்குன்றும் ஒப்பப் பரப்பும் (Area) நோன்மையும் (Weight) உடைய கப்பல்களை இன்று கடல்நீர் தன் முதுகில் சுமந்து, கையால் அறைந்துகொண் டலறுவதுபோல் அலைவீசி முழக்கஞ் செய்து நிற்கின்றது. உயிரையும் உடலையும் வேறாக்கிக் கட்புலனாகாமற் செய்தலில் நமனைக் கூற்று என்று வழங்குவர். ஆனால், அவன் தான் பிரித்த உயிரைத் தன் னேவல்செய்விக்கும் ஆற்றல் இலன் என்று புராணம் கூறும். நீரை, நெருப்புக்கால் (Oxygen) நீர்க்கால் (Hydrogen) எனப் பிரித்துக் கட்புலனாகாமற் செய்தலே யன்றி, அக் காற்றுக்கள் தம் மேவல் செய்யுமாறு ஆளுதலின், கூற்றுக்கு மேற்படுகின்றான் மனிதன். பிரித்த வுயிரை மீட்டும் கூட்டும் மதுகையில்லாத கூற்றுப் போலாது, மனிதன் பிரித்த காற்றை மீட்டும் கூட்டி நீராக்கும் பெருமையுமுடையன் (நீர்க்காற்று + நெருப்புக்காற்று = நீர்.) தண்ணீரைக் கொணர்ந்து நீராவி யாக்கிக் கப்பல், புகைவண்டி முதலிய

# ரோம நாட்டின் தூய வீரன்

## 'க்யூரியஸ் டென்டேடஸ்'

[E. V. சோமசுந்தரம், கோவை]

ரோம சாம்ராஜ்யம் மிகப் பலமுடையதாக விரிவடைந்ததற்குக் காரணம், அத் தேசவாசிகள், உண்மையாக-தீவிரமாக தேசநலத்திற்கென உழைப்பவர்களாகவும், தேசத்தை மிகவும் ஆழ்ந்த அபிமானத்துடன் நேசிப்பவர்களாகவும், அதைக் கருத்துடனும் நிஷ்பக்ஷபாதமாகவும் அரசாட்சி செய்பவர்களாகவும், தீரமாக அதன் பொருட்டு உயிருக்குத் துணிந்து போரிடுபவர்களாகவும் இருந்ததேயாகும்.

ரோமநாடு ஆதியில் மிகச் சிறியதொரு ராஜ்யமாகவும், சுற்றிலும் விரோதிகளும் அயல் நாட்டவர்களும் சூழ்ந்து அபாயத்திற்குட்பட்டதாகவும் இருந்தது. அடிக்கடி நாட்டின் சுதந்திரத்தைக் காத்தலின் பொருட்டு விரோதிகளுடன் பொருதல் அவசியமாக இருந்தது. ரோமாபுரி வாசிகள் மட்டுமன்றி, அதைச்சேர்ந்த கிராமவாசிகள் தங்கள் தங்கள் விவசாய பண்ணைகளை விட்டு விட்டு தாய் நாட்டின் சேவைக்கென எதிர்த்துப் போராடி ஜெயிக்க ஓடிவர வேண்டியிருந்தது.

அத்தகைய ஆதிகால ரோமநாட்டின் வீரர்களில் மிக ஏழ்மையுள்ள குடியானவரான க்யூரியஸ் டென்டேடஸ் என்பவர் மிகத் தூய்மையான அரசியல்வாதி. இவர் பிர்ரஸ்-ஐ எதிர்த்துப் போரிட்டு, மிகக் கரடுமுரடான அபினைன் மலைப் பள்ளத்தாக்குச் சண்டைகளில் சாம்னைட்ஸ் கூட்டத்தார்களைத் துவம்சப்படுத்தி ரோம நாட்டுக்கு ஜெயக்கொடி நாட்டினார்.

இவ்வீரச் செயலால் தனது தேசவாசிகளுடைய ஆழ்ந்த அபிமானத்தையும் மதிப்பையும் பெற்று மூன்றுதரம் தேச சர்வாதிகாரியாக இருக்கும்படி அவர்களால் தேர்ந்து எடுக்கப்பட்டார். அக்கால ரோமநாட்டு வீரன் ஒருவனுக்குக் கொடுக்கும் மிகப் பெரிய கௌரவமான தேச வாழ்த்து (Triumph) இவருக்கு இரண்டுதரம் அளிக்கப்பட்டது.

ஆனால், ஒவ்வொரு சண்டை முடிந்ததும், டென்டேடஸ் நேரே தனது பண்ணைக்குச் சென்று தனது கிராமப் பண்ணையாட்களுடன் தானும் ஒருவனாக உடலால் உழைத்து வாழ்வார். பின்னும் என்

---

வண்டிகளை யியக்குவன். எனவே, நீரினை ஏவல் கொண்ட மனித வுயிர் "நீர்மேல் நடக்கலாம் வானத் துலாவலாம் தன்னிகரில் சித்தி பெறலாம்" என்ற வாக்கினை மெய்ப்படுத்துகின்றது.

(தொடரும்



றைய தினம் தனது சேவையைத் தன் தாய்நாடு வேண்டுகிறதோ அன்று தேசத் தொண்டுக்குத் தயார் என்று வருவார். ஏனெனில் அவர் மிகவும் ஆழ்ந்த சுயமரியாதை உணர்ச்சி யுள்ளவராகவும், கிராமவாசியின் எளிய தூய வாழ்க்கை முறையைக் கைக்கொண்டவராகவும் இருந்தார். ஆடம்பரமான-டாம்பீக-சோம்பற் சுகவாழ்வை அவர் அறவே வெறுத்திருந்தார்.

ஒரு சமயம், ரோமநாட்டின் விரோதிகளான சாம்னைட்ஸ் வர்க்கத்தார் தங்கள் கக்ஷியில் சேர்ந்துகொள்ளும்படியாக டென்டேடஸைத் தூண்டி அவரை வசப்படுத்த, ஏராளமான தங்கக்கட்டிகளுடனும், பட்டு பீதாம்பரங்களுடனும், வெகுமதிகளுடனும் தூதர்களை அனுப்பி வைத்தனர். அத்தூதர்கள் அவரிடம் சென்றபோது அவர் ஒரு காட்டில் தான் சாப்பிட டர்னிப் கிழங்குகளை அடுப்பில் சுட்டுக் கொண்டு இருந்தாராம்.

தனக்குத் தூதர் கொண்டுவந்த வெகுமதிகளை (லஞ்சத்தை)ப் பார்த்து டென்டேடஸ் மிக ஏளனமாகச் சிரித்துவிட்டு 'தூதுவர்களே! நான் ஆடம்பர இன்ப வாழ்க்கை நடத்துவோர்களை ஆளவும், போரில் தலைமைகொண்டு முன் நடத்திச் செல்லவும் விரும்புவதேயன்றி, நானே அவ்வாடம்பர வாழ்க்கை நடத்த விரும்பவில்லை. ஏழ்மையிலும், எளிய உடலுழைப்புள்ள வாழ்விலுமே நான் என்றும் இருக்க விரும்புகிறேன். யுத்தத்தில், தேகபலத்தால் என்னை எப்படி ஜெயிக்க முடியாதோ அங்ஙனமே, பணத்தால்—லஞ்சத்தால் என்னை எவரும் ஏமாற்றிவிட முடியாது' என்று அலட்சியமாகக் கூறினராம். அதைக் கேட்ட சாம்னைட்ஸ் தூதர்கள் வெட்கிய முகத்துடன் தங்கள் வெகுமதிகளை எடுத்துக்கொண்டு திரும்ப வேண்டியவர்களாயினர்.

இப்பேர்ப்பட்ட தூய வீரர்களால்தான் ரோம சாம்ராஜ்யம் ஆதியில் நிறுவப்பட்டது. அவர்கள், முதன் முதலாகத் தங்களைத் தாங்களே அடக்கி ஆண்டும், செல்வத்திற்கு மேலாக கண்ணியத்தை மதித்தும் வந்தனர். அத்தகைய சான்றோர் கையில் அரசாங்கம் இருந்தவரை நாடு மேனிலையில் இருந்தது. ஆனால் பேராசையும், பொருள் ஆடம்பர இன்பவாழ்க்கையும், சோம்பலான பழக்க வழக்கங்களும் என்றைய தினம் ரோமநாட்டவர் மனத்தைக் கவர்ந்தனவோ அந்நாளே அவர்கள் உரங்குன்றி, ஒற்றுமையற்று, தியாக புத்தியும் வீரமு மிழந்து, கட்டுப்பாடு செல்வாக்கு மதிப்பாகிய சகலமுந் துறந்து தமது பெரிய சாம்ராஜ்யத்தையும் பறிகொடுத்தனர்.

நம் தேசத்தவர் டென்டேடஸ் போன்றவர்களின் தூய குணங்களைக் கைக்கொண்டு, சரித்திரத்தின் திருட்டாந்தத்தை அறிந்து உண்மைத் தியாகம் நிறைந்தவர்களாகி, நம் நாட்டை விடுதலை செய்து முன்னேற்றமுறச் செய்ய முனைந்து வருவார்களாக.

# பெண்களின் எதிர்காலம்

(T. வேலுப்பிள்ளை, கொழும்பு)

வெகுகாலமாக மனிதன் பெண்களைத் தன்னிலும் கீழானவர்களாகக் கருதி வருகிறான். மகமது நபி (Prophet Mohamed) பெண்களுக்கு மோட்சவாசலையே அடைத்துவிட்டார். சீன ஞானியொருவர் அவர்களை ஆத்துமா வற்றபூனைகளுக்கு இணையாகக் கூறியிருக்கிறார். ஆனால், அவர்களெல்லாம் பழங்காலத்தவர்கள்.

விக்டோரியா இராணி (Queen Victoria) நாளைக்கு உயிர்ப்பித்தெழுவாரேயானால், பெண்களின் தீவிர மாறுதல்களைக் கண்டு திகிலடைவாரென்பதில் சந்தேகமில்லை! வியாபாரங்களும், உத்தியோகங்களும் ஒரு காலத்தில் ஆண்களுக்கே உரியவையாயிருந்தன. இப்போது இருபாலாருக்கும் திறக்கப்பட்டிருக்கின்றன. பெண்கள் மோட்டார் இரதங்களையும், ஆகாய விமானங்களையும் தனியே செலுத்திச் செல்கின்றனர். வைத்தியர்களாகவும், நியாயஸ்தலங்களில் உத்தியோகஸ்தர்களாகவும் இருக்கின்றனர். ஜெர்மனி, இந்தியாவைப் போன்ற தேசங்களில் சுதேச இயக்கங்களில் பெரும்பான்மையாகக் கலந்திருக்கின்றனர். ஆண்களால் செய்யப்படும் காரியங்கள் ஒவ்வொன்றிலும் தற்போது அவர்கள் கலந்து உழைக்கும் பங்கு பெற்றிருக்கிறார்கள்.

எனினும், இருபாலாருக்கும் இடையேயுள்ள வித்தியாசங்களை எவரும் மறுக்க முடியாது. இவர்களுக்குள் ஏன் வித்தியாச மேற்படவேண்டுமென்றும், வித்தியாச மேற்படுவதற்கு அவர்களுடைய நடவடிக்கைகள் எவ்வளவு தூரம் காரணமாயிருக்கின்றனவென்றும் ஆராய்வதாற் பயனுண்டு.

பெண்கள் ஆண்களிலும் பலம் குறைந்தவர்களென்பது சொல்லாமலே அறியப்படும். 50 வருஷங்களுக்கு முன்பாகச் செய்த பரிசோதனையில் (Experiments) பெரும்பான்மையான ஆண்கள் பெண்களிலும் 5 அங்குலம் உயர்ந்தவர்களென்றும், அவர்களிலும் சுமார் மூன்று அல்லது நான்கு மடங்கு சுமைகளைத் தாங்கக்கூடிய பலமுடையவர்களென்றும் அறியப்படுகிறது; ஆண்கள் தங்கள் சொந்தச் சரீர பாரத்தில் இருமடங்கைத் தாங்க, பெண்கள் தங்களுடைய நிறையில் ½ பாகத்தையே தாங்க முடியுமென்று தெரிகிறது. தற்காலத்தில் இவைகளை ஒப்பிடுமிடத்து இவைகள் பெரும்பாலும் மாறுதலடைந்திருப்பதாகக் காண்கிறோம். எந்நேரமும் வீட்டிற்குள் ஜீவித்த பண்டைய பெண்களைப்போலில்லாமல் தற்காலப் பெண்கள் வெளியிற் சென்று உடற்பயிற்சிக்கேற்ற வேலைகள் செய்து வருவதே இதற்குக் காரணமாகும். நாகரிகம் நிறைந்த தேசங்களில் உடற்பயிற்சிக்கேற்ற வேலைகள் இயந்திரங்களுக்குக் கொடுக்கப்பட்டுவிட்டதால் சரீர பலம் (Physical strength) குறைந்து வருதலை நாம் மறந்துவிடக் கூடாது.

பின்னல் தையல் முதலிய வேலைகளில் பெண்கள் சமர்த்துடையவர்கள். இவ்வேலைகளை நுட்பமாகவும் சிறப்பாகவும் செய்வதற்கு அவர்களின் மென்மையான விரல்களே காரணமாகும். இதிலிருந்து, பெண்கள் தங்கள் சிறிய அவயவங்களையும், ஆண்கள் தமது பெரிய அவயவங்களையும் உபயோகிப்பதில் திறமையுள்ளவர்களென விளங்குகிறது. அதோடு பெண்கள் அமைதியான இடங்களைத் தேட, ஆண்கள் சத்தம் நிறைந்த வேலை ஸ்தலங்களை விரும்புகின்றனர். உணர்வில் (Sensitiveness) பெண்கள் மிகவும் வலிமையுள்ளவர்கள். நுட்பமாக உணரும் திறமையில் பெண்கள் ஆண்களினும் இருமடங்கு மேம்பட்டவர்கள். பெண்களின் சரீரம் மென்மையுடையதாயினும் நோய்களை (Pain) மிகவும் பொறுமையுடன் சகிக்கும் குணம் வாய்ந்துள்ளது. உருசியிலும், மணத்திலும் (Taste and smell) ஆண்களே மேலானவர்கள். கேட்பதிலும் பார்வையிலும் (Hearing and sight) இருபாலரிடையே சிறிய வித்தியாசங்களுண்டு. கேட்பதில் பெண்கள் குறைவென்றும், பார்வையில் ஆண்கள் குறைவென்றும் தெரிகிறது.

மனோகத (Mental) வேறுபாடுகளில் ஞாபகசக்தியே கவனிக்கப்படவேண்டியது. மனப்பாடமாக்குவதிலும், பாடமாக்கினதை ஞாபகத்தில் நெடுநாளைக்கு வைப்பதிலும் பெண்கள் கெட்டிக்காரரென்றும், சாதாரண ஞாபகசக்தியில் ஆண்களைச் சிறிது மேலாகக் கூறலாமென்றும் தெரிகிறது. விகார (Temperament) குணங்களில், பெண்கள் சாதுக்களென்பது ஆண்கள் அழைக்கும் அனேக பழிகளால் (Crime) விளங்குகின்றது. ஆடம்பரத்திலும் அலங்காரத்திலும் பெண்களை விளம்பரப் பலகைகளாக (Advertisement Boards) எண்ணுவதில் தவறில்லை.

இவ்வாறு இருபாலாரிடையே காணப்படும் வேற்றுமைகளை நுட்பமாக (Minute)க் கவனிக்குமிடத்து அவைகள் மிகவும் அற்பமான வேற்றுமைகளே என்பது நன்கு விளங்கும். இரு ஆண்களிடையேயுள்ள வேற்றுமைகள் ஆண்களுக்கும் பெண்களுக்குமிடையேயுள்ள வேற்றுமைகளைக் காட்டிலும் மிக அதிகமாகச் சில சமயங்களில் காணப்படுகிறது. இவைகளை ஆலோசிக்குமிடத்துப் பெண்கள் ஆண்களிலும் குறைந்தவர்களென்னுங் கொள்கை தவறேயாகும்.

பெண்களின் முன்னேற்றம் எவ்வளவாகத் தடுக்கப்படுமோ, அவர்களின் உரிமைகள் எவ்வளவாக மறுக்கப்படுமோ, அவ்வளவாக தேச முன்னேற்றமும் தடுக்கப்படுமென்பதை உறுதியாகக் கூறலாம். எனவே, பெண்களின் முன்னேற்றத்திற்கு அனைவரும் உறுதுணை புரிவார்களாக.

# எனது அதிர்ஷ்டம்

(எ. முனிசாமி, கலவை)

என்னைப் போல் முழு சோம்பேறி உலகில் எவருமே இருக்க மாட்டார்கள். படுக்கையைவிட் டெழுந்திருக்கவுங் கஷ்டம்; பல் துலக்கவுங் கஷ்டம், சாப்பிடவுங் கஷ்டம். பல நீட்டுவானேன். வாழ்க்கைக்கு வேண்டிய சாதாரண வேலைகளிலே எனக்குக் கஷ்டமில்லாதது, மூலையில் முக்காடு போட்டுக்கொண்டு மூதேவி அன்னைக்கு மும்முரமாக வேலை கொடுப்பதுதான். சோம்பேறி தேவதைக்கும், மூதேவி அன்னைக்கும் பிறப்பிடமும், இருப்பிடமுமாக இருக்கக்கூடியவன் நான் என்றே சொல்லலாம். இதோடு வேலைத் திறமையிலும் நிகரற்றவன். நான் செய்த வேலையை மீண்டுமொருவர் திருப்பிச் செய்யாமல் அவ் வேலை ஒழுங்குபடாது. இதனால் எனக்குக் கிடைத்திருக்கும் பட்டங்கள் பல.

இந்த நிலையில் துரதிர்ஷ்டவசமாக சிறு பொழுதிலேயே என் அன்னையை யிழந்தேன். மறு மணஞ் செய்துக்கொண்ட எனது தந்தை தனது மனைவியின் மந்திரோபதேசத்தினால் என்னைக் கவனியாமல் விட்டதுமன்றி பல விதமாய் இம்சிக்கவுந் தொடங்கினார். தந்தையே இப்படி யென்றால் சிற்றன்னையைப் பற்றிச் சொல்லவும் வேண்டுமோ. நான் செய்த குற்ற மொன்றாயினும் அதை ஒன்பதாக்கி விடுவாள். இதனால் சிறு பிள்ளைகளும் என்னைக் கண்டால் கை கொட்டிக் கேலி செய்வார்கள்.

ஒரு நாள் 'கழனிக்குப் போய் தண்ணீர் கட்டிவிட்டு வா' என்று கடினமான கட்டளையிட்டார் எனது தந்தை. மறுத்தால் தகுந்த பலன் கிடைக்குமென்று பதில் சொல்லாமல் கழனிக்கு ஓடினேன். எங்கள் கழனிக்குப் பக்கத்தில் போகும் பெரிய கால்வாயில் தண்ணீர் அதிகமாக வரவே மடை உடைத்துக்கொண்டு எங்கள் கழனியில் தண்ணீர் ஏராளமாய்ப் பாய்ந்துகொண் டிருந்தது. அதைப் பார்த்ததும் எனது சோம்பல் பறந்துவிட்டது. பக்கத்திலும் மண்ணில்லை. மடையும் அகலமாகவே உடைந்திருந்தது. என் செய்வேன். சிரமத்தைக் கருதாமல் கொஞ்ச தூரம் போய் மண் வெட்டி எடுத்து வந்து, அங்கு சிதறிக் கிடந்த கற்களைப் பொருக்கி எவ்வளவு தண்ணீர் வந்தாலும் கழனியில் ஒரு துளிகூட போய்ப் பாயாதவாறு உறுதியாகவும், உயரமாகவுங் கட்டிவிட்டு யாராவது உடைத்துவிடப்போகிறார்களென்று வரப்பின் மீதிலேயே அமர்ந்திருந்தேன்.

சிறிது நேரத்தில் எனது தந்தை பரபரப்புடன் வந்துகொண் டிருந்தார். அவரைப் பார்த்ததும் எனக்குப் புன்னகை பூத்தது. இவ்வளவு சீக்கிரத்தில் நாம் மடையைக் கட்டிவிட்டதைக் கண்டால் வெகு சந்தோஷப்படுவார், தூஷணையும் இன்று கிடைக்காது என்று இறுமாந் திருந்தேன். ஆனால் அவர் வந்து மடையைப் பார்த்ததுதான் தாமதம். பின்பு நிகழ்ந்தவற்றைச் சொல்லவே வெட்கமா யிருக்கிறது. என் வேலையை மெச்சிப் புகழ்ந்துகொண் டிருந்த எனக்கு கைலாச தரிசனம் கிடைக்கும்படி ஒரு உதை விழுந்தது. பக்கத்தி லிருந்த கழனியில் அப்படியே போய் முழுகிவிட்டேன். சுவாசம் வந்த பிறகு தட்டுத்தடுமாறி மெதுவாக எழுந்து சேற்றுருவோடு வெளியே வந்தேன். நிலை தடுமாறிய பரிதாபமான எனது நிலையையுங் கவனியாமல் மீண்டும் துரத்திக்கொண்டே வந்து "தண்ணீ ரில்லாமல் கழனி உலர்ந்து விடுகிறது, தண்ணீர் கட்டிவிட்டு வாவென் றனுப்பினால், ஆற்றில் அணை கட்டுவது போல் கருங்கல்லினால் மடையை ஒரு கஜ உயரங் கட்டிவிட்டு மலைக் குரங்கைப் போல் உட்கார்ந்து வேடிக்கை பார்க்கிறாயா? உயிர்ப் பிணமே" என்று வாயில் வந்தபடி வைது 'இனி என் முன் தலைகாட்டாதே; மண்டையை யுடைத்துவிடுவேன் எங்கேயாவது ஓடிப் போய் உயிர் பிழைத்துக்கொள்' என்று அங்கு நிற்கவொட்டாம லடித்துத் துரத்திவிட்டார். இனி ஆயுள் வரை இவர்கள் முகத்திலேயே விழிக்கக் கூடாது; தூர தேசம் போய் பிச்சையெடுத்தாகிலும் பிழைக்கலாம் எனத் துணிந்துவிட்டேன்.

அப்போது பகல் மணி பத்திருக்கும். மனம் போன போக்காக நடந்து மாலை சுமார் $6\frac{1}{2}$ மணிக்கு ஒரு ரெயில்வே ஸ்டேஷனை யடைந்தேன். ஏழுக்கெல்லாம் வண்டி வந்தது. ஜனங்களெல்லாம் மூட்டைகளையும், குழந்தைகளையும் எடுத்துக்கொண்டுபோய் வண்டியிலேறினார்கள். எனக்கு டிக்கெட் டில்லாமல் ஏற மனமில்லை. ஆம். என்ன செய்வது? மனமில்லை என்றால் பணமுமில்லையே. ஆயிரக்கணக்கான ஏழைகளுக்கு அருள் புரியும் ரெயில்வே கம்பெனியார் நிராதரவான இச்சிறுவனுக்குத் துணை புரியமாட்டார்களா வெனத் துணிந்து ஏறிவிட்டேன். வண்டியில் பிரயாணிகள் அதிகமில்லாமையால் இடந் தாராளமாகவே இருந்தது. பசிக்கு ஆகாரம் பரமனே யென்று படுத்துவிட்டேன். வண்டி எங்குப் போகிறதென்று தெரியாது. தலையைச் சாய்த்ததுதான் தெரியும். திடுக்கிட்டுக் கண் விழித்தபோது பெட்டியில் என்னைத் தவிர ஒருவருமில்லை. வண்டி ஸ்டேஷனில் நின்றுக் கொண் டிருந்தது. அப்போது காலை மணி ஏழிருக்கும். வண்டியில் தனியே யிருக்க மனமில்லாமல் கீழிறங்க நினைத்தெழுந்தேன். காலில் ஏதோ மிதிபட்டது. குனிந்து பார்த்தேன். ஒரு மணிபர்ஸ் கிடந்தது. சுற்றுமுற்றும் பார்த்தேன். ஒருவருமில்லை. அதை எடுத்துக்கொண்டு வண்டியைவிட் டிறங்கினேன். தடைபடுத்துவா ரில்லாமலே ஸ்டேஷனை விட்டு வெளியே வந்து மணிபர்ஸை பிரித்துப் பார்த்தேன். அநேக கடிதங்க ளிருந்தன. என்ன கடிதம் என்று நான் சொல்ல வேண்டியதில்லை. எனக்கு முன் நீங்கள் தெரிந்துகொண் டிருப்பீர்கள். என் மனோ நிலை அப்பொழுது எப்படி இருந்தது தெரியுமா? உலகத்தில் தற்போது 17 குபேரர்கள் இருக்கிறார்களாமே அந்தக் குபேரர்களெல்லாம் கடன் வாங்கிக்கொண்டு போக என் சமுகத்தில் உட்கார்ந்துகொண் டிருப்பதாக நினைத்து மகிழ்ந்தேன். அப்படி கனவு காண்பதற்கு எவ்வளவு தொகை கிடைத்ததென அறிய ஆசைப்படு

வீர்கள். பத்துரூபா நோட்டுகள். ஒன்றிரண்டல்ல. பத்து நோட்டுகள். அடடா இதற்கா இவ்வளவு பிரமாதம் என்கிறீர்களா? சரிதான். எனக்கு அதுவே 10 கோடி ரூபாய்க்குச் சமம். பிறந்தது முதலாக இதுவரை எனது உழைப்பினால் ஒரு செல்லாத காசுகூட கண்டறியாத நான், ஒரு சிரமமு மின்றி குனிந்தெடுத்ததின் பலனாய் நூறு ரூபாய் கிடைத்த தென்றால் அதைக் கண்டு நான் பெருமை யடைந்ததில் என்ன ஆச்சரியம் இருக்கிறது. நோட்டுகளை ஜாக்கிரதையாய் வைத்துக்கொண்டு சமீபத்திலிருந்த விஜயபுரி என்னும் நகரையடைந்தேன். ஆழ்ந்த யோசனையுடன் ஒரு வீதியில் நான் போய்க்கொண்டிருந்தபோது, ஒரு மாடி வீட்டின் தெருத் தாழ்வாரத்தில் உலவிய வண்ண மிருந்த ஒரு பெரியார் என்னை யழைத்து, 'யாரப்பா நீ? யாரைப் பார்க்கிறாய்? எந்த ஊர்?' என்று அன்புடன் விசாரித்தார். நான் பதில் சொல்லாமல் பசி மிகுதியால் வயிற்றைத் தடவினேன். குறிப்பா லறிந்த அவர், என்னை உள்ளே அழைத்தார். ஒரு நாழிகைக்குள் திருப்தியாய் சாப்பிட்டுவிட்டு வெளியே வந்தேன். அப்பெரியார் என்னை அருகில் அமரும்படிச் செய்து எனது சவிஸ்தாரங்களைக் கேட்டார். உள்ளன்பு நிறைந்த அவரிடம் உண்மையை மறைப்பது நியாயமல்லவென்று எனது வரலாறு முழுதையும் சொன்னேன். பொறுமையோடு கேட்டிருந்த அவர் 'எவ்வளவு படித்திருக்கிறாய்' என்றார். 'தமிழ் எழுதவும், படிக்கவும் கொஞ்சம் பயின்றிருக்கிறேன்' எனக் கூறினேன். இனி எங்கும் போகக் கூடாதென்றும், தன் வீட்டிலேயே தங்கிவிடும்படியும் கட்டளையிட்டார். நானும் இசைந்தேன்.

(தொடரும்)

---


## விளம்பர விகிதம்

5000-க்கு மேற்பட்ட சந்தாதாரர்களை யுடையதும், இந்தியா முழுவதும் மட்டுமன்றி இலங்கை, இரங்கூன், பினாங்கு, தென்னாப்பிரிகா முதலிய வெளிநாடுகளிலும் சென்றுலவுவதுமாகிய உயர்ந்த தமிழ் மாதப்பத்திரிகை 'செங்குந்த மித்திர'னில் உடனே உங்கள் வியாபாரத்தைப்பற்றி விளம்பரஞ் செய்யுங்கள்

ஒரு தடவைக்கு முழுப்பக்கம் ரூ. 10
அரைப்பக்கம் ரூ. 5 கால்பக்கம் ரூ. 3

செங்குந்த மித்திரன் ஆபீஸ்,
பவழக்காரத் தெரு, சென்னை.


# சுற்றந் தழால்

[S. இராமலிங்கம், திருநெல்வேலி]

"திரைகடலோடியுந் திரவியந்தேடு" என்று, எவ்வமில் புகழ்சேர் ஔவையார் கூறியதை மக்கள் யாவரும் மனதிற்கொண்டு மாநிதியந் தேடல்வேண்டும். தீதில்லாதபடி நீதியோடு நின்று ஈட்டும் நிதியமே நலந்தரும். ஆகையால், திறனறிவோடு தீதின்றிப் பொருளை வருவித்துக் கொள்ளல்வேண்டும். சுற்றத்தார் முதலியவர்களுக்கு இடர்விளைக்காமலும், பிற வுயிர்கட்குத் துயர்கொடுக்காமலும், அருளும் அன்பும் உடையவனாய் நின்றே பொருள் ஈட்டுதல் வேண்டும்.

இவ்வாறு நன்முறையில் நின்று ஒருவன் நிதியம் ஈட்டுவனேயாகில், அவன் நாளடைவில் நீள்செல்வங் கைவரப் பெற்று, நீசனானாலும் ஈசன் எனப் புகலப்படுவான் என்பதற்கு ஐயமில்லை. அவ்வாறு மாநிதியம் பெற்று மாண்புற்றோங்கக்கூடிய மக்களது முதற்கடமை யாதெனில் "செல்வர்க் கழகு செழுங்கிளை தாங்குதல்" என்றவாறு செழுங்கிளை தாங்கி சிறப்புற வாழ்தலே யாகும். சுற்றந் தழுவும் பேற்றைப் பெற்றவனே, தான் பெற்ற செல்வத்தின் பயனை அடைந்தவனாவான் என்பது, உள்ளுணர்வுக்குத் தெள்ளமிர்தமாகிய திருக்குறளால் உணரக்கிடக்கின்றது. உண்டு, உறங்கி, மயங்கி, உலாவித் தொலைவதே தம் செல்வப் பயன் எனக் கருதி, செல்வர்கள் காலங்கழிக்காமல், கற்றபடி நிற்றலே ஒருவன் கற்ற கல்விக்குப் பயனாதல்போல, சுற்றந்தழுவி வாழ்தலே தாம் பெற்ற செல்வப் பயனெனக் கொண்டு கிளைஞரைத் தாங்கி வாழ்தல்வேண்டும்.

உதாரணமாக நம் உடலிலொரு பாகமாம் வலக்கையை யெடுத்துக் கொள்ளுவோம். அவ்வலது கை சுகமாக விருக்க விரும்புமேயானால் உடல் முழுவதுமே சுகமாக இருத்தல்வேண்டும். அங்ஙனமின்றி அவ்வலக்கையானது "நான் வருந்தி வரவழைத்த பொருளை வயிற்றிற் கொண்டுபோய்ச் சேர்ப்பானேன்? அஃது எல்லா அவயவங்களுக்கும் சமமாகப் பங்கிட்டுக் கொடுப்பது போல் எனக்கும் கொடுப்பானேன்? அது கூடவே கூடாது. நான் சம்பாதித்த பொருள்கள் அனைத்தையும் நானே யனுபவித்தற்குரியன்" எனச் சுயநலம் பேசித் தான் பெற்ற பொருளை வயிற்றிற்குத் தர மறுத்துவிடுமே யாகில், அவ்வலக்கையானது சுகமாக விருத்தல் இயலுமா? இயலாதன்றோ! அதுபோன்றே நாமும் நம்மைச் சூழ்ந்துள்ள சுற்றத்தார்களிடம் அன்பு காட்டி, அவர்களுக்கு நம்மாலாம் உதவிகள் பலபுரிந்து, அவர்களை யின்முகமாகக் கண்டால்தான் நாமும் சுகமாக வாழ முடியும்.

செல்வச் செருக்குடையா னொருவன் கிளைஞரைப் பேணாமல் வாழ்கின்றானென வைத்துக்கொள்ளுவோம். அவனது வாழ்க்கை

யானது கரையில்லாத குளத்தில் நீர் நிறைந்ததற் றொப்பதாய் முடியு மென்க. கரையில்லாத குளம் நீரை யிழந்து பாழ்படுதல்போல, கிளைஞரைப் பேணுதவன், செல்வத்தை யிழந்து சீரழியநேரும். ஆனல், கிளைஞரைப்பேணி அவர்களது அன்பைச் சம்பாதித்த வொருவனே எல்லாச் செல்வத்தையும் பெற்றதற்கு ஒப்பாவான். எவ்வாறு சிறந்த உறுப்புகளைப் பெற்ற உடல் நிறைந்த வலியினைப் பெறுகின்றதோ, அவ்வாறே நல்ல சுற்றத்தை யடைந்தவன் எல்லாச் செல்வங்களையும் பெற்றதற்குச் சமமாவான். இக் கருத்துக்களை,

"அளவளா வில்லாதான் வாழ்க்கை குளவளாக்
கோடின்றி நீர்நிறைந் தற்று."

"விருப்பறாச் சுற்ற மியையின் அருப்பறா
ஆக்கம் பலவுந் தரும்."

என்ற இரு குறட்பாக்களால் அறியலாம். இவ்வாறு கூறிய வள்ளுவப் பெருந்தகையார், செல்வம் அற்று ஒருவன் வறுமை யுற்ற ஞான்றும் அவனோடு பழைமையைக் கொண்டாடும் பண்புகள் அவனது சுற்றத்தார் மாட்டே உண்டு என்றும் செப்புகின்றார்.

"பற்றற்ற கண்ணும் பழைமை பாராட்டுதல்
சுற்றத்தார் கண்ணே யுள."

ஒரு குளத்தில் நீர்நிறைந்த காலத்தில் தவளைகள் பல வந்து சேர்ந்து பின்பு நீர்வற்றிய வேளை அவை அனைத்தும் அதனைவிட்டு அகன்று போதல்போல, செல்வம் உள்ளபொழுது இல்லாத உரிமைகளையும் எடுத்துக்கொண்டாடி அவனை யடுத்து நின்று, அச்செல்வம் தொலைந்தவுடனே அனைவரும் அவனைவிட்டுப் பிரிந்து அகல்வர். ஆனல், கிளைஞர்கள் மாத்திரம் பரிவோடு பழைய உரிமைகளை அப்பொழுதும் அவன்பாற் பாராட்டி நிற்பர். ஆகையால், இத்தகைய சுற்றத்தாரை (அதாவது பற்றற்ற கண்ணும் பழைமை பாராட்டும் பெருமை பொருந்திய சுற்றத்தாரை) தன்னினின்றும் நீங்காவண்ணம் தழுவி வாழ்தல் வேண்டும்.

கேவலம் பறவை யினத்தைச் சேர்ந்த காக்கைகள்கூடத் தமக்குக் கிடைத்த உணவைத் தாம் தனியே யுண்ணுமல், தம்மினத்தாரை உடனழைத்து உண்ணுகின்றன. கரவாது இனத்தை உடன் அழைத்து உண்ணும் உயர்வை நோக்கியே உலக மக்கள் காகங்களை வலிய அழைத்து யிரையிடுகின்றார்கள். கரந்தும், கடிந்தும் உண்ணுகின்ற நாயைக் காணின் இகழ்ந்து விலக்குகின்றார்கள். இவ்வாறு நிகழ்வதைக் கண்டிருந்தும், தமரை யொழித்துச் சிலர் தனியேயிருந்து உண்டு மகிழ்வது இரங்கத் தக்கதே யாகும்.

"காக்கை கரவா கரைந்துண்ணும் ஆக்கமும்
அன்ன நீரார்க்கே யுள."

என்ற வள்ளுவப் பெருந்தகையின் வாய்மொழிப்படி, காக்கைபோல் கிளைஞரோடு கலந்து உண்பவனுக்கே எல்லாவித ஆக்கமும், நலமும் அமைவுறும். ஆதலால், நாமெல்லோரும் "செல்வம் வந்துற்ற காலை தெய்வமுஞ் சிறிது பேணுர், சொல்வன அறிந்து சொல்லார், சுற்றமுந் துணையு நோக்கார்" என்றதற்கு இலக்காகி பலராலும் ஒதுக்கப்படாதவர்களாய், மெய்த்திரு வந்துற்றாலும் வெந்துயர் வந்துற்றாலும் 'சித்திரத் தலர்ந்த செந்தாமரையை யொத்திருக்கும்' முகத்தினராய் நின்று, சுற்றத்தார்களைப் பேணி, அவர்களது அன்பைச் சம்பாதித்து, எல்லாச் செல்வங்களையும் எளிதில் பெற்று, இம்மையிற் புகழும் மறுமையில் இன்பமும் அடைந்து உய்வோமாக.

# மாங்கல்யத் தேங்காய்க்கு மஞ்சள் இல்லை

[ஜே. ரவூல் இலேர், புதுவை.]

"ஆமாம் போங்க; நானும் எத்தனை நாளா சொல்றது. நீங்க ட்ரஸ் பண்ணிக்கிட்டு ஆபீசுக்குப் போறது என்னமோ, திரும்பி வந்து ஈஸி சேரில், ஆஸ் ஊஸ் என்று சாய்கிறது என்னமோ என்றிருக்கிறீர்களே" என்று வேலையி லிருந்து திரும்பிய தன் கணவர் சோணசலம் பிள்ளை திடுக்கிடும்படிக் கேட்டாள் அதிமதுரம்.

இங்குக் குறிப்பிட்ட புருஷ பாரியர்க்குள் எழுந்த வாதம், அவர்கள் செல்விக்கு வரன் தேடும் விஷயத்தைப் பற்றியே யாம். குறை ஒன்று மில்லாவிட்டாலும் குறை யிருக்கிறதாகவே கற்பனை பண்ணிக் கொண்டு பேசும் சுபாவ முடையவள் அதிமதுரம். எனவே, கணவன் தன் புத்திரிக்காக ஒரு முயற்சியும் செய்யவில்லை என்று குறை கூறினுள்.

உலகத்தில் சகல அம்ஸங்களும் பொருந்தி எதுவும் வாய்ப்பதில்லை. பிள்ளை யவர்கள் வரனுக்காக முயன்ற விடங்களில் செல்வமிருந்தால் கல்வி இல்லை; கல்வியும் செல்வமும் ஒருங்கே அமைந்திருந்தாலும், குதிரைப்பந்தய மோகம், தாசிகள் கேளிக்கை அல்லது மதுபான வகைகளில் நாட்டம் மிகுந்திருந்தது. பெண்ணைக் கொடுக்கிறோமோ கண்ணைக் கொடுக்கிறோமோ வென்ற யோசனை வாய்ப்பட்டவராய் வாளா விருந்தார். இதில் பெண்ணின் குண விசேஷ மென்ன வென்றால் வாய்பதட்ட மதிகம். காலணுவுக்கு நாலு கத்தரிக்கா யென்றால் 'ஏண்டி யம்மா உனக்கு இவ்வளவு ஆசை. இருபத்திநான்கு கொடுக்கக் கூடாதா' என்று வாய் கூசாமல் கேட்பாள்.

எப்படியோ தான் இருப்பது காசிக் கடுத்த ஒரு ஊரா யிருந்தாலும் ராமேஸ்வரம் வரைக்கும் முயன்று மேற்சொன்ன விவாதம் நடந்த சில தினங்களுக்கெல்லாம் ஒரு வரன் சம்பாதித்தார்.

நல்ல சுபதினத்தில் பந்து மித்திரர்கள் கூடியிருக்க அவர் செல்விக்கு மங்களகரமாய் மணம் முடிந்தது.

புக்ககத்தில் பிரபா என்னும் நமது கதாநாயகி நடந்து கொண்ட விதம், மாமன் மாமியர் கணவன் முதலியோர், பிரபா வாயாடி என்று கேள்விப்பட்டது சுத்தப்பொய் என்று தீர்மானிக்கும் படி செய்து விட்டது.

தவிரவும் பிரபாவின் கணவன் சிறிது முன்கோபி. வேலைக்காரன் கொஞ்சம் பாலைச் சிந்திவிட்டானென்றால், அப்பொழுதே அவனை வேலையைவிட்டு நீக்கிவிடத் தக்க சுபாவ முள்ளவன். புதிய வீடு; அதோடு கணவனின் முன்கோபம்; இவை பிரபாவின் வாய் பதட்டத் துக்கும் அதிகப்பிரசங்கித் தனத்துக்கும் முட்டுக்கட்டையா யிருந்தன.

விவாகமாகி சில தினங்களில் பிரபாவின் வீட்டில் வேறொரு விவாகம் ஏற்பட்டது. என்னதான் ஒழுங்காய் நடந்து கொண்டா லும், ஏதோ தான் கேள்விப்பட்டது போல் வரும் விருந்தினரிடம் ஏதாவது பதட்டமாய்ப் பேசித் தன் அகமுடையாள் கௌரவக்குறைவு ஏற்படுத்திவிடுவாளோ என்று பயந்து, விவாகத்தன்று பிரபாவின் கணவன், பிரபாவை அவ்வீட்டுப் பரணிமேல் ஏற்றி, அங்கு ஒரு திரை மறைவில் இருக்கும்படி ஆக்ஞாபித்தான்.

அப்படியே திரை மறைவில் இருந்த பிரபா சும்மா இருக்கவில்லை. கீழே நடக்கும் நிகழ்ச்சிகளை திரை மறைவி லிருந்தே எட்டி எட்டிப் பார்த்துக்கொண்டே இருந்தாள். வந்திருந்தோருக்கு வழங்கப்படும் தாம்பூலம் முதலியவற்றில் அவளுக்கு ஒரு குறை தோன்றியது.

பரணியி லிருந்துக்கொண்டே "இந்த மாங்கல்யத் தேங்காய்க்கு மஞ்சள் இல்லை" என்று கத்தினாள். கீழிருந்தோர் எல்லோரும் மேலே நோக்கினர். பிரபாவின் கணவன் தன் தலையை யிறக்கப் போட்டான்.

சிறு வயதி லிருந்தே நமது துர்ச் சுபாவங்களை நாம் அடக்கிவர வேண்டும். அப்படிக்கின்றி அச் சுபாவங்கள் நம்மை அடக்கி ஆளு மாறு விட்டுவிடுவோமாயின், அது என்றைக்காயினும் நம்மைப் பழி வாங்கியே தீருமென்பது இச்சிறு கதையால் அறியலாம்.

---

குடும்ப நண்பன், சமய சஞ்சீவி

**கனகேசம் பாம்**

என்பதில் தடையென்ன? அதைத் தேய்த்தவுடன் எல்லாவித தலைநோய் இடுப்பு கை கால் வலி, வாதநோய்கள், வீக்கம், சுளுக்கு, ரணம், விஷக்கடிகள் ஆகியவை நீங்கள் ஆச்சரியப் படுமாறு பறந்து போகும்.

கனகேசம் & கோ., பவழக்காரத் தெரு, சென்னை.

# இரவி மைந்தன் வள்ளன்மை

[கரவேட்டி, ச. கந்தையா]

"குன்றாடு கொழுமுகில் போல், குரைகடல் போல், குவளை கள் போல், நின்றாடு கணமயில் போல்" நிறமுடைய நெடுமாலான வர் பாரதப் பெரும்போரில் பாண்டவரைக் காத்தருளும் செய லினையே விரதமாகப் பூண்டிருந்தார். அற்றைப் போழ்தில், கர்னனும் விஜயனும் இயற்றவிருக்கும் சமரிலே, கவசம், கனக குண்டல மாதியவற்றின் மகிமையினால் விஜயனைக் கர்னன் பஞ்சு போலும் ஊதிவிடுவா னென்பதை முன்னரே மாய னறிந்திருந் தான். காக்குந் தெய்வமான கண்ணன், தான் பிரத்தியேகமாக உதவி புரியும் பாண்டவர் மாண்டொழியாது நிலைத்தற்கான சூழ்ச்சி செய்வான் வேண்டி இந்திரனை வரவழைத்துப் பின் வரு மாறு உரையாட வாரம்பித்தான்.

"ஓ தேவர்கள் தலைவனே! வில்லின் வீரனும், நுமது புதல் வனுமான விஜயனை, கர்னன் தனது கவசம், கனககுண்டலமாதிய வற்றின் சக்தியாலும், சர்ப்பத்தி னுதவியாலும் அமரிடை அதஞ் செயின், நாடு நகர் சர்ப்பத்துவசனை வந்து சேருமே. போரிடைப் பாண்டவருக்கு நாம் வெற்றியை யாக்காவிடின், அதனாலாம் நிந்தை யுரை உண்மையில் உன்னையே சாருமன்றோ? எனவே, கவசம் கனககுண்டல மாதியவற்றை முன்னரே சூழ்ச்சியா லப கரித்தல் அவசியமாகும். சிறிதும் தாழ்த்தாது நீர் தபோதனர் வேஷத்துடன் தானகரனை அண்மி அந்தக் கவசகுண்டலங் களைத் தரும்படி இரப்பாயாயின், அவனு மவற்றை யளிப்பான். 'இல்லை' என்று சொல்லி யறியா வம் மன்னன் உயிரே யாயினும் ஈந்திட விழைவான்.

"வல்லார் வல்ல கலைஞருக்கும் மறைநூ லவர்க்கும் கடவுளர்க்கும்
இல்லாதவர்க்கும் உள்ளவர்க்கும் இறந்தோர்தமக்குந் துறந்தவர்க்கும்
சொல்லா தவர்க்கும் சொல்பவர்க்கும் சூழும் சமயா திபர்களுக்கும்
அல்லா தவர்க்கும் இரவிமகன் அரிய தானம் அளிக்கின்றான்."

அவ்வேந்தன் தருமமே யுயிர்க்குறு துணையெனும் உறுதி யுடையான்; அருங்கலைவல்லான்; அந்தணராதிய அனைவருக்கும் அவரவர் வேண்டியனவற்றை, அன்றலர்ந்த மலரெனத் திகழும் முகத்துடன் தானமாக அளித்துவரும் தகைமையினன். நீரு மவன்மாட் டெய்தி அவ்விரு பொருட்களையும் உமக்குரிமை யாக்கிக்கொள்க. அதன்பின் பூவுலக மன்னர் யாவருந் திரண்டு

வந்தாலும் காண்டீபன் முன் நிற்றலும் இயலாது. செல்க, விரைந்து செல்க" எனப் பணித்தான் பரந்தாமன்.

அந்தர வேந்தனும் இந்திரனும் ஓர் விருத்த வேதியன் வேஷந் தாங்கி, தளர்ந்த நடையுடன் கர்னன் மாளிகையைக் கிட்டினான். வாயிற்காவலர் முனிவரைத் தடுத்து "இரப்போரை ஓம்பி இறைவன் மாளிகையி னுட்புக்கான். ஆதலின், இவ்விரவு கழித்துப் புலரிப்போழ்தில் வந்தணைமின்" என வேண்டினர். ஆண்டது வறிந்த வரசன் "அடியவரை உள்ளே விடுக?" என இயம்பி, அன்னவர் பாததாமரைகளைச் சிரமேற்சூடி நமஸ்கரித்துப் பொன்னி னாசனத்திருத்தி, மெய்யன்புடன் "நீவிர் ஈண் டெழுந்தருளுதற் கென்ன மாதவம் செய்தனன்" எனப்போற்றி, "தேவரீர் விழைந்து வந்தது யாதோ" என வேண்டி நின்றனன்.

"அருத்தி யீதல்பொற் சுரதரு வினுக்குமற்
றரிதுநீ அளித்தியோ வென்று
விருத்த வேதியன் மொழிந்திட நகைத்துநீ
மெய்யுயிர் விழைந்திரந் தாலும்
கருத்தி னோடெனக் களித்திலே னெனிலெதிர்
கறுத்தவர் கண்ணிணை சிவப்ப
உருத்த போரினிற் புறந்தரு நிருபர்போ
யுறுபத முறுவனென் றுரைத்தான்."

"ஈகையிற் சிறந்த கற்பக விருட்சத்திற்கு மரியது; அத்தகைய தானம் நும்மாற் கொடுக்கப்படுமோ" வென்றுரைத்தான் விருத்த வேதியன். அதுசமயம் கர்னன் புன்னகை புரிந்து "எனதுயிரையே நீர் விழைந்தாலும் அதனை யான் மனப்பூர்வமா யளிக்கத் தவறின், முரணி யியற்றும் சமரிடை, மாற்றலர்க் காற் றாது முதுகுகாட்டி வெருவியோடும் போலிவீரர் போயுறும் நரக வேதனை என்னையும் சாரும்" எனப் பதிலிறுத்தான். ஏற்ற சமயந்தேடி நின்ற வேதியன் அதுசமயம் கவசம், கனககுண்டல மாதியவற்றை வேட்டுநிற்ப, அவற்றை அக மகிழ்வுட னுபகரிக்கும் அற்றைப்போழ்தில், அந்தரத்தே தனி யசரீரி ஒன்று "தந்திரத்தினால் இந்திரன்தனை மாயவன் ஏவினான். ஆதலின், வழங்கல் ஒழிக" என எழுந்தது. அதனைக் கேட்டும் சிந்தை கலங்காது, கர்னன் அவற்றை உபகரித்தான். இதனை,

"இந்தி ரன்றனை விரகினான் மாயவன் ஏவினான் வழங்கனீ என்ன
சிந்தை யின்கணோர் கலக்கமற் றளித்தனன் செஞ்சுடர்த் தினகரன்
[சிறுவன்"

என்பதா லறியலாம். வஞ்சனையாற் கவர்ந்த விண்ணோர் வேந்தன், தண்டுளாய் மௌலியிடம் சென்று நடந்தனவற்றைக் கூறி விடைபெற்றுச் சென்றான்.



பின்னர், 'கர்னனிடம் போய் குறித்த இரு வரங்களையும் பெற்று வருதி' எனக்குந்தி தேவியை மாயாஜாலமாலவன் விடுத்தான். அவளும் மைந்தனை யண்மி 'யான் உனது அன்னை' எனக் கூறலும் அவன் சற்றும் நம்பாது 'நீ எனைப் பயந்தவளாயின் என்னிடத் துளதாகிய போர்வையை யணிக. எனது தாயலாதார் அதனைத் தரித்தால் அவர் என்புருவாதல் சத்தியம்' எனக் கூறி முடிக்குமுன் 'படாமதை என் கையிற் கொடு' வெனக் கூறிப்பெற்று, உடற்படப் போர்த்து 'ஈன்றதாய் யானே' என இறும்பூதெய்தி நின்றாள் குந்திதேவியார். கர்னன் கண்டான். 'என்மே லன்பின்றியோ, அன்றி வசைக்கஞ்சியோ இதுவரை என்னைக் கைவிட்டாய்? இனி யான் யாதுசெய்ய வல்லேன். எனக்குக் கொற்றமா மகுடம் புனைந்து, அரசளித்து, உடனுண்டு, சகல வரிசைகளும் எனக்குபகரித்தான் சர்ப்பத்துவசன். ஆதலின், அவனுக்காகச் செருமுனையில் நின்று அவனது சோற்றுக் கடனைத் துடைப்பதே புகழுடையார் செயலாகும்' என மனங் கவன்று கழறினான். அதனைக் கேட்ட குந்தியார் நடந்தது ஒழிக. இனி யாது செய்வது. இது போழ்து எனக்கு இரு வரம் தருவாயாக. ஒன்று, பார்த்தன் வெஞ்சமரில் நின்னிடைமலையும் போழ்தில், அரவப் பகளியை அவன்மீது நீ ஒருமுறை விடுத்தானதும் அவன் அதனின்றும் பிழைத்தானெனின், மீண்டும் அதே சரத்தை அவன்மீது தொடுக்காது விடுக்க. மற்றையது, அர்ச்சுனன் தவிர்த்த ஏனைய தம்பிளவல்களை முரணிச் சமரிளைக்காது விடுக' என வேண்டினள். அம்மாற்றங் கேட்ட தவமைந்தன்,

"தெறுகணை யொன்று தொடுக்கவு முனைந்து
செருச்செய்வேன் சென்னியோ டிருந்தால்
மறுகணை தொடுப்ப தாண்மையோ? வலியோ?
மானமோ? மன்னவர்க் கறமோ?
உறுகணை யொன்றே பார்த்தன்மேற் றொடுப்பன்
ஒழிந்துளோ ருய்வர்"

எனக்கூறி அன்னையை மகிழ்வித்தான். (தொடரும்.)

---

சுருக்கமா யில்லாத கிளைச்சங்க அறிக்கைகள் இனி கண்டிப்பாய் பிரசுரிக்கப்பட மாட்டாதென் பதைத் தெரிவித்துக் கொள்ளுகிறோம். (ப-ர்.)

# இலங்கையில் செங்குந்தர் எப்போது குடியேறினர் ?

[மா. அ. கனகசபை முதலியார், சென்னை]

இப்போது இலங்கைத் தீவில் வசித்துவரும் செங்குந்தர்கள், பல நூற்றாண்டுகளுக்கு முன் தொண்டை மண்டலத்திலிருந்து வந்து குடியேறினர் என்பதற்குப் போதிய ஆதாரங்கள் இருப்பதாகச் சொல்லுகின்றனரே யன்றி, எக்காலத்தில் எக்காரணம் பற்றிக் காஞ்சீபுரத்திலிருந்து கடல் கடந்து இலங்கைக்குப் போந்தனர் என்பதைத் தெளிவாக சரித்திர ஆதாரத்தோடு இதுகாறும் எவரும் கூறியதாகத் தோன்றவில்லை. சரித்திரம் எழுதிவைக்கும் பழக்கம் நம் நாட்டவர்க்கு பண்டைக் காலத்தில் இல்லையாதலால் இதைத் தெளிவாகக் கூறுவது இயலாததொன்றே யாகும்.

ஆயினும், இலங்கைச் சரித்திரத்தைக் கூறும் **மகாவம்ச** மென்னும் நூலில், 47-வது அதிகாரத்தில், சில காலம் காஞ்சீபுரத்தில் வசித்துவந்தவனாகிய **மானவம்மன்** என்னும் இலங்கை அரசனது வரலாறு கூறப்பட்டிருப்பதை நோக்குமிடத்து, அவ்வரசன் காலத்தில்தான் செங்குந்தர்கள் காஞ்சியிலிருந்து போந்து இலங்கையில் குடியேறினர் என ஒருவாறு தீர்மானிக்கவேண்டியிருக்கிறது. அப்பகுதியின் சாராம்சம் கீழ்க்கண்டவாறு:—

"இரண்டாம் ஹத்ததத்தன் இறந்த பிறகு **மானவம்மன்** இலங்கைக்கு அரசனானான். இவன் எக் குடும்பத்தவன்? எவன் மகன்? இவனுக்குப் பட்டம் எவ்வாறு கிடைத்தது? என்று விசாரிக்கின், மானவம்மன் மகாசம்மத குலத்தவன். அரசர்க்குரிய பெருங் குணங்கள் அமையப்பெற்றவன். **துபாமவை** அழித்த கஸ்சப்பன் மகன். இவன் **சங்கர்** என்னும் **மலே** நாட்டு அரசகுமாரியை மணந்து வட இலங்கையில் மறைவாக இருந்து அவளோடு வாழ்ந்து வந்தான். இச்செய்தி ஹத்ததத்தன் காதிற் கெட்டியபோது இலங்கையினின்றும் வெளியேறி, காஞ்சீபுரத்தில் அரசாண்டு வந்த **நரசிம்மவர்மன்** என்னும் பல்லவகுலத்தரசனை யடுத்து, அவனிடம் நட்புகொண்டு, அவன் சேனையில் ஒரு உத்தியோகம் பெற்று அரசன் தன் திறமையை மெச்சுமாறு நடந்து வந்தான். அவ்வரசனது நட்பு, போதிய அளவு வலுப்பெற்றதென்று அறிந்தவுடனே தன் மனைவியைத் தருவித்து அவளோடு வாழ்ந்துவந்தான். அச்சமயம் **கண்டுவேதி** என்னும் மற்றொரு அரசன் நட்பையும் பெற்று தானும் ஒரு அரசனைப்போலவே இருந்துவரு நாளில், இவன் மனைவி நான்கு ஆண்மக்களையும் நான்கு பெண்மக்களையும் பெற்றாள்.

காஞ்சிக் கிறைவனான நரசிம்மவர்மன், ஒருநாள் யானை மீதேறி மானவம்மனோடு உல்லாசமாக உலாப் போந்தான். அரசனுக்குத் தாக முண்டாகவும் யானையின் மீதிருந்தபடியே ஒரு இளநீர் பருகிவிட்டு, அதில் மிகுதியாயிருந்த இளநீரோடு வழுக்கையை, அருகே நின்ற **மானவம்மனைக்** கவனியாது வேறு யாரோ ஒரு வேலைக்காரனென எண்ணி நீட்டினான். மானவம்மன் அதை ஏற்றுக்கொண்டு 'இவ்வரசன் என்னுடைய நண்பன். இவன் பருகி எஞ்சி நின்றதை யான் பருகினால் வரும் இழுக்கென்னை? அது எவ்வகையினும் குற்றமாகாது' என்று எண்ணிக்கொண்டே பருகினான். துன்பந் துடைக்கும் கருத்துடைய அறிஞர்களது செயல் இப்பெருந் தன்மையதாகவேயிருக்கும். அச்சமயம் யானைமீதிருந்த அரசன் திரும்ப நேர்தலும் தான் அறியாது செய்த குற்றத்தை யுணர்ந்தவராய்ப் பயந்து, அதற்குப் பரிகாரமாக **மானவம்மன்** கையிலிருந்த இளநீர்க்காயைப் பற்றி, அதில் மிகுந்திருந்ததைத் தான் குடித்தான். இதுவே எப்போதும் பெருந்தகையாளரது செயலாகும்.



அதுமுதல் நரசிம்மவர்மன் மானவம்மனை உணவு, இருக்கை, மரியாதை, ஆடை முதலியவற்றில் தனக்குச் சமமாகவே வைத்து நடத்திவந்தான்.

இவ்விருவரும் இவ்வாறிருந்து வருநாளில், வல்லபன் என்னும் ஓர் வேற்றரசன் நரசிம்மவர்மன் மீது படையெடுத்து வந்தான். அப்போது நரசிம்மவர்மன் 'தன் பிறப்புரிமையாகிய இராஜ்ஜியத்தை நமது உதவியால் பெறலாம் என்ற எண்ணத்தோடு வெகு ஜாக்கிரதையாக இரவு பகலாய் நமக்கு ஊழியஞ் செய்துள்ளான் இவன். இப்போது இவனைப் போர்க்களத்திற்கு அழைத்துச் சென்றால் ஒரு சமயம் இவன் உயிர் துறக்கவும் நேரலாம். அப்போது அவனது கோரிக்கையும் நமது இஷ்டமும் நிறைவேறா' என்று எண்ணி, **மானவம்மனை** காஞ்சியிலேயே இருக்கவிட்டுத் தன் சேனைகளோடு யுத்தத்திற்குத் தனியே சென்றான். **மானவம்மனோ** 'யுத்தத்திற்குச் சென்ற அரசன் இறந்துபடுதலுங் கூடும். அது நேருமாயின் யான் மாத்திரம் இருந்து பயனென்ன? நண்பனு மின்றி, உதவியு மின்றியன்றோ இருப்பேன். அவ்வாறாயின், யான் செய்த நட்பு வீணாகவன்றோ போகிறது. ஆபத்தில் உதவுவான் என்ற எண்ணமின்றி வேறு எதற்காகத்தான் அரசன் என்னைத் தனக்கு சமானமாக வைத்து நடத்திவந்தான். ஆகவே அரசனோடு யானும் போர்க்களஞ் சென்று, அவனோடு சேர்ந்து போர்புரிந்து ஜெயத்தையோ, அபஜெயத்தையோ, சாவையோ, வாழ்வையோ எனது நண்பனாகிய அரசனோடு இருந்து அனுபவிப்பதுதான் நியாயம்' என்று எண்ணி உடனே ஒரு பெருஞ் சேனையைத் திரட்டி, யுத்தத்திற்கு வேண்டிய ஆயத்தம் செய்துகொண்டு, தான் ஒரு கம்பீரமான யானையின் மீதேறிப் போர்க்களத்தை நோக்கிப் புறப்பட்டான். நரசிம்மவர்மனைக் கண்டான். அரசன் அவனைக் கண்டதும் பேரானந்தங் கொண்டவனாய் 'இவன்மேல் நாம் வைத்த நம்பிக்கை சரியாக வைக்கப்பட்டது என்று இப்போது தெரிகிறது' என்று கூறிப் பொங்கி வழிந்தான்.

# அது என்ன?

1. வயிறு பருத்திருக்கும், வழியெல்லாம் நின்றிருக்கும்
பயறு வடைதின்னும், பார்ப்பவரைக் குட்டவைக்கும்
—அது என்ன?

2. எங்குந் திரியும், இருட்டில் இரைதேடும்
பங்கு கறிசோறும் பாலும் பல திருடும்—அது என்ன?

3. செக்கச் செவந்திருக்கும், சீர்தட்டுக் கோலெடுக்கும்
பக்குவத்தில் தூளாகும், பாவையர்கள் கைவசமாம்
—அது என்ன?

4. பள்ளத் தண்ணீர் குடிக்கும், பஞ்சுகளால் போர்த்திருக்கும்
உள்ளே வெளுத்திருக்கும், உருக்கினால் நெய்யாகும்
—அது என்ன?

5. பானை சுமப்பான், பலபேரை மாய்த்திடுவான்
தானாக நிற்பான், தாயை வணங்க வைப்பான்
—யார்?

6. ஒற்றைக் காலில் நிற்பான், ஓடி யயர்ந்திடுவான்
பெற்ற தாயினை யணைவான், பேசத் தெரியாது—அவன் யார்?

சென்ற மாத இதழ் 527-ம் பக்கத்தில் வெளியிடப் பெற்ற அது என்ன என்பவற்றின் விடைகள்.

(1) வெற்றிலை. (2) பாக்கு. (3) கயிற்றுக் கட்டில். (4) பரமன். (5) வாழை. (6) கத்தரிக்காய்.

---

(முன்பக்கத் தொடர்ச்சி)

பிறகு, மானவம்மன் சேனைகள் அரசன் சேனைகளோடு ஒன்று சேர்ந்து பகைவனான வல்லபன் சேனையைத் தோற்றோடச் செய்தன. மானவம்மன் போர்க்களத்தில் புகுந்து தேவாசுர யுத்தத்தில் நாராயணனைப்போல், பகைவர்களை நாலா பக்கங்களிலும் முறியடித்துச் சின்னாபின்ன மாக்கினான்.

நரசிம்மவர்மன், மானவம்மன் வீரத்தன்மையைக் கண்டு மிகவும் சந்தோஷப்பட்டு, அவனைத் தன் மார்போடு அணைத்துக்கொண்டு 'உண்மையாக நீயே எனக்கு வெற்றி தந்தாய்' என்று சொல்லிப் புகழ்ந்தான். பிறகு அரசன் தன் நகருக்குத் திரும்பிவந்து வெற்றியின் ஞாபகார்த்தமாக ஒரு விருந்து வைத்து மானவம்மன் சேனைகளுக்குத் தக்கபடி பரிசளித்தான்.

(தொடரும்)

# செங்குந்த யாத்திரைவாசி

(529-ம் பக்கத் தொடர்ச்சி)

விண்ணகர வாசிகளே! யான் இதுவரையில் பேசியதிலிருந்து சீர்திருத்தத்தையே ஆதரித்து வந்தேனென்றும், புரட்சியை ஆதரிக்கவில்லையென்றும் அறிந்திருப்பீர்கள். புரட்சியானது நமது தேச மக்களின் மனப்பான்மை, சீதோஷ்ண ஸ்திதி முதலியவற்றிற்குப் பொருந்துமாறு பல நூற்றாண்டுகளுக்கு முன்னரே நமது ஆன்றோர்கள் தங்கள் அனுபவத்தைக் கொண்டு ஏற்படுத்தியுள்ள நன்மை பயக்கவல்ல பல ஸ்தாபனங்களையும், பிறவற்றையும் அடியோடு அழித்துத் தீமை பயப்பதே யன்றி மக்களிடையே குழப்பத்தையும், கலகத்தையும் உண்டாக்குமென்பதில் ஐயமில்லை. என்றாலும், ஆன்றோர் பெயரால் அர்த்தமற்றவையாயும், அறிவாளிகள் ஒப்புக்கொள்ளக் கூடாதவையாயு முள்ளவை பழக்கத்தில் வந்து அவற்றின் இடையிடையே மறைந்து பாமரமக்கள் பிரித்தறியா வண்ணம் கலந்து இருக்கின்றன. நல்லவையோ தீயவையோ வழக்கத்தில் வந்து விட்ட பிறகு நம் நாட்டவர் அவற்றை விடவே மாட்டார்கள். இவ் விஷயத்தில் செங்குந்தர்களைப் பற்றிச் சொல்ல வேண்டியதே யில்லை. சீர்திருத்தம் என்ற சொல்லைக் கேட்ட வுடனே "இவன் கடவுள் இல்லை யென்கிறான்" என்ற ஒரே கூச்சல் போடுகிறார்கள் வயோதிகர்கள். புரட்சி யென்றால் சொல்லவும் வேண்டுமோ! சொல்வது நியாய மானதா இல்லையா யென்று பகுத்தறிந்து பார்ப்பதே யில்லை. நமக்கு எட்டாத அல்லது தெரியாத விஷயங்களில் நாம் நுழைந்து குற்றங்கூறத் துணிவதோ சீர்திருத்த முயல்வதோ கூடாதுதான். நமக்கு இதனால் உண்டாவது தீமை என்று தெரிந்தவற்றைக்கூட சீர்திருத்த இடந்தராது நிற்பது சரியானதா? மக்களுக்குப் பகுத்தறிவென்பது சிறப்புக் குணம் என்பதையும் கவனிப்பதில்லை. இதுதான் நம் நாட்டவர்களின் புத்தி மங்கிப் போவதற்கு முக்கிய காரணமாகும். ஆகவே நமது பகுத்தறிவைக் கொண்டு கூடியவரையில் நாம் சீர்திருத்திக் கொள்ள வேண்டியதே நமது முக்கிய நோக்கமாக இருத்தல்வேண்டும். இது பற்றியன்றோ நாயனாரும் 'எப்பொருள் யார்யார்வாய்கேட்பினும் அப்பொருள் மெய்ப்பொருள் காண்பது அறிவு' என்றார். புரட்சியை ஆதரித்தல் தகுதியுடைய தாகாது.

அன்பர்களே! இதுவரையில் பொதுவாக சீர்திருத்தத்தை ஆதரித்துப் பேசினேன். நாம் இப்போது கவனிக்கவேண்டிய விஷயம் சமயத்தின் ஒரு பகுதியாகிய குருமார்களைப் பற்றியே யாகும். இனி அதைப்பற்றிக் கவனிப்போம். நமக்கு குருமார்கள் வேண்டியதுதான். குரு என்னும் சொல்லுக்கு இருளை அதாவது அஞ்ஞானத்தை

ஓட்டுவோர் என்றும், ஆச்சாரியர் என்பதற்கு சாஸ்திரங்களின் கருத்துக்களைத் திரட்டி வைத்திருப்போர் என்றும் பொருள் கூறுகின்றனர். ஆகவே குருக்கள் அல்லது ஆச்சாரியர் என்போர் கல்வி கேள்விகளில் தேர்ந்தவர்களாய், இயற்கை யறிவோடு செயற்கை யறிவும் அமைந்தவர்களாய், நல்லொழுக்க முடையவர்களாய், பக்தியிற் சிறந்தவர்களாய் இருத்தல் மிகமிக அவசியமாகும். அவர்களும் ஒரே குடும்பத்தில் தந்தைக்குப் பின் மகன் என்று பரம்பரையாய் வரவேண்டும் என்கிற நிபந்தனை இருத்தல்கூடாது. ஒரு குருவின் மகன் மேற்கூறிய தகுதிகள் வாய்க்கப்பெற் றிருப்பாராயின், அவரை அவர் தந்தைக்குப் பின் குருவாகக் கொள்ளுதல் மிகவும் பொருத்த முடையதே யாகும். இதை எவரும் ஆக்ஷேபிக்கமாட்டார்கள். ஆனால் ஒரு தகுதியும் இல்லாதவரைக் குருவின் மகன் என்ற காரணத்தால் குருவாகக் கொள்வது பொருத்தமுடையது ஆகவே, ஆகாது. இதை நீங்கள் குருத்துரோகம் என்று எண்ணக்கூடாது. எங்கள் குடும்பத்துக் குரு எல்லா யோக்கியதைகளும் உடையவர். அவருக்கு ஒரே மகன் உண்டு. தவங்கிடந்து பெற்ற மகன். ஆனால் ஆச்சார்ய ஸ்தானத்திற்கு யோக்கியதை யற்றவர். ஆகவே அவர் தந்தையாகிய எங்கள் குருக்கள் தமது கடைசி காலத்தில் தமது ஏகபுத்திரனுக்கு "ஆச்சார்ய அபிஷேகம் செய்து வைக்கமாட்டேன், அவன் அதற்கு அருகனல்ல வாகையால். அபிமானத்தால் செய்வேனாயின் யான் பெரும்பாவம் செய்தவனாவேன். என்னுடைய சீடர்கள் எனக்குப் பின் வேறு யாரையாவது குருவாக வைத்துக்கொள்ளட்டும்" என்று தீர்மானமாகச் சொல்லிவிட்டார். அவரன்றோ நேயர்களே! உத்தமமான குரு. இதைவிட நமக்கு வேறு என்ன மேற்கோள் வேண்டும். இதுவன்றோ உத்தம குருவின் உபதேசமாகும். அப்பெரியாரது பொன்போன்ற வார்த்தைகளை யான் பின்பற்றி வருகிறேன். தகுதி யற்றவர்களை ஆச்சாரியனாக்கியவன் இன்னின்ன பாவங்களுக்குள்ளாவான் என்று சாஸ்திர மேற்கோளும் எடுத்துக் காட்டினார். எனக்கு அப்போது வயது பன்னிரண்டு. நன்றாய் ஞாபக மிருக்கிறது.

‘குருட்டினை நீக்கும் குருவினைக் கொள்ளார்
குருட்டினை நீக்காக் குருவினைக் கொள்வர்.
குருடும் குருடும் குருட்டாட்ட மாடி
குருடும் குருடும் குழிவிழு மாறே’ —திருமந்திரம்

என்றல்லவோ முடியும் தகுதியற்றவரை நாம் குருவாகக் கொள்வது.

பிற சமயத்தவரைப் பாருங்கள். குருவின் மகன் குருவாகத்தான் வரவேண்டுமென்ற ஏற்பாடு கிடையாது. நமது நாட்டிலோ ஒன்று மறியாதவர்கள் எத்தனையோ பேர் குருக்களாகவும், மடாதிபதிகளாகவும் இருந்து வருகிறார்கள். ‘மன்ன னெவ்வழி மன்னுயி ரவ்வழி’ என்றாற் போல் ‘குரு எவ்வழி சீடன் அவ்வழி’ என்று கூறுவது மிகையாகுமா? சில குருமார்கள் சிறுதேவதை ஏவல் முதலிய



வற்றைக் கற்றுக்கொண்டு பாமர மக்களை ஏமாற்றியும் வருகிறார்கள். குருக்கள் என்ன தீங்கை நமக்குச் செய்து விடுவாரோ என்று பயந்து நடுங்கும் சீடர்களும் பலருண்டு. இத்தகையோரால் பொது மக்களுக்குண்டாகும் நன்மைதான் என்னவென்று நன்றாய் யோசித்துப்பாருங்கள். இதைக் காணும் புரட்சிக்காரர்கள் குருமார்களை அடியோடே ஒழித்துவிட வேண்டுமென்று ஏன் பிரசாரம் செய்யமாட்டார்கள்! அப்பிரசாரத்தைக் கேட்கும் உங்கள் இளைஞர்கள் ஏன் அதைச் சரியெனயேற்றுக்கொள்ள மாட்டார்கள்! புரட்சிக்காரரை நிந்திப்பானேன்? குருமார்களைத்தான் நிந்திப்பானேன்? வலிய வருவதை வேண்டாமென்று யார்தான் சொல்லுவார்கள்? ஆகவே குற்றம் சீடர்களாகிய நம்முடையதே யாகும். குருமார்களையாவது மற்றெவரையாவது நிந்திக்கவேண்டு மென்பது எனது கருத்தல்ல. கூர்ந்து யோசியுங்கள். நல்லதெனத் தோன்றினால் எடுத்துக்கொள்ளுங்கள்; இல்லையேல் விட்டுவிடுங்கள். என் மனதிற்குச் சரியெனப் பட்டதைச் சொல்லுகிறேன்.

பெரியோர்களே! வயோதிகர்களாகிய நீங்கள், எங்கள் பிள்ளைகள் புரட்சிக்காரர்க ளாய்விட்டார்கள்; கோயில் வேண்டாம், குரு வேண்டாம் என்கிறார்கள்; அதனால் உலகமே முழுகிப்போய் விட்டது என்று பயந்து நடுங்குகிறீர்கள். அதற்குக் காரணம் யாரென்று நினைக்கிறீர்கள்? நீங்கள் தான். ஏன்? தகுதியுடையவர்களைக் குருமாராக நியமிக்காத குற்றம் உங்களுடையதல்லவா? உங்களூருக்கு வருடந்தோறும் விஜயஞ்செய்யும் குருமார்கள் எவராவது உங்களுக்குச் சமயபோதனை செய்திருக்கிறார்களா? அவர்களுக்கே தெரியாததை உங்களுக்கு எப்படிப் போதிப்பார்கள்? உங்கள் பிள்ளைகளுக்குச் சரியான சமய போதனை இருந்திருக்குமாயின் அவர்கள் இப்போது புரட்சிக்காரர்கள் ஆயிருப்பார்களா? கோயில் வேண்டா மென்பார்களா? குரு வேண்டா மென்பார்களா? காணிக்கை தரத் தயாராயுள்ள நீங்கள் அதைப் பெறுவோர் தங்கள் கடமையைச் சரிவரச் செய்கிறார்களா என்று கவனிக்க வேண்டாமா? ஆகவே குற்றம் யாருடையதென்று உங்களுக்கு இப்போது விளங்கவில்லையா?

(தொடரும்.)

---

**மாகாண புத்தகசாலை**

**எல்லாப் புத்தகங்களும் விலைக்குக் கிடைக்கும்**

வேண்டியவற்றிற்கு எழுதுங்கள்

**செங்குந்த மித்திரன் ஆபீஸ்,**

151, பவழக்காரத் தெரு சென்னை.

# அதிசயம், அற்புதம், ஆச்சரியம்

## நீரை வெட்டியெடுக்கும் விநோதம்

பூமிக்கு அடியில் சுரங்கங்களை வெட்டிக்கொண்டு போகும் போது நீர் ஊற்று அதிகமாக விருந்தாலும், அதை இறைப்பதற்கு இயந்திர சாதனம் போதாம லிருந்தாலும், பூமிக்குள் குழாய்கள் செலுத்தப்பட்டு அவைகளின் மூலமாய் அந் நீர்ப் பகுதிகள் எல்லாம் பனிக் கட்டிகளாக உறையும்படி செய்யப்படுகின்றன. பின் அவை கற்களைப் போல வெட்டி வெளியேற்றப்படுகின்றன. இவ் வற்புத வேலை லண்டன் விஞ்ஞானக் காட்சியில் செய்து காட்டப்பட்டது.

## திருடனைக் கண்டுபிடிக்க

கட்டடங்களில் கன்னக் களவு செய்யும் திருடரைக் கண்டு குரைக்கும் நாயின் சப்தம், ஆகாயவசனிக் கருவியின் மூலம் பெருக்கப்பட்டு அப்பாற் செல்லும்படியாகவும், அதன் மூலமாகவே 'யார் அங்கே?' என்னும் ஒரு மனிதன் ஓசை திருடர் இருக்குமிடத்திற்குத் தானே வரும்படியாகவும் ஒரு நூதனப் பொறியை லண்டன் ஒலிம்பியா காக்ஷியில் அமைத்திருக்கிறார்கள். அந்தப் பொறியை எந்த அறையிலும் பொருத்திக்கொள்ளலாம். திருடர் கட்டடத்திற்குள் நுழைந்ததும் அந்தப் பொறி தன் வேலையைச் செய்ய ஆரம்பித்து விடுகிறது.

## முகர்ந்து பார்க்க இயந்திர மூக்கு

மூக்கின் முகரும் சக்தியைப் பன்மடங்கு அதிகமாக்கிக் காட்டக் கூடிய இயந்திர மூக்குச் சாதனம் ஒன்று கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது. ரசாயன முறைகளால் கண்டுபிடிக்கப்பட வேண்டியிருக்கும் வாசனைகளை அச் சாதனத்தால் லட்ச மடங்கு சீக்கிரத்தில் அறிந்து கொள்ள முடியுமாம். அம் முறை, ரசாயன ஆராய்ச்சிக்காரர்களின் மூக்கு சோர்வடையாம லிருக்கும்படி காப்பாற்றுவதற்காக அமைக்கப்பட்டிருக்கிறதாம்.

## உரு மாறுங் கிளி

கோவை ஜில்லா காரமடையில் ஸ்ரீ சாமராஜ கந்தசாமி முதலியார் வீட்டில் ஒரு நூதன கிளி இருக்கிறது. அது பல வர்ணங்களுடையது. கழுத்துக்கு மேல் வெண் பச்சை, ரோஸ், நீலம் ஆகிய நிறங்கள் கலந்துள்ளன. கழுத்து பூரா கறுப்பு. கொண்டை நீலம். மேல் பாக மூக்கு மஞ்சளும், வெள்ளையும் கலந்தது. கண்கள் நீல நிறம். கால்கள் பச்சை. இறகுகள் பல வர்ணங்களுடையன. இந்த நிறங்கள் ஆறுமாதத்திற் கொருமுறை மாறுகின்றனவாம். ஒட்டக்கூத்தர் திருநாமத்தை அடிக்கடி உச்சரிப்பதால் இதற்கு ஆநந்தக் கூத்தர் என்று பெயரிடப்பட்டிருக்கிறதாம்.



## பசுவுக்குத் தூக்கு தண்டனை

மனிதர்கள் கொலைக் குற்றம் செய்தால் தூக்கு தண்டனை விதிப்பதுண்டு. ஆனால் ஜிகோஸ்லாவியாவில் ஒரு பசுவுக்குத் தூக்கு தண்டனை விதித்திருக்கிறார்கள். அந்தப் பசு ஒரு பெண்ணை முட்டிக் கொன்றுவிட்டதற்காகப் போலீஸார் அதைக் கைது செய்து கோர்ட்டில் விசாரணைக்குக் கொண்டுபோனார்களாம். ஜூரர்கள் வழக்கை விசாரித்துப் பசு குற்றவாளி யெனத் தீர்மானித்து அதற்குத் தூக்கு தண்டனை விதித்தார்களாம்.

## மாமியார் கூந்தலை வெட்டும் மருமகன்

ஆஸ்திரேலியாவின் வட பாகத்திலுள்ள சுதேசிகள் பெண்களைப் பெற்றெடுத்தால் மனங் கலங்குகிறார்களாம். அதற்குக் காரணம் அந்தப் பெண்ணுக்குக் கல்யாணம் நடந்ததும் மருமகன் மாமியார் கூந்தலை அடியோடு வெட்டித் தன் இடுப்பில் கட்டிக்கொள்வதுதான். மருமகன் கூந்தலை வெட்டும்போது மாமியார் யாதொரு தடையும் செய்யக் கூடாதாம். கூந்தலை இழந்து மொட்டையா யிருக்க எந்த மாமியாருக்குத்தான் இஷ்டமிருக்கும்?

## வாய் நிறையப் பற்கள்

கான்சாஸ் நகரில் மார்தா லார்ஸன் என்ற ஒரு பெண்ணுக்கு 232 பற்களுக்கு மேல் முளைத்திருந்ததாம். திடீரென ஒரு நாள் அந்தப் பெண்ணுக்கு வாய் முழுதும் வீங்கி அதிக வலி யுண்டாயிற்று. டாக்டர் பரிசோதித்துப் பார்த்ததில் வாய் முழுதும் பற்கள் முளைத்து வருவதைக் கண்டு சுமார் 200 பற்களைப் பிடுங்கிவிட்டாராம். அதன் பின்பு வலியும் நின்றுவிட்டதாம்.

## அதிசய மீன்கள்

சிங்கப்பூரை யடுத்த ஒரு காட்டில் மரமேறும் மீன்கள் இருக்கின்றனவாம். அது மட்டு மன்று. இன்னொரு வகையான மீன் அதே காட்டில் இருக்கிறதாம். அந்த மீன்களைத் தண்ணீரிலிருந்து எடுத்துப் பூமியில் தேய்க்க ஆரம்பித்தால் உடனே அவை காற்றை உட்கொள்ளத் தொடங்கி பந்துபோல் பெருத்துவிடுகின்றனவாம். அப்போது அதைக் கீழே பூமியில் அடித்தால் பந்தைப் போலவே உயரக் கிளம்புகிறதாம். மறுபடியும் அதைத் தண்ணீரில் விட்டதும் யாதொரு விபத்துமின்றி காற்றை வெளியில் விட்டு ஓடிவிடுகிறதாம்.

## போட்டோ படத்தில் இயற்கை நிறங்கள்

பொருள்களின் இயற்கை நிறங்களை உள்ளபடியே போட்டோ பிடிக்கக் கூடிய இயந்திர மொன்றை ஒரு பிரிடிஷ் விஞ்ஞானி கண்டு பிடித்திருக்கிறார். எனவே, இனிமேல் புகைப் படங்கள் கறுப்பும், வெளுப்புமாக மட்டும் இராது. இயற்கை நிறங்கள் எவ்வித மாற்றமுமின்றி எடுக்கப்படும். சினிமாப் படம் எடுப்பதில் தற்போது இது உபயோகிக்கப்பட்டு வருகிறது.

### ஆழத்தி லிருந்து வெந்நீர்

ருஷ்ய விஞ்ஞானி யொருவர் 3,900 அடி ஆழத்தி லிருந்து வெந்நீர் கொண்டுவந்து வீடுகளுக்குத் தரக் கூடிய நூதன கருவி யொன்றைக் கண்டுபிடித் திருக்கிறார்.

### தலை அசைந்தால் ஏடு திரும்புகிறது

போட்டோ எலக்ட்ரிக் ஸெல் சக்தியின் உதவியைக் கொண்டு நமது சிறு தலை அசைப்பினால் புஸ்தகங்களின் ஏடுகளைத் திருப்பவும், ஆகாய வசனி கம்பிப் பூட்டுகளைத் திறக்கவும், விளக்குகளை அணைக்கவும் ஒரு நூதன பொறியை ஒரு அமெரிகன் டாக்டர் புதிதாய்க் கண்டுபிடித் திருக்கிறார்.

### காகிதப் படகு

ருஷ்யாவில் காகிதப் படகு ஒன்றை அலக்ஸாந்தர் ஹார்ட்டிங் என்ற இஞ்ஜினீயர் செய்திருக்கிறார். இதில் 100 பேர் பிரயாணஞ் செய்யலாம். நல்ல பலமுடையதாகவும், நீடித்து உழைக்கக் கூடிய தாகவும், தண்ணீரால் கெட்டுப்போகாததாகவும் இருக்கிறதாம். இதை ஓட்ட இரண்டு இஞ்ஜின்கள் வைக்கப்பட் டிருக்கின்றன.


## தெய்வீக ஜோதிஷம்

உங்கள் ஜனன கால விவரம் அல்லது ஜாதக நகல் ஏதாவ தொன்றை குறிப்பிடவும்; அல்லது கடிதம் எழுதும்போது உள்ள நேரமும், சுமார் வயதும் தெரிவித்தால் எதிர்காலத்தில் நடைபெறப்போகும் பலன்களை சாஸ்திரீயமாக எழுதி அனுப்புகிறோம்.

| | | |
|---|---|---|
| ஒரு வருஷம் மாதவாரி பலன் எழுத | ... ரூ. | 2-0-0 |
| 5-வருஷங்களுக்கு மாதவாரி | ... ரூ. | 7-8-0 |
| ஒரு வருஷம் வாராந்திர பலன் | ... ரூ. | 10-0-0 |
| எதிர்கால சம்பந்தமான 5-கேள்விகளுக்கு பதில் எழுத | ... ரூ. | 1-0-0 |
| மேல் ஒவ்வொரு கேள்விக்கும் | ... ரூ. | 0-4-0 |
| வி. பி. செலவு | ... ரூ. | 0-4-0 |

சென்னை ஆந்திர பத்திரிகை எழுதுவதாவது :—"இவரது ஜோதிஷத் திறமையை நாம் மனப்பூர்வமாக விஞ்ஞாபனம் செய்துகொள்ளுகிறோம்."

சென்னை சுதேசமித்திரனில் ஸ்ரீமான் மணி எழுதுவது:— "எதிர்காலத்தை அறிந்து சொன்ன இந்த ஜோதிஷருக்கு வந்தனம் செலுத்தவேண்டும்."

வெளி நாடுகளுக்கு முன் பணம் அனுப்பிப் பெறவும்.

ஹனுமத் உபாசி **வி. கே. சடகோபாச்சாரியார்**

ஹனுமான் ஜோதிஷ ஆபீஸ், திருத்தணி, S. இந்தியா.


## விகடத் துணுக்குகள்

கடைக்காரன்:—டேய்! இருட்டில் என்னடா செய்துக்கொண் டிருக்கிறாய் ?

வேலைக்காரன்:—வத்திப்பொட்டி தேடிக்கொண் டிருக்கிறேன்.

கடைக்காரன்:—சீ மடையா! விளக்கை ஏற்றிவிட்டுத் தேடினால் அகப்படாதா?

K. காசி, புதுவை.

* * *

புரோகிதர்:—இன்னும் நான்கு நாட்களில் ஊர்ப்பொதுக்கூட்டம் நடைபெற வேண்டியதிருக்கிறது. சாவடிக்கூரையோ ஒழுகுகிறது. அடிக்கடி மழை பெய்கிறது.

மிராசுதார்:—நல்ல வேளை; ஞாபகப்படுத்தினீர்கள். நான் வரும் போது குடையுடன் வருகிறேன்.

—அ. தர்மலிங்கம், சங்கரன் கோவில்.

* * *

எஜமானன்:—நீ நம் வீட்டில் உண்மையாகவும், விசுவாசமாகவும் வெகுகாலமாக வேலை செய்து வருகிறபடியால் நான் உன்னை இனி மேல் என் குடும்பத்தில் ஒருவனாக மதிப்பேன்.

வேலைக்காரன்:—ரொம்ப சந்தோஷம் ஐயா!

எஜமானன்:—ஆகையால் இனிமேல் உனக்குச் சம்பளம் கிடையாது.

"லிங்கம்" காரவை.

* * *

தகப்பனார்:—கடிகாரம் 10 வருஷமாய் ரிப்பேர் இல்லாமலே ஓடிக்கொண் டிருக்கிறது.

பிள்ளை:—எங்கப்பா! நீ வாங்கிவந்து வெச்ச இடத்திலேதானே இருக்குது. எங்கே ஓடுகிறது?

N. கிருஷ்ணசாமி, கடலாடி.

* * *

நண்பர்:—அன்பா! கும்பகோணம் போகாமலேயே மாமாங்கம் பார்த்தேன் என்கிறாயே. அது எப்படி முடியும்?

அன்பன்:—ஏன் பார்க்கக்கூடாது? என் மாமா என்னமோ வீட்டில் இருக்கிறார். அவருடைய பருத்த தொந்தியை தினந் தோறும் தடவிக்கொடுப்பதும், சிரித்து மகிழ்வதுமாகவே நான் இருக்கும்போது என் மாமா அங்கத்தை கும்பகோணம் போய்தானா பார்க்கவேண்டும்? அந்தத் தொந்தி, மாமா அங்கத்தில் சேர்ந்த தில்லையா?

—A. R. சுந்தரம், கல்கத்தா.

காவல்காரன்:—(பூட்டைத்திறந்துகொண் டிருந்த திருடனைப் பார்த்து) அடே, இருட்டில் கதவண்டை என்ன செய்து கொண் டிருக்கிறாய்?

திருடன்:—ஒன்றுமில்லே; வீதியில் ஒரு சாவியைக் கண்டெடுத் தேன். அது எந்தப் பூட்டின் சாவி என்று பார்க்கிறேன்.

—*ஐ. து. சாமி, யாழ்ப்பாணம்.

* * *

ஒருவன்:—வைத்தியரே! தாங்கள் கொடுத்த மருந்திற்காக மிக்க நன்றி பாராட்டுகிறேன்.

வைத்தியர்:—தாங்கள் சாப்பிட்டுப் பார்த்தீர்களோ?

ஒருவன்:—நான் சாப்பிடவில்லே. என் மாமனுருக்குக் கொடுத் தேன். அதனுல் தற்போது நான் அவருடைய ஏராளமான சொத் துக்குச் சொந்தக்காரனுகி விட்டேன்.

—S. G. கதிர்வேல், ஆரணி.

* *

வம்பன்:—'எதிர்வீட்டில் என்னமோ பேசிக்கொண்டிருந்தார் களே' என்று ஏன் இவ்வளவு அக்கரையாய்க் கேட்கிறாய்?

சோம்பன்:—அதுவா! என்னமோ மேளம் தாளம் என்று காதில் விழுந்தது. ஏதாவது கல்யாணம் காட்சி நடக்குமா என்று செவ்வை யாகத் தெரிந்தால் வயிற்றை இன்றே காலி செய்து கொள்ளலாம் என்றுதான். —வை. கோ. இளையபெருமாள், ஆரணி.

* * *

பட்டிக்காட்டான்:—இது என்னுது யா?

கடைக்காரன்:—கிராமபோன்.

பட்டிக்காட்டான்:—எலிபோனு?

கடைக்காரன்:—இல்லே; கிராமபோன்.

பட்டிக்காட்டான்:—கிராமபோனு! அடே யப்பா! எலிபோன் எலி புடிக்கும். இது கிராமத்தையே புடிச்சுடுமோ என்ன?

—R. வீரபத்திரன், காஞ்சிபுரம்.

* * *

தாயார்:—ஏண்டா இப்படி சத்தம் போட்டுப் படிக்கிறாய்? உரக் கப்படித்தால் தொண்டை பெரிதாகிவிடும்.

பையன்:—தொண்டை பெரிதானுல் நல்லது தானே?

தாயார்:—அடமுண்டமே. தொண்டை பெரிதாகிவிட்டால் பின் னுல் உன் மனைவிக்கு எப்படி குசுகுசு மந்திரம் போடமுடியும்?

—T. E. G. கோதண்டபாணி, கொடவாசல்.

* * *

புதிய மருமகள்:—மாமி! பக்கத்தாத்து அம்மாமி மஞ்சள் பூசிக் கொள்கிறாளே. நீங்க மாத்திரம் ஏன் சோப்பு தேய்த்துக் கொள்கிறீங்க?

மாமியார்:—அதெல்லாம் பழைய காலத்து அநாகரீகப் பழக்கம். தற்காலத்தில் சோப்பு உபயோகிப்பதுதான் நாகரீகம்.

* பரிசு பெற்ற விகடம்.



மருமகள் அன்று சமையல் செய்தபோது மஞ்சள் தூளுக்குப் பதில் சாம்பார் முதலியவற்றிற்கு ஒரு கட்டி சோப்பைத் தூள்செய்து போட்டு விட்டாள்.

மாமியார்:—என்னடி இது, இப்படி நாறுகிறதே ?

மருமகள்:—நீங்கதானே சோப்பு உபயோகிப்பது புது நாகரீகம் என்று சொன்னீங்க!

—N. R. கிருஷ்ணன், ஆரணி.

* * *

நியாயாதிபதி:—போலீஸ் கான்ஸ்டேபில் வண்டியை நிறுத்தும் படி கையைக் காட்டியபோது நீ ஏன் நிறுத்தவில்லே?

மோட்டார் டிரைவர்:—அவர் எனக்கு சலாம் செய்கிறார் என்று நினைத்தேன். —A. தர்மலிங்கம், சங்கரன் கோவில்.

* * *

கணவன்:—கண்ணே! கல்யாணத்தை முடித்ததும் நம்மை வேறு குடும்பமாக்கி விட்டார்கள். நமது சம்சாரத்தில் உனக்கு தலைமைப்பதவி வேண்டுமா? மானேஜர் பதவி வேண்டுமா?

மனைவி:—அதெல்லாம் வேண்டாம்; 'காஷியர்' உத்தியோகம் கொடுத்தால் போதும்.

—T. M. செங்கோடன், திருச்செங்கோடு.

* * *

கோபு:—அடே, ராமு! பொடியா போடுகிறாய். வா, உங்க ளப்பாவிடம் சொல்லி விடுகிறேன்.

ராமு:—சொல்லிக்கோ, போடா.

கோபு:—உங்கப்பாவிடம் பயமில்லே? வாத்தியாரிடம் சொல்லி விடுகிறேன்.

ராமு:—யாரிடம் வேண்டுமானுலும் சொல்லிக்கொள். அதைப் பற்றி எனக்குப் பயமில்லே. நான்தான் பொடி டப்பியின்மேல் விபூதி டப்பி என்று எழுதி இருக்கிறேனே; என்னே யார்தான் என்ன செய் யக்கூடும் ? —ஏ. முனுசாமி, கலவை.

* * *

ஒரு பிரயாணி ரயில் ஓடும்போது கைப்பிடியை இழுத்து வண் டியை நிறுத்திவிட்டார்.

வண்டி கார்டு:—ஏன் வண்டியை நிறுத்தினுய்? உனக்கு என்ன ஆபத்து நேர்ந்தது?

பிரயாணி:—அதை ஏன் கேட்கிறீர்கள். மலபாதைக்கு அவசர மாக வந்துவிட்டது. எங்கே போவதெனத் தெரியவில்லே. இன்னும் சிறிது தாமதித்திருந்தால் பேராபத்தாய்ப் போயிருக்கும்.

—சா. துப்புசாமி முதலியார், செங்குந்தபுரம்.

# நமது தபால் பெட்டி

[நமது கழக சம்பந்தமாகவும், உலகப் பொது விஷய சம்பந்தமாகவும் சந்தாதாரர்களால் கேட்கப்படும் கேள்விகளில் முக்கியமானவற்றிற்கு இங்கு பதில் எழுதப்படும். உடனுக்குடன் விடை தெரிவிக்க இயலாத கேள்விகளுக்குச் சிறிது தாமதித்தாவது தகவலறிந்து விடை இறுக்கப்படும்.]

*கேள்வி : அகில இந்திய காங்கிரஸ் நிர்மாண திட்ட சம்பந்தமாகப் பிரசாரம் செய்யும் காங்கிரஸ் பிரசாரகர்கள் செங்குந்த சமூகத்தவருள் இருக்கின்றனரா? இருப்பின் அவர்கள் யாவர்?*

**—S. M. திருவுடையான், சங்கரன்கோவில்**

*பதில் : காங்கிரஸ் ஒரு பெரிய தேசீய ஸ்தாபனம். அதில் கலந்து உழைக்காத சமூகத்தவர்கள் இருக்கமாட்டார்களென்றே பொதுவாகக் கூறலாம். ஏனைய சமூகத்தவர்கள் காங்கிரஸ் அங்கத்தினர்களாகவும், தொண்டர்களாகவும், பிரசாரகர்களாகவும், தலைவர்களாகவும் இருந்து எந்த அளவுக்கு உழைத்து வருகிறார்களோ அந்த அளவுக்குச் செங்குந்த சமூகத்தவர்களும் உழைத்து வருகிறார்கள். காங்கிரஸ் இயக்கத்தில் ஈடுபட்டு, அதன் கொள்கைகளையும், நிர்மாண திட்டங்களையும் பரவச் செய்வதிலேயே தமது காலம் முழுதையும் செலவழித்துவரும் தியாகிகள் பலர் நமது சமூகத்தில் இல்லாமற் போகவில்லை.*

*பகிஷ்கார இயக்கம் பலமா யிருந்த காலத்து அதில் ஈடுபட்டுத் தேசீயத் தொண்டாற்றியதன் பரிசிலாகச் சிறைக் கோட்டம் நண்ணும் பேறு பெற்ற செங்குந்த இளைஞர்கள் அநேகர் குடியாத்தம், காஞ்சீபுரம், திருச்செங்கோடு, இராஜபாளையம் முதலிய ஊர்களில் இருக்கிறார்கள். பகிஷ்காரத் தொண்டில் தடியடி தர்பாருக்கு இலக்காகி உயிர் நீத்த செங்குந்த இளைஞரும் ஒருவர் உண்டென்பதை இச் சமயம் ஞாபகப்படுத்தா திருக்க முடியவில்லை. இவர்களே யன்றி திருவாளர்கள், S. பழநியாண்டி முதலியார், B.A., D. N. தீர்த்தகிரி முதலியார் போன்ற காங்கிரஸ் தலைவர்களும் நமது சமூகத்தில் சிலர் இருக்கிறார்கள்.*

*  *  *

*கேள்வி : செங்குந்தப் பெண்களில் ஆசிரியர்களாக இருப்பவர்கள் யாவர்?*

**S. ஆவுடையம்மாள், சங்கரன்கோவில்**

*பதில் : பெரும்பாலான ஆண்கள் படிப்பற்றவர்களா யுள்ள நமது சமூகத்தைப் போன்ற எந்தச் சமூகத்திலும் பெண்களில் படித்தவர்கள் அதிகமா யிருப்பார்களென எதிர்பார்ப்பது [illegible]*



*பொருத்த மில்லாததே யாகும். படித்த பெண்கள் ஒரு சிலர் ஆங்காங்கு இருக்கக் கூடுமாயினும் அவர்களனைவரும் ஆசிரியர்களாக வந்துவிடமாட்டார்கள். ஆசிரியத் தொழிலில் பெண்கள் இறங்குவதற்குரிய சௌகரியமும், தைரியமும், பரந்த நோக்கமும் நமது சமூகத்தில் ஏற்படவில்லை என்று கூறுவது முற்றும் உண்மை யாகும். இந்த நிலையில் அதிகமாய் ஆசிரியத் தொழில் புரியும் பெண்கள் இருக்கமாட்டார்கள்—இருக்க முடியாது என்பதை ஒவ்வொருவரும் அறிந்துகொள்ள வேண்டியது அவசியமாகும். நமக்குத் தெரிந்தவரையில் ஏழு இலட்சம் செங்குந்தர்களில் காஞ்சீபுரம், சென்னை, ராசீபுரம் போன்ற ஊர்களில் ஏழெட்டு பெண்களே ஆசிரியத் தொழிலை மேற்கொண்டவர்களாக இருக்கிறார்களென அறிகிறோம். அவர்களது பெயர்களை அறிந்து இச் சமயம் இங்கே குறிப்பிடுவதற் கில்லை.*

*  *  *

*கேள்வி : காஞ்சீபுரத்தில், 1931ஆம் நடைபெற்ற நமது இரண்டாவது மகாநாட்டில், வரவு செலவு போக மிகுதித் தொகை ஏதாவது இருக்கிறதா? இருந்தால் அதை என்ன செய்திருக்கிறீர்கள்?*

**தீ. ஆ. காளத்தி முதலியார், காஞ்சீபுரம்**

*பதில் : இந்த மிகுதித் தொகை சம்பந்தமாக காஞ்சீபுரம், ஐயம்பேட்டை, திருநாகேஸ்வரம், சைதாப்பேட்டை முதலிய இடங்களிலிருந்து சென்ற இரண்டு மூன்று வருடங்களாகவே அடிக்கடி கடிதங்கள் வந்துகொண் டிருக்கின்றன. அவற்றிற்குப் பதில் எழுதாக் காரணமாக நம் மீது கோபித்துக்கொண்டவர்களும் பலர் உண்டு. எனவே, அவர்களனைவருக்குமாகவே இந்தப் பதிலை இன்று இங்கு எழுதுகிறோம்.*

*காஞ்சீபுரம் மகாநாடு ஏனைய மகாநாடுகளைப் போன்றதன்று. இம் மகாநாட்டிற்குத் தலைச் சங்கப் பிரதிநிதிகள் நாலைந்து பேர்கள் பல மாதங்கள் வரை உழைத்தது போன்று வேறு எந்த மகாநாட்டிற்கும் உழைத்ததில்லை. இம் மகாநாட்டின் மிச்சப் பணம் தலைச் சங்கத்திற்கு அளிக்கப்பட வேண்டியது மிகவும் நியாயமும், ஒழுங்குமாகும். அவ்வாறே தலைச் சங்கத்திற்குக் கொடுத்துவிட வேண்டுமென அநேக அன்பர்கள் வற்புறுத்தியதும் உண்டு. ஆனால், இரண்டொருவர் அச் சமயம் அதற்கு இணங்காமையால் அது தடைப்பட்டது. இம் மகாநாட்டு மிச்சத் தொகையும் அதிக மில்லை; மிகச் சொற்பமே யாகும். மகாநாடு முடிந்த சில மாதங்களுக்குப் பின் வரவேற்புக் கழகத்தாரால் அளிக்கப்பட்ட கணக்கின்படி ரூ. 370-3-2 மிச்சம் ஏற்பட் டிருப்பதாகவும், அதில் ரூ. 200 வரவேற்புத் தலைவரிடமும், ரூ. 170-3-2 பொக்கிஷதாரரிடமும் இருப்பதாகவும் அறியக் கிடக்கிறது. இந்தத் தொகை இப்போது எவ்வளவு தூரம் விருத்தி செய்யப்பட் டிருக்கிற தென்பது விசாரித் தறிய வேண்டிய விஷயமாகும். பொதுவாக இந்தத் தொகை தலைச் சங்கத்திற்கு வந்து சேர வேண்டியது நியாயமாகையால் அவ்வாறே எப்படியும் வந்து சேர்ந்துவிடுமென்று நாங்கள் உறுதியாய் நம்புகிறோம்.*

# தமிழ் அணங்கு

(வ. த. கோ. காஞ்சீபுரம்)

**தாழிசை கொச்சகக் கலிப்பா**

ஆருயிரே! எமக்குற்ற ஆரமுதே! அணங்குசெயா
பேருளே! பொன்னுருவால் பேசுமொழி தமிழணங்கே 1

வஞ்சமற்ற, தீங்கற்ற, வாழ்வுற்ற உனக்குதித்த
செஞ்சொ லறியா(ன்) உனது செயல்கூற மாட்டுவனோ? 2

புவிமுதலில் வெளிப்போந்த போற்றுமொழி பலவினுளும்
சுவையார(து) அழியாத தொன்மொழியுந் தமிழன்றோ? 3

நவரசமும் உணர்ந்துமொழி நலந்தனிலே ஊட்டுவிக்கும்
கவினு(ம்)உல கியற்கைஎழில் காட்டுவதுந் தமிழன்றோ? 4

உண்பதூஉம் உடுப்பதூஉம் உறங்குவது மன்றியுளம்
நண்பதூஉங் கனிந்தமனை நயந்தரலுந் தமிழன்றோ? 5

இசையினு(ல்) இருவிழியுள் நீர்வார இன்புறுதல்
வசையற்ற பெரும்புகழே வந்தவழி தமிழன்றோ? 6

சோலையினுட் குயில்கூவ சுரும்பினங்கள் பாண்மிழற்ற,
மாலையினிற் காதலர்கள் மகிழுமொழி தமிழன்றோ? 7

காலையிளங் கதிர்பரப்புங் கவின்பரிதிச் செல்வனையும்
மாலைமதி மலர்த்தெரியல் மாட்சிகொளல் தமிழன்றோ? 8

வண்மையற்று, செயலற்று, வழக்கற்று, வாய்மையிலா(து)
எண்ணுமொழிக் குள்ளபரி(வு) உனக்கின்றோ? தமிழணங்கே 9

வேலியிட்டு உள்வரம்பு விரைந்திட்டு அரண்காணும்
கோலமற்ற மொழியுனது கூட்டுறவின் வாழ்வன்றோ? 10

பாழ்பட்ட மொழியொன்று பாரதனி(ல்) உளதென்னல்
வாழ்வுற்ற உனைக்கலந்து வதிவதனி னு(ல்)அன்றோ? 11

தனித்தமிழே! தனித்தியங்கத் தகைமையுளாய் தாழ்மையிலா
உனக்குதவி புரியஒரு உயர்மொழியும் வேண்டுவதோ? 12



ஒப்பற்ற நீயன்றோ ஒழிந்தமொழி தனக்கென்றும்
செப்பரிய துணையாகி சீருறமுன் னிற்பதுவே? 13

சங்கநூல் தனிச்சுவையில் சார்ந்துளோர் தனக்கெனவே
அங்கமற்ற மொழிச்சுவையி(ல்) அடைவரோ? தமிழணங்கே. 14

கள்ளமிலாத் தனிக்காதல் காட்டிஉல குள்ளளவும்
தெள்ளுபுகழ் தனக்கெனவே தேற்றுவது நீயன்றோ? 15

இயற்கையொலி யதனாலே எழுவிக்கு(ம்) உன்மொழி போல்
நயக்குமொழி வேறுண்டோ நாடதனில் தமிழணங்கே? 16

மாசற்ற மணிக்கற்பை வகுத்(து) உலக மக்களிடை
ஆசகற்றப் போந்தமுறை யார்க்குண்டு தமிழணங்கே? 17

'தமிழ்வளர்ப்பேம், தமிழ்வளர்ப்பேம்' என்னுமொழி தனைக் கூறி
தமிழணங்கே உனைசிதைக்குந் தகைவிலார் தமைநீங்கி 18

நலங்காண முன்வந்த நற்றமிழின் மக்களிடை
இலங்காயோ! அம்மார்ற்று(ர்) எக்கமுறத் தமிழணங்கே? 19

உன்னெழிலை உன்னுதரத்(து) உதித்தமக்க(ள்) உணர்ந்துற்ற
இன்னலொழித்(து) இன்புற்று இலங்குவரோ தமிழணங்கே? 20

---

## சிறுகதைப் பரிசுகள்

தமிழ்நாட்டு மக்களின் வாழ்க்கைக்கு அவசியமான நீதிகளைப் புகட்டவல்ல சிறுகதைகளுக்கு அவ்வவற்றின் தரத்திற் கேற்றபடி ஐந்து ரூபாய் வரையில் பரிசளிக்கப்படும். கதைகள் சொந்தக் கற்பனையாகவும் இரசனை நிரம்பியதாகவு மிருத்தல் வேண்டும். கதையின் அமைப்பு, தமிழ் நடை, இன்பச் சுவை இவைகளைக் கொண்டே பரிசுத்தொகை தீர்மானிக்கப் பெறும்:

# வர்த்தமானம்

## சென்னை மார்க்கட்டு நிலவரம்

22—10—34

### நூல் திணுசுகள்

| நெ. | ராத்தல் | நூல் ரகம் | விலை |
|---|---|---|---|
| 40 | 5 | டாக்கிரி | ரூ. 3- 9-0 |
| ,, | 5 | சலவை எனிடிக்கட் | ரூ. 4- 3-0 |
| ,, | 5 | சலவை நாக கன்னிகை | ரூ. 4- 6-0 |
| ,, | 10 | ஜப்பான் கலர் பந்து | இருப்பில்லை |
| ,, | 5 | மதுரை மில் | ரூ. 3- 5-0 |
| 30 | 5 | லாயல் மில் | ரூ. 2-12-0 |
| ,, | 5 | மதுரை மில் | ரூ. 2-14-0 |
| 20 | 10 | மதுரை மில் | ரூ. 4-10-0 |
| 20 | 10 | ஸ்டேன்ஸ் மில் | ரூ. 4- 9-0 |
| 20 | 10 | லாயல் மில் | ரூ. 4- 9-0 |
| 60 | 5 | சீமை எருதுகாரம் | ரூ. 5- 7-0 |
| 60 | 5 | சிகப்பு அசல் மயில் | ரூ. 9-12-0 |

### ஜவுளிகளின் விலை

| | | |
|---|---|---|
| 22 × 22 காரிகன் மல் | கிரிப்பாம்பு (பி.) | ரூ. 6- 6-0 |
| ,, ,, | ஆவரேஜ் ரகம் | ரூ. 5-10-0 |
| ,, சலவை மல் | கிரிப்பாம்பு | ரூ. 7- 3-6 |
| ,, | ஆவரேஜ் ரகம் | இருப்பில்லை |
| 1703-ம் நெம்பர் மல் | | ரூ. 8-15-0 |
| 9000 கிளாஸ்கோ மல் | | ரூ. 9- 1-0 |

| | |
|---|---|
| சவரன் 1-க்கு | ரூ. 22-3-6 |
| வெள்ளி ரூபா எடை | ரூ. 0-11-0 |

### கப்பல் செய்திகள்

| | | | |
|---|---|---|---|
| S. S. எதியோப்பியா | ரங்கூனுக்கு | 26-10-34 | காலை 10 மணி |
| S. S. எரின்புரா | ,, | 2-11-34 | ,, |
| S. S. ரஜுலா ஸ்ட்ரெயிட்ஸுக்கு | | 6-11-34 | மாலை 4 மணி |
| S. S. ரோணு | ,, | 23.10-34 | ,, |



## தமிழ் நாட்டு நடப்பு

வாலாஜாபாத் இந்துமத பாடசாலையை 31-8-34-ந்தேதி பிற்பகல் பூனா மிலிடெரி அக்கவுன்ட்ஸைச் சேர்ந்த டிப்டி அக்கவுன்ட்ஸ் ஜெனரல் P. N. ராஜகோபால நாயுடுகாரு எம். ஏ., டிப்டி கன்ட்ரோலர் P. S. நாராயணசாமி அய்யர் அவர்கள் எம். ஏ. டிப்டி அஸிஸ்டெண்டு அக்கவுண்டெண்ட் M. பாஷியம் அய்யங்கார் பி. ஏ., பி. எல். ஆகியவர்களும், 19-9-34-ந்தேதி பிற்பகல் ஈரோடு நகரசபைக் கமிஷனர் திரு. T. புருஷோத்தம முதலியார் அவர்களும் பார்வையிட்டு மாணவர்களின் திறமையையும், பாடசாலையின் ஒழுங்கு முறையையுங் கண்டு மிக்க மகிழ்ச்சி யடைந்தார்கள்.

* * *

திருக்கோவலூர் ஞானியார் சுவாமிகள் மடாலயம் மகாசந்நிதானம் ஸ்ரீமத் சிவசண்முக மெய்ஞ்ஞான சிவாச்சாரிய சுவாமிகள் சென்ற ஒன்றரை மாதங்களாக சென்னையில் எழுந்தருளி பல இடங்களில் சைவ உபந்யாசங்கள் செய்து வருகிறார்கள் என்பதைப் பல மெய்யன்பர்கள் அறிவார்கள்.

சென்னை திருவல்லிக்கேணி செங்குந்த கோட்டம் ஸ்ரீ சிவசுப்பிரமணியர் சந்நிதானத்தில் பவஆ புரட்டாசி 16, 17, 18, 24, 25, 26உ களில் முறையே முருகன் திருவவதாரம், மாணிக்கவாசகர், கண்ணப்ப நாயனார், பூசலா நாயனார், ஆலய வழிபாடு, மீனாக்ஷி திருமணம் ஆகியவைபற்றி அரிய பெரிய உபந்யாசங்கள் செய்தார்கள். ஆயிரக்கணக்கான மெய்யன்பர்கள் வந்திருந்து சுவாமிகள் உபதேச மொழிகளைக்கேட்டு பெரும்பேறுற்றார்கள். தற்காலத்தில் சமய வளர்ச்சியின் பொருட்டு சுவாமிகள் ஆங்காங்கு ஆற்றிவரும் அரிய தொண்டு மிக மிக அவசியமானதென்பது மிகையாகாது. சுவாமிகள் நெடுநாள் இத்தகைய திருத்தொண்டில் ஈடுபட்டு சைவத்தை வளர்க்குமாறு இறைவனை இறைஞ்சுகின்றோம்.

* * *

சென்னை கவர்னர் தம்பதிகள் நவம்பர் மாதம் 14-ந்தேதி சென்னையிலிருந்து புறப்பட்டு 17-ந்தேதி பம்பாயிலிருந்து சீமைக்குப் பிரயாணமாவார்கள். சென்னையின் புதிய கவர்னர் லார்ட் எர்ஸ்கைன் அதே 17-ந்தேதி சென்னை வந்து சேர்வார்.

* * *

இந்திய சட்டசபைத் தலைவர் சர். ஆர். கே. சண்முகஞ் செட்டியார் அவர்களது சகோதரரான ஸ்ரீ ஆர். கே. கந்தசாமி செட்டியார் லண்டனில் நெசவுத் தொழிலைப்பற்றி பயிற்சி பெற்று பி. எஸ். ஸி. என்ற பட்டம் வாங்கி 20-9-34-ந்தேதி கோவைக்குத் திரும்பி வந்தார்.

* * *

கொச்சி மகாராஜா தமது பரிவாரங்களுடன் சென்று 25-9-34-ந் தேதி ராமேஸ்வர தரிசனம் செய்தார்.

மேட்டூர் அணைகட்டு வேலைகள் முடிவடைந்துவிட்டதால் அது சம்பந்தமாக அங்கு ஏற்படுத்தப்பட்ட டிப்டி தாஸில்தார் ஆபீசையும், சப்டிரஷரியையும் இம்மாத இறுதியில் எடுத்து விடுவதென சென்னை சர்க்கார் முடிவு செய்திருக்கிறார்கள்.

* * *

கவிஞர் ரவீந்திரநாத் தாகூரை சென்னையில் வரவேற்பதற்காக பொப்பிலி ராஜா தலைமையில் ஒரு வரவேற்புக்கழகம் அமைக்கப்பட்டிருக்கிறது. இம்மாதக் கடைசியில் தாகூர் சென்னை வந்து ஒரு வாரத்திற்குமேல் தங்கி இருக்க வேண்டுமென பொப்பிலி ராஜா அவரைக் கேட்டதற்கு அவரும் இணங்கி இருக்கிறார். கவிஞர் தமது மாணவர்கள் சிலருடன் 21-10-24-ல் சென்னை வருகின்றார்.

* * *

சேலம் ஜங்ஷன் ஸ்டேஷனைப் புதுப்பித்து புதிய முறையில் கட்டுவதற்கு ரூ. 4,56,000 ரயில்வே போர்டார் அனுமதித்திருக்கிறார்கள்.

* * *

இளந்தொண்டர் சங்கம் என்ற பெயருடன் சென்னை நகரில் இருக்கும் ஸ்தாபனத்தின் நோக்கமானது பொதுஜன அமைதிக்கு பங்கம் விளைவிப்பதாக இருக்கிறதெனக் கூறி அந்த ஸ்தாபனத்தை சட்ட விரோதமானதென சென்னை சர்க்கார் அறிவித்துள்ளார்கள்.

* * *

அருப்புக்கோட்டையில் பிரபல ஜவுளி, நூல் வர்த்தகரும், அந்நகர் மாஜி பஞ்சாயத்து போர்டு பிரசிடெண்டும், ராமநாதபுரம் ஜில்லா போர்டு தாலூக்கா போர்டு மெம்பரும், சீர்திருத்தத் தலைவரும் செங்குந்தகுலப் பெரியாருமாகிய ஸ்ரீ அ. கு. சி. சிவசுப்பிரமணிய முதலியார் அவர்களின் புதல்வர் சண்முக சுந்தரத்திற்கு ஆவணிமீ 10-ம் தேதி சீர்திருத்த முறையில் திருமணம் நடைபெற்றது. மணமக்கள் தாங்களே மனமொத்து ஒருவருக்கொருவர் மண ஒப்பந்த உறுதிமொழி கூறி மணமாலை மாற்றிக்கொண்டார்கள். ஏராளமான கனவான்கள் திருமணத்திற்கு விஜயம் செய்திருந்தார்கள்.

* * *

புதுச்சேரியிலிருந்து பட்டு தினுசுகளை உடையாகக் கட்டிக்கொண்டு வந்தாலும் ரூ. 1-4-0-க்கு மேற்பட்ட மதிப்புடையவைகளுக்கெல்லாம் 1-10-34-ந்தேதியி லிருந்து வரி விதிக்கப்படுமென பிரிட்டிஷ் சுங்க அதிகாரிகள் அறிக்கை வெளியிட்டிருக்கிறார்கள். புதுவை வியாபாரிகள் தங்கள் வியாபாரம் இதனால் பெரிதும் பாதிக்கப்படுமெனக்கூறி அதனைக் கண்டிக்கின்றனர்.

* * *

இந்தியா சட்டசபைத் தேர்தலில் சர். சண்முகம் செட்டியாரை ஆதரித்து, சென்னை மாகாணத்திலுள்ள சகல பிரமுகர்களும் கையொப்பமிட்டு அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளார்கள்.



சென்னை சட்டசபையின் அடுத்த கூட்டம் இம்மாதம் 22-ந்தேதி கூடுகிறது. 24-ந்தேதி உத்தியோகஸ்த ரல்லாதார்களின் தீர்மானங்களும், மசோதாக்களும் ஆலோசனைக்கு எடுத்துக்கொள்ளப்படும்.

* * *

இந்தியா சட்டசபைக்கு அபேட்சகராக நின்ற ராமநாதபுரம் ராஜாவின் நியமனச்சீட்டை அவருக்கு 25 வயது பூர்த்தியாகவில்லை என்ற காரணத்தால் கலெக்டர் நிராகரித்து விட்டார்.

* * *

இந்தியா சட்டசபைத் தேர்தலில் டாக்டர் பி. வரதராஜலு நாயுடுவை ஆதரித்து பொப்பிலி ராஜா ஒரு அறிக்கை வெளியிட்டுள்ளார்.

## இந்தியச் செய்திகள்

பிரிட்டிஷ் இந்தியாவின் எல்லைக்குள் ஒரு இடத்திலிருந்து மற்றொரு இடத்திற்கு 'ட்ரங்க் டெலிபோன்' மூலமாக 3 நிமிட நேரம் பேசுவதற்கு 1-10-34 முதல் முழுக்கட்டணம் ரூ. 10-ம், அரைக் கட்டணம் ரூ. 5-ம் செலுத்த வேண்டுமாம். தென்னிந்தியாவின் முக்கிய நகரங்களிலெல்லாம் ட்ரங்க் டெலிபோன் திட்டம் ஏற்பட் டிருக்கிறபடியாலும், வடநாட்டிலும் அஸாம் முதலிய இடங்களில் ஏற்படப்போகிறபடியாலும் கட்டணம் 10 ரூபாயாகக் குறைக்கப்பட் டிருப்பது விசேஷ லாபத்தைத் தரக்கூடுமென அதிகாரிகள் நம்புகின்றனர்.

* * *

கபூர்தலா சமஸ்தானத்திலுள்ள ஒரு காட்டில் சர்ப்பமொன்றைப் பிடிப்பதற்காக அந்தச் சர்ப்ப மிருந்த புதரை நெருப்பு வைத்தனர். அப்போது கிளம்பிய புகையில் விஷம் கலந்திருந்ததால் 6 பேர் மரணமடைந்தனர். ஒருவர் கண் குருடானார்.

* * *

ஆப்கன் ஸர்க்கார் தங்களை சர்வ தேச சங்கத்தில் சேர்த்துக்கொள்ளும்படி விண்ணப்பம் அனுப்பியதை விசேஷ கமிட்டி ஏகமனதாய் அங்கீகரித்திருக்கிறது.

* * *

சர்ப்பம் தீண்டியவர்களை மந்திரத்தினால் பிழைக்கவைப்பதில் தங்களுக்கு நம்பிக்கை இல்லையாகையால் எவராவது சர்ப்பம் தீண்டிய குரங்கு ஒன்றை பிழைக்கவைட்பராயின் அவருக்கு ரூ. 10,000 வெகுமதி தருவதாக பம்பாயிலுள்ள ஹாப்கைன் ஆராய்ச்சி நிலையத்தார் தெரிவித்ததின் மேல், லாகூரிலுள்ள முகம்மது ஷாபி என்பவர் தாம் கொரானிலிருந்து சில சுலோகங்களைச் சொல்லி பிழைக்கவைத்து விடுவதாகவும், வெகுமதி தருவது உண்மைதானா என்பதைத் தெரிவிக்குமாறும் கேட்டுள்ளார்.

* * *

1935-ம் வருஷ ஆரம்பத்திலே ரிஸர்வ் பாங்கை ஏற்படுத்தி ஸென்ட்ரல் போர்டுக்கு மெம்பர்களையும் இந்திய ஸர்க்கார் நியமிப்

பார்கள். அடுத்த எப்ரல் முதல் ரிஸர்வ் பாங்கியின் பங்குகள் விற்பனைக்கு வெளியிடப்படும்.

*　　　*　　　*

சமீபத்தில் லண்டனில் நடந்த பரீட்சை முடிவின் பயனாக 13 வெள்ளையர்களையும், 13 இந்தியர்களையும் ஐ.ஸி.எஸ். உத்தியோகங்களில் நியமிப்பார்களெனத் தெரிகிறது. 13 இந்தியர்களில், 10 ஹிந்துக்கள், 1 முஸ்லிம், 1 பார்ஸி, 1 ஆங்கிலோ இந்தியர் இருக்கிறார்கள்.

## வெளி உலகப் போக்கு

ஜப்பானில் சென்ற மாதம் அடித்த சுழல் காற்றினால் பெருஞ் சேதம் ஏற்பட்டிருக்கிறது. பல ஆயிரம் பேர்கள் இறந்துவிட்டதோடு நான்காயிரம் பேர்களுக்கு மேல் படுகாயமடைந்தனர். 87 கல்விச் சாலைகள் இடிந்து விழுந்துவிட்டன. மாணவர்களும், ஆசிரியர்களும் மட்டும் 421 பேர்கள் மாண்டனர். 20 நிமிஷ நேரத்திற்குள் இவ்வளவு கொடுமைகளும் ஏற்பட்டுள்ளன.

---

## உபகாரச் சம்பள அறிக்கை

செங்குந்தர் கல்விநிதியிலிருந்து உபகாரச் சம்பளம் வழங்கப்பெற்ற மாணவர்களின் விபரம் ஆகஸ்டு மாத மித்திரனில் வெளியிடப்பட்டிருப்பது நேயர்கள் அறிந்த விஷயம். ஜூலை மித்திரன் 378, 379, 380 பக்கங்களில் குறித்துள்ள நிபந்தனைகள் முழுதும் குறிப்பிட்டு மனுச் செய்துகொண்ட மாணவர்களுக்கு மட்டும் உபகாரச் சம்பளம் வழங்கப்படுமெனத் தெரிவித்திருந்தும் அநேகர் அதனைக் கவனியாது முழு விவரமுமின்றி மனுச் செய்துள்ளனர். எனவே, ஜூலை மாத மித்திரனிற் கண்டுள்ள முழு விவரங்களுடன் மனு அனுப்பினவர்களுக்கு மட்டும் உபகாரச் சம்பளம் அனுப்பப்பட்டிருக்கிறது. கல்விநிதிக் கழகத்தாரால் உபகாரச் சம்பளம் அனுமதிக்கப்பட்டுள்ளவர்களில் இதுவரை எவருக்கேனும் சம்பளம் வரவில்லையாயின் அவர்கள் பூரா விவரத்துடன் மனுச்செய்து கொள்ளாதவர்களெனக் கொண்டு உடனே அவ்விவரங்களுடன் மனு அனுப்பினால் அவர்களுக்கு அனுமதிக்கப்பட்டுள்ள உபகாரச் சம்பளத்தின் முதல் தவணைப் பணம் தாமதமின்றி அனுப்பப்படும். உபகாரச் சம்பளம் அனுமதிக்கப்படாதவர்கள் எவரேனும் இப்போது புதிய மனுக்கள் அனுப்பின் அவை கவனிக்கப் பெறா.

அமைச்சர்.

---

# ரொக்கப் பரிசு ரூ. 200

## அதிக எழுத்துப் போட்டிப் பந்தயம்

| | | |
|---|---|---|
| முதற் பரிசு (சரியான விடைக்கு) | ரூ. | 100 |
| 2-வது பரிசு (ஒரு தவறுள்ள விடைக்கு) | ரூ | 75 |
| அதிக விடைகள் அனுப்புகிறவர்களுக்கு 2 பரிசுகள் | ரூ. | 25 |

## பிரவேசக் கட்டணம் அணா 2

**5 விடைகள் ஒரே மொத்தமாக அனுப்புகிறவர்களுக்கு ரூ. 0-8-0**

விடைகள் கண்டுபிடிக்கும் விதம் :—கீழே கொடுக்கப்பட்டுள்ள வார்த்தைகளில் ஒவ்வொன்றிற்குப் பின்னால் ஒரு எண் கொடுக்கப்பட்டிருக்கிறது. அந்த எண், அது உள்ள வார்த்தையில் எத்தனை எழுத்துகள் அடிக்கப்பட வேண்டுமென்பதைக் காட்டுகிறது. அதன்படி வார்த்தைகளிலுள்ள எழுத்துக்களை அடித்தால் குறிப்பிற்குத் தக்கபடி சரியான விடை கிடைக்கும். அடிக்கப்படும் எழுத்துக்கள் ஒன்றின் பின் ஒன்றாக வரிசையாக அடிக்கப்பட்டிருக்கவேண்டும்.

உதாரணம் :—முதல் வரிசையில் காணப்படுவது **வாதாபி தானம்** என்பது. இதற்குப் பின்னால் 3 இருப்பதால், அது **வாதாபிதானம்** என்பதில் 3 எழுத்துக்களை அடிக்கவேண்டுமென்பதைக் காட்டுகிறது. முதல் வார்த்தைக்குக் குறிப்பில் **மேகம் பொழிவது** என்று இருக்கிறது. எனவே, **தா, பி, தா** என்னும் மூன்று எழுத்துக்களை அடித்துவிட்டால் குறிப்பிலுள்ள **மேகம் பொழிவது** என்பதற்குச் சரியான விடை **வானம்** எனக் கிடைக்கிறது. இதே மாதிரி மற்ற சரியான வார்த்தைகளைக் கண்டுபிடிக்க வேண்டும்.

## அதிக எழுத்துப் போட்டி வார்த்தைகள்

1. வாதாபி தானம் 3
2. அடவி மலம் 2
3. தனம் பரித்தல் 3
4. கூடையிற் சாம்பல் 4
5. பலரது பகை 3
6. கருணாகரன் மகள் 4
7. மோதகக் கேழல் 4
8. சீவ போதம் 1
9. தன கேதாரணி 3

குறிப்பு :—(1) மேகம் பொழிவது, (2) அழுக்கில்லாதிருப்பது, (3) சுமத்தல், (4) ஒடுங்குவது, (5) மாணவர்கள் எழுதுவதற்குரியது, (6) காகம், (7) மலத்தைத் தின்று சுத்தி செய்வது, (8) ஆமை, (9) பூமி.

நிபந்தனைகள்

(1) செங்குந்த மித்திரன் கூப்பனில் விடைகளை எழுதியனுப்ப வேண்டும். கூப்பன் கிடைக்காதவர்கள் பிரவேசக் கட்டணத்தோடு ஒவ்வொரு கூபனுக்கும் கூப்பன் கிரயமான இரண்டணு சேர்த்து அனுப்ப வேண்டும்.

செங்குந்த மித்திரன்

## அதிக எழுத்துப் போட்டி

விடை கூபன்

முடிவு தேதி (10-12-34)

---

1. வானம்
2.
3.
4.
5.
6.
7.
8.
9.

இந்தப் போட்டியில் கலந்து கொள்வதில் பத்திராதிபரின் தீர்ப்பே முடிவானதென ஒப்புக்கொள்ளுகிறேன்.

பெயர்..............................................................

விலாசம்..............................................................

..............................................................



(2) ஒருவர் எத்தனை விடைகளேனும் அனுப்பலாம். ஒவ்வொரு விடைக்கும் பிரவேசக்கட்டணம் அணு இரண்டு அனுப்பவேண்டும். ஒரே சமயத்தில் 5 விடைகள் அனுப்புவோர், நான்கு விடைகளுக்குக் கட்டணம் அனுப்பி ஒரு விடை இனுமாக அனுப்பலாம். ஒவ்வொரு ஐந்து விடைக்கும் இதுபோன்றே ஒரு விடை கட்டணமின்றி அனுப்பலாம். ஐந்து விடைகளுக்குக் குறைவா யிருந்தால் இரண்டணு வீதமே அனுப்ப வேண்டும்.

(3) ஒவ்வொரு கூப்பனிலும் விடை அனுப்புகின்றவரின் முழு விலாசமும் தெளிவாய் எழுதி இருக்கவேண்டும்.

(4) பத்திராதிபரின் விடைக்கு எழுத்துக்கு எழுத்து சரியா யிருக்கும் விடைக்கு முதற் பரிசும், அடுத்தபடி சரியாயிருக்கும் விடைக்கு இரண்டாவது பரிசும் தரப்படும். மற்றவர்களைக் காட்டிலும் மிக அதிகமான விடைகள் அனுப்புகிறவருக்கு ரூ. 15 ஸ்பெஷல் பரிசும், அதற்கடுத்து அதிக விடை அனுப்புகிறவருக்கு ரூ. 10 ஸ்பெஷல் பரிசும் அளிக்கப்படும்.

(5) விடைகள் 10-12-34-க்குள் வந்து சேரும்படி அனுப்ப வேண்டும். அதற்குப் பின் வந்து சேர்பவைகள் கவனிக்கப்பட மாட்டா.

விடைகள் கீழ்க்கண்ட விலாசத்திற்கு அனுப்பப்படவேண்டும்.

'அதிக எழுத்துப் போட்டி'

செங்குந்த மித்திரன் ஆபீஸ், பவழக்காரத்தெரு, சென்னை.

---


## வஸந்த விகடன்

(ஓர் உயர்தர ஹாஸ்ய மாதப் பத்திரிகை)

உள்ளத்தைக் கொள்ளை கொள்ளும் கட்டுரைகள், கதைகள், படங்கள் அடங்கியதோர் மாதப் பத்திரிகை. சந்தா ரூ. 1. தனிப்பிரதி அணு 1½. ஒவ்வொரு ஆங்கிலமீ 20-ந் தேதி வெளிவரும்.

ஏஜண்டு இல்லாத ஊர்களுக்குத் திறமை வாய்ந்த ஏஜண்டுகள் தேவை. நிபந்தனைக்கு உடனே எழுதுக.

மானேஜர், 'வஸந்த விகடன்' ஆபீஸ், மதுரை.

# நன்கொடைகள்

தக்கோலம் செ. சிதம்பர முதலியார் குமாரர்கள் சுப்பிரமணியனுக்கும், கோபாலனுக்கும் சென்ற ஆவணிமீ நடைபெற்ற திருமணத்தில் பெண் வீட்டார், பிள்ளை வீட்டார் வரவு ரூ. 0-4-0

அகரம் மொ. சிங்கார முதலியாருக்கு நடந்த திருமணத்தில் பெண் வீட்டார், பிள்ளை வீட்டார் அளித்த நன்கொடை ரூ. 0-4-0

அருப்புக்கோட்டை பிரபல வர்த்தகர் அ. கு. சி. சிவசுப்பிர முதலியார் குமாரர் சண்முகசுந்தரத்திற்கு ஆவணிமீ நடைபெற்ற சீர்திருத்தத் திருமணத்தில் நன்கொடை வரவு ரூ. 5-0-0

மண்டலமாணிக்கம் அ. பெ. வெ. அருணாசல முதலியார் குமாரர் பொன்னுசாமி முதலியாருக்கு ஆவணிமீ நடைபெற்ற திருமணத்தில் நன்கொடை வரவு ரூ. 1-0-0

மணமக்களிருவரும் நீடுவாழ பிரார்த்திக்கிறோம். (ப-ர்)

சைதாப்பேட்டை முனிசிபல் கவுன்சிலர் ஸ்ரீ நடராஜ முதலியாரின் தாயாருக்கு நடைபெற்ற 16-ம் நாள் சடங்கன்று வழங்கிய நன்கொடை ரூ. 2-0-0

## மணவை ச. நா. குமரகுரு முதலியார் மூலம்

1. கோவை ஜில்லா, கணபதி திரு. சி. ரா. சுப்பையா முதலியார் அவர்கள் வழங்கிய நன்கொடை ரூ. 0-4-0

2. கோவை ஜில்லா காரமடை அ. கருப்பண்ண முதலியார் குமாரன் திருசெல்வன் குமாரசாமிக்கும், பல்லடம் பெ. அவிநாசியப்ப முதலியார் குமாரத்தி திரு. செல்வி மயங்கம்மைக்கும் ஆவணி 27உ நடந்த திருமணத்தில் பிள்ளை வீட்டார் வழங்கிய நன்கொடை ரூ. 1-0-0

3. கோவை வடவழி மருதவரைநீழல் ஆசிரியர் திரு. L. சொக்கலிங்க V. P. மருதப்ப முதலியார் அவர்கள் அளித்த நன்கொடை ரூ. 0-4-0

## ஆம்பூர் செங்குந்த வாலிப சங்கத்தார் மூலம்

1. பவஹு ஆவணிமீ 11உ ஆம்பூர்கஸ்பா ஜவுளி பூ. ச. ஆறுமுக முதலியார் குமாரன் செல்வன் துரைசாமி முதலியாருக்கும், ஆரணி ஜாகீர் நாகரத்தின முதலியார் குமாரத்தி செல்வி பத்மாவதி அம்மாளுக்கும் நடந்த திருமணத்தில் சங்கத்திற்கு வழங்கிய நன்கொடை ரூ. 1-0-0

2. ஆம்பூர்கஸ்பா இரண்டாவது செங்குந்தர் வீதி வைத்தியம் இராமண்ண முதலியார் குமாரன் செல்வன் தாமோதர முதலியாருக்கும் ஷை வீதி க. சு. பெரியசாமி முதலியார் குமாரத்தி செல்வி ருக்மணியம்மாளுக்கும் பவஹு ஆவணிமீ 25உ நடந்த திருமணத்தில் சங்கத்திற்கு வழங்கிய நன்கொடை ரூ. 1-0-0



3. ஆம்பூர்கஸ்பா இரண்டாவது செங்குந்தர் வீதி வா. ர. நஞ்சப்ப முதலியார் குமாரத்தி செல்வி முருகாயம்மாளுக்கு பவஹு ஆவணிமீ 17உ நடந்த புஷ்பவதி முகூர்த்தத்தில் சங்கத்திற்கு வழங்கிய நன்கொடை ரூ. 0-8-0

4. ஆம்பூர்கஸ்பா 3-வது செங்குந்தர் வீதி மடவாளம் புட்டப்ப முதலியார் குமாரத்தி செல்வி பாக்கியம்மாளுக்கும், விரிஞ்சிபுரம் செல்வன் பாலசுந்தர முதலியாருக்கும் பவஹு ஆவணிமீ 31உ நடந்த திருமணத்தில் வழங்கிய நன்கொடை ரூ. 0-8-0

**பயங்கரமான நோய்களுக்கு எச்சரிக்கையாயிருங்கள்**

வெள்ளை, கொருக்கு, அரையாப்பு, சீழ்மேகம், லிங்கப் புற்று, யோனிப்புற்று, பித்தவெடிப்பு, மேகநீர்க் கட்டிகள், கை கால் பிடிப்பு, வாதநோய் முதலிய கொடிய வியாதிகளுக்கு எமது

**சர்வமேக சஞ்சீவி எண்ணெய், வாய்வு எண்ணெய்களைச்** சாப்பிடுங்கள்

இரண்டொரு வேளைகளிலேயே குணப்படுத்திவிடும்.

கனகேசம் & கோ., பவழக்காரத் தெரு, சென்னை.

மாணவர்கள், வக்கீல்கள், நீதிபதிகள், பத்திராதிபர்கள் மற்றுமுள்ள மூளைவேலை அதிகமுள்ளவர்களுக்கு

**வென்லோட்**

ஓர் வரப்பிரசாதம் போன்றது.

அது: கண் எரிச்சல், கண் மங்கல், கை கால் எரிச்சல், அசதி, சொப்பன ஸ்கலிதம், எலும்புருக்கி, மூலச்சூடு, நீர்க்கடுப்பு முதலிய சூட்டினால் உண்டாகும் சகல வியாதிகளையும் நீக்கி, தேகத்திற்குப் பொன்னிறம் வழங்குவதில் நிகரற்றதென பலராலும் புகழப்படும் அரிய சஞ்சீவி.

கனகேசம் & கோ., பவழக்காரத் தெரு, சென்னை.

**விநோத நேசன்**

(தமிழ் ஹாஸ்ய மாதாந்திரச் சஞ்சிகை)

பிரதி இங்கிலிஷ் மாதம் 5-ம்தேதி வெளிவரும்

வருட சந்தா அணா 12.

தனிப்பிரதி அணா 1.

"விநோத நேசன்" ஆபீஸ்,

திருவல்லிக்கேணி, சென்னை

# மாகாண புத்தக சாலை

## 151, பவழக்காரத் தெரு, சென்னை.

### புராணங்கள்

| | ரூ. | அ. |
|---|---|---|
| கந்தபுராணம் மூலம் 2பாகம். | 6 | 8 |
| ஷை வசனம் | 4 | 0 |
| ஷை வசனம் வேறு | 2 | 8 |
| உபதேச காண்டம் மூலம் | 2 | 8 |
| ஷை உரை | 5 | 8 |
| கந்த புராணச் சுருக்கம் | 0 | 10 |
| ஷை பொழிப்புரை | 3 | 0 |
| பெரியபுராணம்சூசனத்துடன் | 4 | 10 |
| ஷை வசனம் | 1 | 4 |
| திருவிளையாடல் புராணம் | 3 | 8 |
| ஷை வசனம் | 1 | 4 |
| வேம்பத்தூரார் திருவிளையாடல் குறிப்புடன் | 2 | 8 |
| தணிகைப்புராணம் குறிப்புடன் | 5 | 4 |
| விநாயக புராணம் | 5 | 0 |
| ஷை வசனம் | 4 | 0 |
| அருணாசல புராணம் உரை | 2 | 8 |
| ஷை வசனம் | 1 | 0 |
| சீகாளத்தி புராணம் உரை | 3 | 8 |
| திருக்காளத்தி புராணம் | 3 | 0 |
| பேரூர்ப் புராணம் வசனத்துடன் | 2 | 8 |
| காஞ்சி புராண மூலம் | 2 | 8 |
| திருக்கழுக்குன்றப் புராணம் | 2 | 0 |
| கருட புராண வசனம் | 1 | 0 |
| சைவ புராண மூலம் | 1 | 8 |
| ஷை உரை | 8 | 0 |

### இதிகாசங்கள்

| | ரூ. | அ. |
|---|---|---|
| வியாச பாரதம் ஆதி பர்வம் | 5 | 8 |
| சபா பர்வம் | 2 | 4 |
| விராட பர்வம் | 2 | 4 |
| உத்தியோக பர்வம் | 4 | 0 |
| வில்லி பாரதம் மூலம் | 3 | 8 |
| ஷை அரும்பதவுரையுடன் | 5 | 0 |
| ஷை வசனம் | 8 | 0 |
| மகாபாரதம் அரும்பதவுரையுடன் | 4 | 12 |
| பாரத வசனச் சுருக்கம் | 0 | 12 |
| சபா பர்வம் உரை | 3 | 0 |
| இராசசூயச் சருக்கம் உரை | 1 | 4 |
| வாரணாவதச் சருக்கம் உரை | 1 | 0 |
| சூதுச் சருக்கம் உரை | 1 | 8 |
| நிரை மீட்சிச் சருக்கம் உரை | 1 | 4 |
| சல்ய, சௌத்தி பருவங்கள் | 1 | 8 |
| பெருந்தேவனார் பாரத மூலம் | 3 | 2 |
| நல்லாப் பிள்ளை பாரதம் 2 பாகம் | 10 | 0 |
| கம்ப ராமாயணம் 2 பாகம் | 10 | 0 |
| ஷை வேறு பதிப்பு | 8 | 0 |
| பால காண்டம் உரை | 3 | 8 |
| ஷை வேறு | 5 | 0 |
| சுந்தர காண்டம் உரை | 4 | 0 |
| ஷை வேறு | 5 | 0 |
| கிஷ்கிந்தா காண்டம் உரை | 4 | 8 |
| ஆரணிய காண்டம் உரை | 4 | 0 |
| யுத்த காண்டம் உரை | 10 | 0 |
| கம்ப ராமாயண வசனம் | 10 | 0 |
| ஷை ரப் | 7 | 0 |
| பாகவத வசனம் | 9 | 0 |

### அகராதிகளும்; நிகண்டுகளும்

| | ரூ. | அ. |
|---|---|---|
| தமிழ்ச் சொல் லகராதி (உதாரணங்களுடன்) | 18 | 8 |
| தமிழ் மொழி யகராதி (காரனேஷன்) | 10 | 0 |
| வீரமா முனிவர் சதுரகராதி | 3 | 0 |
| இங்லீஷ்—தமிழ் அகராதி | 3 | 0 |
| இங்கிலீஷ்—இங்லீஷ் டிக்ஷனரி | 5 | 8 |
| தமிழ்—இங்லீஷ் அகராதி | 6 | 0 |
| சூடாமணி நிகண்டு 12 தொகுதி | 1 | 8 |
| பிங்கல நிகண்டு உரை | 2 | 8 |

PROVINCIAL BOOK DEPOT,
151, Coral Merchant Street, Madras.



| | ரூ. | அ. |
|---|---|---|
| உரிச்சொல் நிகண்டு உரை | 0 | 8 |
| பழமொழி அகராதி | 1 | 8 |

### சங்க நூல்கள்

| | ரூ. | அ. |
|---|---|---|
| சீவக சிந்தாமணி உரை | 10 | 0 |
| சிலப்பதிகாரம் உரை | 6 | 4 |
| மணிமேகலை அரும்பத உரை | 6 | 4 |
| பத்துப்பாட்டு உரை | 5 | 0 |
| ஷை மூலம் | 1 | 0 |
| பெருங்கதை | 4 | 0 |
| அகநானூறு உரை | 4 | 8 |
| ஐங்குறு நூறு உரை | 2 | 0 |
| பதிற்றுப்பத்து உரை | 1 | 14 |
| பரிபாடல் உரை | 2 | 8 |
| புறநானூறு உரை | 5 | 10 |
| புறப்பொருள் வெண்பாமாலை உரை | 1 | 14 |
| கலித்தொகை மூலமும் உரையும் 3 பாகம் | 16 | 4 |
| நற்றிணை உரை | 5 | 0 |
| நாலடியார் உரை | 1 | 8 |
| பழமொழி உரை | 2 | 0 |
| திருக்குறள் (பரிமேலழகர் உரை) | 4 | 0 |
| ஷை பாக்கட் சைஸ் | 2 | 0 |
| ஷை மணக்குடவர் உரை | 2 | 0 |
| நான்மணிக் கடிகை யுரை | 0 | 8 |
| ஏலாதி உரை | 0 | 6 |
| இன்னா நாற்பது | 0 | 5 |
| இனிது நாற்பது | 0 | 5 |
| கார் நாற்பது | 0 | 5 |
| களவழி நாற்பது | 0 | 5 |
| முதுமொழிக் காஞ்சி | 0 | 5 |
| சிறுபஞ்ச மூலம் உரை | 0 | 12 |
| ஆசாரக் கோவை உரை | 0 | 8 |
| திரிகடுகம் உரை | 0 | 4 |
| திணைமொழி ஐம்பது உரை | 0 | 8 |
| திணைமாலை 150 உரை | 0 | 10 |
| ஐந்திணை 50 உரை | 0 | 4 |
| ஐந்திணை 70 உரை | 0 | 5 |
| இன்னிலை உரை | 1 | 0 |
| கல்லாடம் உரை | 3 | 0 |

### திருமுறைகள்

| | ரூ. | அ. |
|---|---|---|
| மூவர் தேவாரம் அடங்கன்முறை | 15 | 0 |
| ஷை பண்முறை (அட்டவணையுடன்) | 2 | 8 |
| ஷை அடக்க விலைப் பதிப்பு | 2 | 8 |
| சுந்தரர் தேவார உரை | 3 | 8 |
| திருவாசக மூலம் | 1 | 8 |
| ஷை குறிப்புரையுடன் | 1 | 8 |
| திருவிசைப்பா திருப்பல்லாண்டு உரை | 1 | 0 |
| திருமுறை 8—11 | 4 | 8 |
| திருவருட்பா | 6 | 0 |
| திருப்புகழ் 3 பாகம் | 10 | 0 |
| ஷை படைவீடு | 8 | 0 |
| அருணகிரிநாதர் திருமுறைத் திரட்டு | 1 | 8 |

### இலக்கணம்

| | ரூ. | அ. |
|---|---|---|
| தொல்காப்பியம் மூலம் | 1 | 8 |
| எழுத்து—இளம்பூரணம் | 1 | 8 |
| சொல்—சேனாவரையம் | 3 | 8 |
| சொல்—இளம்பூரணம் | 3 | 0 |
| சொல்—தெய்வச்சிலையார் | 2 | 8 |
| பொருள்—நச்சினார்க்கினியம் 4 பாகம் | 20 | 0 |
| பொருள்—அகம், புறம் (இளம்பூரணம்) | 2 | 0 |
| புறப்பொருள் வெண்பாமாலை உரை | 1 | 4 |
| இறையனார் அகப்பொருள் உரை | 4 | 8 |
| யாப்பருங்கல விருத்தியுரை | 10 | 0 |
| யாப்பருங்கல காரிகை | 1 | 8 |
| ஷை வேறு | 1 | 2 |
| தண்டியலங்காரம் உரை | 1 | 14 |
| மாறனலங்காரம் உரை | 5 | 0 |
| இலக்கண விளக்கம் உரை | 5 | 8 |
| பஞ்ச இலக்கணம் மூலம் | 1 | 0 |

PROVINCIAL BOOK DEPOT,
151, Coral Merchant Street, Madras.

## மாகாண புத்தகசாலை, 151, பவழக்காரத் தெரு, சென்னை.

| | | |
|---|---|---|
| நன்னூல் காண்டிகை உரை (நாவலர்) | 1 | 12 |
| ஷை (கிருஷ்ணமாச்சாரியார்) | 1 | 8 |
| ஷை விருத்தியுரை | 1 | i2 |
| ஷை சங்கரநமச்சிவாயர் உரை | 2 | 0 |
| ஷை மயிலைநாதர் உரை | 3 | 2 |
| வெண்பாப் பாட்டியல் | 0 | 4 |
| **வேதாந்த, சித்தாந்த நூல்கள்** | | |
| வேதாந்தசாரம் | 0 | 10 |
| ஆத்ம புராண வசனம் | 8 | 0 |
| விசார சாகரம் | 3 | 3 |
| நியாயப்பிரகாசம் தருக்கநூல் | 4 | 0 |
| கைவல்யம் உரையுடன் | 8 | 0 |
| கைவல்ய நவநீத வசனம் | 1 | 8 |
| வேதாந்த சூடாமணி | 1 | 8 |
| சசிவர்ண போதம் உரை | 1 | 0 |
| வேதாந்த பரிபாஷை | 0 | 10 |
| சித்தாந்த பரிபாஷை | 0 | 8 |
| சிவஞான போதமாபாடியம் | 7 | 0 |
| ஷை சிற்றுரை | 1 | 0 |
| ஷை வசனாலங்கார தீபம் | 3 | 8 |
| சிவஞானசித்தியார் சுபக்கம் | 4 | 8 |
| ஷை பரபக்கம் | 2 | 8 |
| சித்தாந்த சாத்திரம் 14 மூலம் | 2 | 8 |
| சித்தாந்த சிகாமணி | 2 | 8 |
| **வைஷ்ணவ நூல்கள்** | | |
| நாலாயிரப் பிரபந்தம் | 3 | 8 |
| திருவாய்மொழி | 1 | 0 |
| அஷ்டப் பிரபந்தம் விருத்தியுரை | 3 | 8 |
| **பிரபந்தங்கள்** | | |
| பட்டணத்தார் பிரபந்தம் உரை | 3 | 8 |
| ஷை பொழிப்புரை | 1 | 8 |
| தாயுமானவர் விருத்தியுரை | 4 | 0 |
| குமரகுருபர சுவாமிகள் பிரபந்தம் உரை | 3 | 8 |
| தக்கயாகப்பரணி | 4 | 0 |
| [illegible]டதம் - விருத்தியுரை | 4 | 0 |
| ஷை வேறு பதிப்பு | 2 | 8 |
| ஷை மூலம் | 1 | 8 |
| நளவெண்பா உரை | 1 | 8 |
| செங்குந்தர் பிரபந்தத் திரட்டு | 2 | 0 |
| ஷை ராப்பர் பைண்டு | 1 | 0 |
| **கட்டுரை நூல்கள்** | | |
| மனித வாழ்க்கையும் காந்தியடிகளும் | 2 | 8 |
| பெண்ணின் பெருமை | 2 | 0 |
| தமிழ்த் தென்றல் | 2 | 0 |
| முருகன் அல்லது அழகு | 1 | 0 |
| இராமலிங்கர் திருவுள்ளம் | 1 | 0 |
| என்கடன் பணிசெய்து கிடப்பதே | 0 | 8 |
| சைவத்தின் சமரசம் | 0 | 8 |
| சைவத் திறவு | 0 | 8 |
| கடவுள் காட்சியும் தாயுமானாரும் | 0 | 4 |
| தமிழ் நூல்களில் பௌத்தம் | 0 | 4 |
| சீர்திருத்தம் | 0 | 8 |
| இமயமலை அல்லது தியானம் | 0 | 6 |
| நாயன்மார் | 0 | 8 |
| தமிழ்நாடும் நம்மாழ்வாரும் | 0 | 4 |
| மரணத்தின்பின் மனிதர் நிலை | 2 | 4 |
| அறிவுரைக் கொத்து | 2 | 4 |
| மூப் பெண்மணிகள் வரலாறு | 1 | 0 |
| தனித் தமிழ்க் கட்டுரைகள் | 1 | 4 |
| பன்னிரு கட்டுரை | 0 | 12 |
| கட்டுரைக் களஞ்சியம் | 0 | 12 |
| தமிழ்ப் புலவர் வரலாறு 3 பாகம் | 1 | 10 |
| திராவிடப் பிரகாசிகை | 4 | 0 |
| பாண்டிய மன்னர் சரித்திரம் | 1 | 2 |
| சோழ மன்னர் சரித்திரம் 3 பாகம் | 1 | 14 |
| புத்த சாத்திரம், பௌத்த தருமம், பௌத்த சங்கம் | 0 | 12 |
| விவேகானந்தர் சரித்திரம் 3 பாகம் | 7 | 0 |
| ராமகிருஷ்ண பரமஹம்சர் சரித்திரம் | 8 | 0 |
| ஷை யார் உபதேசம் | 2 | 0 |
| இந்து பாக சாஸ்திரம் | 1 | 4 |

இவையன்றி அந்தாதி, கலம்பகம், பிள்ளைத்தமிழ், கோவை, மாலை, சதகம் முதலியவைகளும் சங்கீதம், வைத்தியம், சோதிடம், சம்பந்தமான நூல்களும், பலவகை நாவல்களும் கிடைக்கும்.

208450


## ஜூலை மாதத்து சந்தா வசூல்

### வட ஆற்காடு ஜில்லா

| | | |
|---|---|---|
| **காஞ்சீ** | | |
| கிராமணி. M. வெங்கடசாமி அவர்கள் | 1 | 8 |
| **காக்காசம்பாளையம்** | | |
| ஜ். ப. சின்னசாமி அவர்கள் | 4 | 8 |
| ர. நாராயணசாமி அவர்கள் | 1 | 0 |
| ப. சுருட்டை அவர்கள் | 1 | 8 |
| **பூண்டி** | | |
| P. K. கடேச அவர்கள் | 1 | 0 |
| கு. சோலை அவர்கள் | 1 | 0 |
| சு. முனிகுட்டி அவர்கள் | 1 | 0 |
| ம. நாராயணசாமி அவர்கள் | 1 | 0 |
| **பழங்கோவில்** | | |
| ந. ராமச்சந்திர அவர்கள் | 1 | 0 |
| **தேவிகாபுரம்** | | |
| V. P. மன்னார் அவர்கள் | 1 | 8 |
| பேரூர். சாமிநாத அவர்கள் | 3 | 0 |
| N. P. லிங்கப்ப அவர்கள் | 8 | 0 |
| **நெடுங்குன்றம்** | | |
| P. இராமலிங்க அவர்கள் | 1 | 8 |
| **அம்மையப்பட்டு** | | |
| கு. ஐயாசாமி அவர்கள் | 1 | 8 |
| சு. சடையப்ப அவர்கள் | 1 | 8 |
| குண். முனிசாமி அவர்கள் | 1 | 8 |
| அ. க. அப்பாவு அவர்கள் | 1 | 8 |
| சு. பாலசுந்தர அவர்கள் | 1 | 8 |
| தி. மு. முத்தைய அவர்கள் | 1 | 8 |
| அ. கோ. பொன்னுசாமி அவர்கள் | 4 | 8 |
| வெ. அருணாசல அவர்கள் | 1 | 8 |
| சோ. [illegible]டேச அவர்கள் | 1 | 2 |
| **கீழ்க்கொடுங்காலூர்** | | |
| கோ. போ. முனிசாமி அவர்கள் | 3 | 0 |
| முத்து முனியப்ப அவர்கள் | 1 | 12 |
| கு சுப்புராய அவர்கள் | | |
| குமாரசாமி அவர்கள் | 1 | 8 |
| சு. பிச்சைலிங்க அவர்கள் | 1 | 8 |
| வ. சி. கந்தசாமி அவர்கள் | 1 | 8 |
| மு. வி மாணிக்க அவர்கள் | 1 | 4 |
| பொ. பொன்னம்பல அவர்கள் | 1 | 0 |
| ப பொ. முனிசாமி அவர்கள் | 1 | 12 |
| K. V. மாணிக்க அவர்கள் | 1 | 8 |
| பொ. இராஜு அவர்கள் | 0 | 8 |
| கொ. இராமலிங்க அவர்கள் | i | 8 |
| **கன்னிகாபுரம்** | | |
| சி. முருகேச அவர்கள் | 1 | 8 |
| **பொன்னூர்** | | |
| கு. கன்னியா அவர்கள் | 3 | 0 |
| அ. குமாரசாமி அவர்கள் | 1 | 8 |
| **தென்னாறு** | | |
| அ. சின்னசாமி அவர்கள் | 1 | 0 |
| **த. மடம்** | | |
| V. குழந்தைவேலு அவர்கள் | 2 | 0 |
| S. கடேச அவர்கள் | 1 | 8 |
| மு. ராமசாமி அவர்கள் | 1 | 0 |
| ரா. ஆறுமுக அவர்கள் | 1 | 0 |
| **புதூர்** | | |
| ந. ர. எதிராஜு அவர்கள் | 0 | 8 |
| நகரம். குமாரசாமி அவர்கள் | 1 | 8 |
| ஐ. ர. கோவிந்தராஜு அவர்கள் | 1 | 0 |
| **தண்ணைகம்பூண்டி** | | |
| கொ. தங்கவேல் அவர்கள் | 1 | 8 |
| **வேடால்** | | |
| எ. ஆறுமுக அவர்கள் | 1 | 8 |
| **சோக்கப்பெருவளூர்** | | |
| இராஜமன்னார் செட்டி | 2 | 0 |
| கு. துரைசாமி அவர்கள் | 1 | 0 |
| ம. அ. கிருஷ்ண அவர்கள் | 0 | 12 |
| மே. சு. முத்துவேல் அவர்கள் | 1 | 0 |

### தென்னாற்காடு ஜில்லா

| | | |
|---|---|---|
| **கல்லாலம்பூண்டி** | | |
| கு. து. வைத்திலிங்க அவர்கள் | 1 | 8 |
| **தென்பேர்** | | |
| அழக மாணிக்க அவர்கள் | 1 | 8 |
| கந்த. கோபால் அவர்கள் | 1 | 8 |
| **நெட்டப்பாக்கம்** | | |
| T. M. துரைசாமி அவர்கள் | 1 | 8 |
| சி. அய்யாசாமி அவர்கள் | 1 | 8 |
| **நல்லாற்றூர்** | | |
| ஆ சபாபதி அவர்கள் | 1 | 8 |
| புனுகு. மா. வைத்தியநாத அவர்கள் | 1 | 0 |
| **கதிர்காமம்** | | |
| உ. குழந்தைவேல் அவர்கள் | 0 | 8 |
| சி. கோ. நாராயணசாமி அவர்கள் | 1 | 8 |
| வே. இலட்சுமண அவர்கள் | 0 | 8 |
| புது. ஆ. வரதராஜு அவர்கள் | 1 | 8 |
| பொ. கோவிந்த அவர்கள் | 1 | 0 |

Regd. No. M. 15!

Senguntha Mithran

## ஜுலை மாத சந்தா வசூல் தொடர்ச்சி

### செல்வப்பெருமாள் பேட்டை

| | | |
|---|---|---|
| பொ. குருநாதஷு | 1 | 0 |
| தி. கு. ஆறுமுகஷு | 0 | 8 |
| ஏ. சி. சோமுஷு | 1 | 0 |
| பொ. பழமலைஷு | 0 | 8 |
| ச. சண்முகஷு | 0 | 8 |
| வே. அ. பழனிஷு | 0 | 8 |
| மா. முருகேசஷு | 1 | 0 |
| ரத்ன. மாணிக்கஷு | 0 | 8 |

### பெத்துசெட்டி பேட்டை

| | | |
|---|---|---|
| ச. தண்டபாணிஷு | 0 | 8 |
| ஆ. வேலாயுதஷு | 0 | 8 |
| மாணிக்க. தங்கவேல்ஷு | 1 | 0 |

### லாசுப்பேட்டை

| | | |
|---|---|---|
| ப. மா. தெய்வநாயகஷு | 1 | 0 |

### முத்தால்பேட்டை

| | | |
|---|---|---|
| தாண்டவ. நடேசஷு | 0 | 8 |
| ஆ. பொன்னுசாமிஷு | 1 | 0 |
| V. S. R. ரத்தினஷு | 1 | 8 |
| தில். பழனிசாமிஷு | 1 | 0 |
| ஆ. சி. சே. சின்னசாமிஷு | 1 | 8 |

### புதுவை

| | | |
|---|---|---|
| சிந். அண்ணாமலைஷு | 1 | 8 |
| அ. வ. ச. குப்புசாமிஷு | 1 | 8 |
| S. S. வரதராஜஷு | 1 | 8 |
| N. A. சின்னசாமிஷு | 1 | 8 |
| V. K. பழனிசாமிஷு | 1 | 8 |
| ஆ. முனிசாமிஷு | 1 | 8 |

### சண்முகபுரம்

| | | |
|---|---|---|
| மு. கிருஷ்ணசாமிஷு | 1 | 8 |

### செஞ்சிசெட்டி பாளையம்

| | | |
|---|---|---|
| மு. சண்முகஷு | 1 | 8 |

### நெல்லித்தோப்பு

| | | |
|---|---|---|
| T. வைத்தியநாதஷு | 1 | 8 |
| S. நரசிங்கஷு | 1 | 8 |

### திருக்கண்டீஸ்வரம்

| | | |
|---|---|---|
| T. P. தண்டபாணிஷு | 1 | 8 |
| தங். சுப்பராயஷு | 1 | 8 |
| ம. மு. ராமசாமிஷு | 1 | 0 |

### புதுவண்டிப் பாளையம்

| | | |
|---|---|---|
| ந. சி. நடராஜஷு | 1 | 8 |
| அ. முத்தையஷு | [illegible] | 8 |
| அ. சிவகுருநாதஷு | | 8 |

### பழையவண்டி பாளையம்

| | | |
|---|---|---|
| V. நடேசஷு | 0 | 8 |
| ந. ஆறுமுகஷு | 1 | 0 |

### புதுகேஸ் பேட்டை

| | | |
|---|---|---|
| ச. மாணிக்கஷு | 1 | 8 |
| மு. ராமசாமிஷு | 1 | 8 |

### திருப்பாப்புலியூர்

| | | |
|---|---|---|
| V. ஆறுமுகஷு | 3 | 0 |

### மேல்பட்டாம் பாக்கம்

| | | |
|---|---|---|
| க. அண்ணாமலைஷு | 1 | 8 |
| பொ. ரங்கசாமிஷு | 3 | 0 |

### சென்னப்ப நாய்க்கன் பாளையம்

| | | |
|---|---|---|
| [illegible]ஞகு. வி. பழனியப்பஷு | 1 | 8 |

### திருநாம நல்லூர்

| | | |
|---|---|---|
| [illegible] சுந்[illegible]ஷு | 1 | 8 |

### [illegible]ரூந்தூர்பேட்டை

| | | |
|---|---|---|
| [illegible]. வெங்கிடாசலஷு | 1 | 8 |
| மு. [illegible]காவிந்தசாமிஷு | 1 | 8 |

### கோணலவாடி

| | | |
|---|---|---|
| வை. ராமசாமிஷு | 1 | 8 |
| அ. குப்புசாமிஷு | 1 | 8 |
| கு. பொன்னுசாமிஷு | 1 | 8 |

### பரிக்கல்

| | | |
|---|---|---|
| அ. முருகேசஷு | 0 | 8 |
| தி. நாராயணசாமிஷு | 0 | 8 |

### சரவணப்பாக்கம்

| | | |
|---|---|---|
| அ. மொ. நாராயணஷு | 1 | 8 |
| மு. கதிர்வேல்ஷு | 3 | 0 |

## சேலம் ஜில்லா

### சேலம்—அம்மாபேட்டை

| | | |
|---|---|---|
| T. R. அருணாசலஷு | [illegible] | 8 |
| நா. மாணிக்கஷு | [illegible] | |

---

This Journal is published by T. N. Sabapathi Mudaliar for the South Indian Senguntha Mahajana Sangam, Madras, at 31, Armenian Street, Madras, and is printed by A. Rangaswamy at The Progress Printers, 2/17, Coral Merchant Street, Madras.